PERIODICALS DIVISION LIBRARY

விலை ரூபா 2-00 16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 தை 27 ஜமாஅவ் 29 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (9—2—86) இதழ் 363

## காரைநகரில் கடல்கண்ணிவெடி: கடற்படைக்கப்பல்சேதம் புலிகள் உரிமைகோரிஅறிக்கை

[யாழ்ப்பாணம்]

காரைநகர் கடற்படை முகாமுக்கும், கடற் கோட்டைக்கும், இடையேயுள்ள கடற்பகுதியில் தமது போராளிகளால் நேற்றுமுன்தினம் 7ம் திகதி காலை வைக்கப்பட்ட கண்ணிவெடிக்கு, 7 கடற்படை வீரருடன்சென்ற நவீன இயந்திரத் துப்பாக்கிப்படகு கடும் சேதத்துக்குள்ளானதுஎன்று தமிழீழ [13-ம்பக்கம்பார்க்க]

● பரந்தனில் மீண்டும் பதட்டம்

# அறுவடை செய்த நெல் ராணுவத்தால் அபகரிப்பு

## பலர் கைது; பீதியால் விவசாயிகள் வெளியேற்றம்!

(நமது கிளிநொச்சி, பரந்தன் நிருபர்கள்)

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து சென்ற இராணுவத்தினர் பரந்தன் பகுதியிலுள்ள நெற் கமங்கள் ஒன்றில் அறுவடை செய்யப்பட்ட மூந்நூறுக்கும் மேற்பட்ட [illegible] ன, பத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளைக் கைது செய்து இராணு வமுகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

நேற்று அதிகாலை முதல் பரந்தன் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றில் பதுங்கி மறைந்திருந்தாகக் கூறப்படும் இராணுவத்தினர் தாம் முற்றுகையிட்ட 40 ஏக்கர் கொண்ட வயலில் இரவு முழுவதும் சூடடிக்கப்பட்டு மூட்டையாக்கப் பட்ட நெல் அனைத்தையும் துப்பாக்கி முனையில் கைப்பற்றினராம். கைப்பற்றப் ட்ட நெல்மூடைகளும் கைதுசெய்யப் ட்டவர்களும் ஒரு உழவு யந்திரமூலம் நான்கு தடவைகள் இராணுவ முகாமுக்கு ஏற்றி இறக்கப்பட்டனர்.

### மீண்டும் வந்தனர்

இச்சம்பவத்தை அடுத்து இப்பிரதேச விவசாயிகள் மத்தியில் பெரும் பதற்றம் உருவாகியிருந்த சூழலில், நேற்று நள்ளிரவு மீண்டும் கறுப்புச் சீருடைகளில் வந்த இராணுவத்தின் இன்னொரு பிரிவினர் பரந்தன் சந்தியின் வீதி ஓரங்களில் துப்பாக்கிகளால் குறி பார்த்தபடி படுத்திருந்தனராம் இவர்கள் தீர்த்த துப்பாக்கி வேட்டுக்களினால் நீர் பாச்சிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தரான அ. மகேந்திரம் என்பவர் ஸ்தலத்திலேயேபலியானார்.

இதேவேளையில், நேற்று முன்தினம் நண்பகல், பகல் ரோந்துசேவையில், பதினெட்டுக்கவச வாகனங்கள் சகிதம் ஈடுபட்டிருந்த ஆயுதப்படையி [13-ம் பக்கம் பார்க்க]

## ராணுவத்தினரின் சூட்டுக்கு மூவர் பலி!

[வவனியா]

வவனியா தாண்டிக்குளம் வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவர் சிவிலுடையில் ரோந்துசென்ற இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானர் (16-ம் பக்கம் பார்க்க)

## பிலிப்பைன்ஸ் தேர்தல் திருமதி அக்கினோ முன்னணியில்!

[மணிலா]

பிலிப்பைன்ஸில் நேற்றுமுன்தினம் நடத்த ஜனதிபத் தேர்தலில் எதிர்க்கட்சி வேட் [13-ம் பக்கம் பார்க்க]

## கல்மடு' தர்மபுரம்: ஆயிரக்கணக்கில்விவசாயிகள் இடம்பெயர்வு

(கிளிநொச்சி நிருபர்)

கல்மடுச் சம்பவத்தின்போது விஸ்வமடுப் பகுதியில் இடம் பெற்ற ஆகாயத்தாக்குதலால் சுமார் மூவாயிரம் விவசாயிகள் தமது சொந்தஇடங்களைவிட்டு இடம்பெயர்ந்தனர் என்றும் இவர்கள் பாதுகாப்புக்கருதி உடையார் கட்டுப்பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்றதாகவும் விஸ்வமடு நிலைமைகளை நேரில் அறியச் சென்ற நமது நிருபரிடம் இப்பகுதி பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

விஸ்வமடுப் பகுதி மிகவும் சோபை இழந்து ப ற்ற நிலையில் உள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் மிகக்குறைந்த தொகையினரே விஸ்வமடு திரும்பி உள்ளனர். (13-ம் பக்கம் பார்க்க)

## கணேசு'வின்பூதவுடல்:, இன்று அஞ்சலி நாளை தகனம்

(மட்டக்களப்பு)

கடந்த 6ம் திகதி தமிழகத்தில் காலமான பட்டிருப்புத் தொகுதியின் முன்னை எம். [16ம் பக்கம் பார்க்க]

## ''இலங்கை அதிகாரிகளின் போக்கு தீர்வுக்குத் தடையாகவுள்ளது''

### வாஷிங்டனில் இந்திய அமைச்சர் பகத்

[வாஷிங்டன்]

''இலங்கையின் இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படுமுன் இராணுவத் தீர்வொன்று காணப்படவேண்டும் என இலங்கை அதிகாரிகள் வலியுறுத்தி வருவது சமாதான முயற்சிகளுக்குத் தடையாக உள்ளது இப் பிரச்னையில் அமெரிக்கா தலையிட விரும்பவில்லை. ஆயினும் இந்தியா எடுக்கும் சகல முயற்சிகளுக்கும் முழு ஆதரவு அளிப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.''

அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டிருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பகத் வாஷிங்டனில் பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது மேற் கண்டவாறு கூறினர்.

இதனிடையே வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் ஒரேதாயகத்தில் மீண்டும் ஒன்று சேர வேண்டுமென்பதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் விருப்பமே தவிர வடக்குக் கிழக்குப் 13ம் பக்கம் பார்க்க]

## ''அப்பாவிகளை இம்சிக்கும் அவர்களும் பயங்கரவாதிகளே!''

### வவனியா விஹாராதிபதி கூறுகிறார்

[வவனியா]

''அப்பாவித் தமிழ்மக்களுக்குப் பெரும்பான்மை இனத்தவர்கள் ஏதேனும் துன்பம் விளைவிப்பார்களானல் அவர்களையும் நாம் பயங்கரவாதிகளாகவே கருதுகிறோம். பிரச்னைகளின் போது ஒன்றுமறியாத அப்பாவிகளைச் சம்பந்தப்படுத்திப் பலிக்கடாக்களாக்குவதை அனுமதிக்கமுடியாது'' என்று வவனியா கண்டிவீதி பௌத்த விஹாரையில் நடைபெற்ற பத்திரிகையாளர் கூட்டத்தின் போது மேற்படி விஹாராதிபதி வண. சீயம்பலகஸவ விமலசாரதேரோ தெரிவித்தார்.

(13ம் பக்கம் பார்க்க)

## தொடருகின்ற கடத்தல்கள்

[யாழ்ப்பாணம்]

'செல்லப்பா அன்கோ உரிமையாளரும், சிவகடாட்சம் உரிமையாளரும் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக யாழ் வர்த்தகசங்கத்திற்கு நேற்றுபுகார் செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் சேவையுடன் தொடர்புள்ள மற்றொரு வர்த்தகரும், இனந்தெரியாத நபர்களினல் கடத்தப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது

[க]

# பேச்சுவார்த்தைகளை மீண்டும் துவங்க இந்தியாவின் தயவை இலங்கை நாடுகிறது

## டிக்ஸிற் மூலம் ஜே. ஆர். தகவல்

[கொழும்பு]

தமிழர் விடுதலைக்கூட்டணி சமர்ப்பித்த ஆலோசனைகளைப் பொறுத்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டினில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டதாகத் தெரியவில்லையெனினும், இலங்கையரசு மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் துவங்க இந்திய அரசின் தயவை நாடியதாகத் தெரிகிறது.

ஜனதிபதி ஜெயவர்த்தனவுடம் அவரது ஆலோசகர்களும் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. டி. என். டிக்ஸிற் வாயிலாக பேச்சுவார்த்தைகளை மீண்டும் துவங்கும் விடயம் குறித்து இந்திய அரசுடன் தொடர்புகொண்டுள்ள [illegible] ரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதற்கிடையில் தற்போது மாலைதீவில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப்பிரதமர் திரு ராஜீவ்காந்தியைச் சந்திக்க தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியை அனுப்பி வைக்கலாமெனவும் மேற்படி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் முன்னர் ஓமானில்உத்தியோகபூர்வவிஜயம் மேற்கொண்டிருந்தவேளையிலும் ஜனதிபதி ஜயவர்த்தன திரு. ராஜீவ் காந்தியைச் சந்திக்க அமைச்சர் அத்துலத் முதலியை அனுப்பியமையும் அச்சந்திப்பு தோல்வியில்முடிந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனல், இலங்கையில் தமிழர்களுக்கு, குறிப்பாக மலையகத் தமிழர்களுக்கு எதிராக [13ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள A35 கார் 2 Sri 3000 தொடர் இலக்கம். உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்;ஏரம்பு தவசோதி, 131/1 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [C622]

''லான்மாஸ்ரர் பெட்டி'' உடன்விற்பனைக்கு. விபரங்களுக்கு: செல்லர்-கருணாகரன், சுதுமலை கிழக்கு, அரசடி ஒழுங்கை, புளியிட்டி, சுதுமலை. (C625)

நெல்லை க. பேரனின் முதற் பரிசுபெற்ற ''விமானங்கள் மீண்டும் வரும்'' குறுநாவல் இப்போது யாழ்ப்பாணத்தில் சகல புத்தகக் கடைகளிலும் விற்பனையாகிறது. பிரதி ரூ. 9-50 சதம் மட்டும். (C 459)

தச்சன்தோப்பு சந்தி கிராம சபைக்கு முன்பாக 12 பரப்புக் காணிவீட்டுடன் உடன்விற்பனைக்குண்டு. துண்டுகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். க.முத்தையா, தச்சன்தோப்பு, கைதடி. [C629]

கல்வியங்காடு புதுச்செம் மணி வீதியில் எட்டுஅறைகளும், மூன்று விருந்தையும் மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்குண்டு. விலை சகாயம். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. C-569, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C-569

ஹொண்டா C 50, மோட்டார் சைக்கிள் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவா,6/1, மணிக்கூண்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (C 645)

Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் 11-ம் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். தொடர்பு: சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 655)

Lister Generator 10 K. W. and Lister Engine H.P. 7.2. R P M. 1500 இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23724. (C 640)

ஹொண்டா (Honda) ஜெனரேட்டர் 1500 வாட்ஸ் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சொனிக்ஸ் மினிசினிமா, 95, யாழ் வீதி, மானிப்பாய். (C 606)

வெளிநாடு செல்லும் டாக்டர் ஒருவரின் வீட்டுத் தளபாடங்கள், Writing table, மேசைகள், கட்டில்கள், Hoover floor polishers, Sanyo மின் விசிறிகள், Pyrex வெளிநாட்டு கிளாஸ் வகைகள், வெளிநாட்டு சாய்வு நாற்காலிகள், ரெக்கோட் பிளேயர், கம்பளங்கள், துணிவகைகள், மற்றும் பல பொருட்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பத்மநாதன், C/o அம்பலவாணர், ஆடியபாதம் ரோட். திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக்கல்லூரிக்கும் இடையில். (C 607)

## விற்பனைக்கு

மானிப்பாய் தெற்கில் சற்சதுரமான 2 பரப்புக்காணி 3 அறைக்குரிய அத்திபாரமும், வடக்கு வாசல் நிலையமும், கிணறு சரி அரைவாசிப் பங்குடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கே. ஆர். பாலசுப்பிரமணியம், மானிப்பாய் தெற்கு. C 661

நல்ல நிலையிலுள்ள A 50 கார் கறுப்பு நிறம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: மரியநாயகம் ஸ்ரோர்ஸ், 55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். C 656

தரமான, சுவையான புழுக்கொடியல், ஒடியல், ஒடியல்மா, புழுக்கொடியல்மா, ஒடியல் சீவல் விற்பனைக்குண்டு சுகாதாரமுறைப்படி 'பைக்கட்'களில் அடைக்கப்பட்டு விற்பனையாகிறது. கிலோவுக்குரிய விலையைக் குறித்து எம்முடன் தொடர்புகொள்ளவும். மரியாள் மகளிர் மன்றம்: எழுவைதீவு (C620)

## தேவை

பெண்களுக்கான சைக்கிள் தேவை. தொடர்பு: சாதாஸ் மோட்டேர்ஸ், 56/2, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம் [இலங்கைவங்கிக்கு அருகாமையில்[. [C654

கயிறு திரிக்கக்கூடிய மிகவும் அனுபவம் உள்ளவர்கள் தொழிலகத்தில் வந்து சந்திக்கவும் தொடர்பு: காக்கைதீவு கயிறு தொழிலகம், அராலி ரோட், யாழ்ப்பாணம். [C 646]

வீடு/Annexe தேவை. சுண்டுக்குளி, கச்சேரி-நல்லூர்வீதி, நாவலர்வீதிஅல்லதுஅண்மித்த பகுதிகள் விரும்பப்படும். dyn ads, 476, பிரதானவீதி, சுண்டுக்குளி. (A 206)

கைக்கடிகாரம் மேசைமணிக்கூடுகள் திருத்துவதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. சம்பள விபரம் நேரில் தொடர்புகொள்ளவும். தேவன் வோர்ச் வேக்ஸ், பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம். C-547

அலுமினியப் பாத்திரம் போடுபவர், உதவியாளர், பயிலுனர் தேவை. நேரில் வரவும். தொடர்பு: பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C605)

யாழ். நகரில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் பின்வரும் தொழில்களுக்கு ஆட்கள் தேவை. 1] பேக்கரிவேலை, [2] சமையல் பகுதி கையுதவி, [3]சப்ளையர்கள் உடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. A208, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். [A208]

பயிற்றப்பட்ட தாதியர்கள் (Nurses) உடனடியாகத் தேவை. அனுபவம், தராதரத்திற்கேற்ப வேதனம் வழங்கப்படும் விண்ணப்ப முகவரி, Dr.K.E. சந்திரபால், நெல்லியடி கிளினிக். கரவெட்டி. [C 483]

## தேவை

ரபர் ஸ்டாம்பு தயாரிப்பில் சகல பகுதிகளையும் தனித்து செய்யக்கூடிய ஒருவரும், பயிற்சியாளர்களும் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: ஏகாம்பரநாதன், 180, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [C589)

லேத்வேலைக்கு நன்கு அனுபவமுள்ள ஒருவர்தெல்லிப்பழையில் உள்ள தொழிற்சாலைக்கு தேவை. தொழிற்சாலையில் இருந்து 5 மைல் சுற்றுடலில் உள்ளவர் விரும்பத்தக்கது. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும். சம்பளம்:2,000/-வும் அதற்குமேல். தொடர்பு கொள்ளவேண்டிய இடம்: டயானி எலெக்றிக்கல்ஸ். 222, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [C 639]

யாழ். நகரில் பிரபல்யமான வர்த்தகஸ்தாபனத்திற்கு ஆங்கில தட்டெழுத்தாளர் ஒருவர் தேவை A/C வேலையும் தெரிந்தவராக இருக்கவேண்டும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல, A 200 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [A 200]

## வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ அன்ட் ரீ. வி., மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங், புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. கட்டணம் மிகக் குறைவு. சான்றிதழ் பெறுமதியானது. தொடர்பு:-VispaEngineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 578

E. C. E.-I (London) 87 15-02-1986 ஆரம்பமாகின்றன. E. C. E.-II (London) 86/87, Draughtsmanship, Quantity Surveying [City and Guilds] நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நேரில் வந்து தொடர்புகொள்ளவும்: அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [C 458]

(1) City and Guilds of London Institute Part II-1987 [2] மோட்டார் றீவைண்டிங். [3] வயறிங் ஆகிய வகுப்புக்கள் 01-03-86 ஆரம்பமாகிறது. ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்கு எதிரில்] [C 642]

## கல்வி

க. பொ. த. [உயர்] 88 கலை, வர்த்தக மாணவர்களுக்கு புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 14-02-1986. தரம் 10 பரீட்சை முடிவு வரும் வரை கல்வி இலவசம் Modern Education Centre, Karaveddy [C 592]

G.C,E.[O/L) இல் கட்டாய பாடமாகிய கணிதம் 17வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேடசித்திக்கு நுணுக்கமான முறையில் வீடுகளிற்சென்று கற்பிக்கப்படும். மற்றும் G.C E(O/L] [A/L] சகலபாடங்களும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் வீடுகளிற்சென்றுகற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி, or 252, ரூபன் ஸ்ரோர், நாவலர் ரோட், யாழ்ப்பாணம். [C 632]

## மணப்பந்தல்

உயர்குல வேளாள 36 வயதுடைய இந்துப் பெண்ணுக்கு மணமகன் தேவை. உயரம் 5' 3'' 8ல் செவ்வாய். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். முழு விபரமும், சாதகக்குறிப்பும் அனுப்பிவைக்கவும். விளம்பர இல. C 641, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 641[

இந்து வேளாள நடுத்தர வயதுடைய தாரமிழந்த கணக்காளர் பதவி வகிக்கும் மணமகனுக்கு 36-45 வயதுக்கு இடைப்பட்ட படித்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படுகிறது. முழுவிபரங்களுடனும், சாதகக்குறிப்புடனும் தொடர்புகொள்க:விளம்பர இல. C 489, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.[C 489'

யாழ். வடமராட்சி இந்து உயர்குல வேளாள பெற்றோர் தங்கள் 33 வயது அழகான பயிற்றப்பட்ட கணித ஆசிரிய மகளுக்கு தகுந்த மணமகன் தேடுகிறார்கள். அரசாங்க கூட்டுத்தாபன அல்லது வங்கி சேவையிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது. வீடுவளவு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும். முழுவிபரங்களுடன் சாதகக் குறிப்பையும் அனுப்பவும். விளம்பர இல. C 638, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C638)

## தவறிவிட்டது

660112014V இலக்கமுடைய ந. நகுலானந்தராசாவின் தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலையில் ஒப்படைக்கும்படி மிகவும் நன்றியுடன் கேட்டுக்கொள்கின்றோம். C 647,

கந்தையா ஐயாக்குட்டி, முகாமையாளர், நெடுந்தீவு மேற்கு என்னும் எனது அடையாளஅட்டையும் முக்கியமான தஸ்தாவேஸ்த்துக்களும் யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பிவையுங்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C 643]

### யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் பிரதான வீதியில் அமைந்துள்ள ரவுண் சொப்கிளையில் தளபாட உபகரணங்கள்

### ஏலவிற்பனை

இடம்: பிரதான வீதி
காலம்; 16 - 2 - 86
நேரம்: காலை 10-00 மணி தொடக்கம் பிற்பகல் 3-00 மணி வரை

பொருட்கள்: பிடவைக் கடை காட்சிப்படுத்தும் தேக்குமரத்திலான கண்ணாடி அலுமாரிகள், கந்தோர் பாவிப்புக்கான முதிரை மேசைகள், கதிரைகள், முக்காலிகள், கடைகளுக்குத் தேவையான விறாக்கிகள், பட்டடைகள் ஆகியவை நல்ல நிலையில் விற்பனை செய்யப்படும்.

பொதுமுகாமையாளர்.
217, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
06 - 02 - 86. A 127

### வலி - கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### கேள்வி விண்ணப்பம்

15 - 02 - 86 ம் திகதி தொடக்கம் சிவப்பு நீட்டு நெல் ஏச் 4, 34/6 சிவப்பு ஆகிய இனநெல் வகைகளை எமது சங்கத்திற்குக் கொண்டு வந்து ஒப்படைக்கக்கூடியவர்கள் எம்முடன் சங்கக் காரியாலய நேரத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

வாரந்தோறும் குத்தரிசி, குத்துப் பச்சையரிசி ஆகியனவற்றை சங்கத்தில் கொண்டு வந்து ஒப்படைக்கக்கூடியவர்கள் நேரடியாகத் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

தரமான உழுந்து சங்கத்திற்குக் கொண்டுவந்து விநியோகிக்கக்கூடியவர்களும் தமது விண்ணப்பங்களை நேரடியாகத் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்களைத் தலைமைக் கந்தோரில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்.
நீர்வேலி,
1986 - 02 - 06 A 213

### SCIENCE CENTRE Karaveddy

க. பொ. த. (உயர்தரம்) 1988 தரம் II
க. பொ. த. (சாதாரணம்) 1986 டிசம்பர்
[பகல் நேர வகுப்புக்கள்]
ஆரம்பம்: 12-02-1986
12-15 மணிக்கு

C-594

### வார இறுதி வகுப்பு

PHARMACIST [External] EXAMINATION 86/87, [Ceylon Medical College Council Registration]

எதிர்வரும் 23-02-1986 ஆரம்பமாக உள்ளது

Dr. SIVAGNANAPANDITHAN
(Chief Lecturer in Pharmacist College, Colombo]
Mrs. V M. KUHANANDA
(Chief Pharmacist. General Hospital, Colombo)
Mr S SIV KUMAR
(Lecturer in Pharmacist College, Colombo)

ஆகியோர்களால் விரிவுரைகள் நடாத்தப்படும் செய்முறைகள் சகல வசதிகளையும் கொண்டுள்ளது. 15-02-1986க்கு முன் நேரில்வந்து தவணைக்கட்டணம் 400/-ம், அனுமதிக்கட்டணம் 100/-ம் செலுத்தி பதிவுசெய்துகொள்ளவும்.

அதிபர்,
உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
[C 602]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1983 இனக்கலவரத்தின் பின்னர்

# 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை!

### அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் தரும் விளக்கம்

[ஐ சண்முகலிங்கம்]

''1983 ப் ஆண்டு யூன்மாதத்தில் இன வன்செயல்கள் வெடித்ததிலிருந்து மிகக் குறைந்த மதிப்பீட்டின் படி நாலாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் உயிர் இழந்திருப்பர். இவர்களுள் இரண்டாயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் தாமே தமது குடும்பத்தைப் பராமரிப்பவர்களாக இருந்துள்ளவர்கள்.''

இவ்வாறு, அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''பாதிக்கப்பட்டுள்ளோர்களில் பாதித் தொகையினரின் தகவல்களே சேகரிக்கக்கூடியதாக இருந்தன. முழுத்தகவல்களையும், எப்பொழுதாவது திரட்ட முடியுமோ என்பதும் ஐயமே.

''1983ம் ஆண்டு ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்ட அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் சென்ற 1985ம் வருடம் மட்டும் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்காக (1, 21, 162, 407-41) ஒரு கோடியே இருபத்தொரு லட்சத்துக்கு அறுபத்திரெண்டாயிரத்து நானூற்றி ஏழு ரூபா நாற்பத்தொரு சதத்தை செலவு செய்துள்ளது ஒருவர் இறந்தால் உடனடியாக ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. இதேபோன்று காயமடைந்தவர்களுக்கு முன்னூறு ரூபா வழங்கப்படுகிறது.

''ஒரு குடும்பத்திற்கு மறுவாழ்வு அளிக்க ரூபா பதினைந்தாயிரத்திலிருந்து இருபதினாயிரம் ரூபா வரை தேவைப்படுகிறது.

''புனர்வாழ்வுக்காக மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள மனித நலநாட்டமுள்ள நிதி நிறுவனங்களினுல் வழங்கப்பட்ட நிதியினுல் இதுவரை இருநூறு குடும்பங்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. மேற்கு நாட்டு மக்களின் கொடையில் மட்டும் நாம் தங்கியிருப்பது சரியல்ல எமது நெறிகள் எமக்குப் போதிக்கும் தத்துவங்களின் படி நாமும் வாழ்ந்து ஏழைகளின் வாழ்வுக்கும் உதவவேண்டும்.'' [ஐ]

## ஜனவரியில் 16 தமிழர்கள் பலியானுர்கள்

(யாழ்ப்பாணம்)

1986 ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மட்டும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தினரின் தாக்குதலால் பதினுறு தமிழர்கள் இறந்துள்ளனர், என அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி இறந்தவர்கள் நேரடியான துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்ததை விட ஷெக்கட் தாக்குதலினுல் 'செல்' பட்டு இறந்தவர்களே அதிகமானுேராவர். காயப்பட்டவர்கள் நூற்றுக்கு அதிகமானவர்களாவர், காயம் ஏற்பட்டதால் நிரந்தர ஊனமடைந்தவர்கள் பலர் உள்ளனர்.

## சிவசுப்பிரமணியம் அஞ்சலிக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முன்னுள் உயர் நீதிமன்ற நீதியரசரும், நாவலர் சபையின் தலைவருமான திரு வீ. சிவசுப்பிரமணியம் அவர்களின் மறைவு குறித்து ஸ்ரீ ஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை நான்கு மணிக்கு நாவலர் கலாசாரமண்டபத்தில் அஞ்சலிக் கூட்டமொன்றை நடாத்துகிறது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், பேராசிரியர் கு. நேசையா, சட்டத்தரணி எஸ் ஆர். கனகநாயகம், புலவர் நா. சிவபாதசுந்தரனுர், திரு. க. சிவராமலிங்கம், பனம்பொருள் அபிவிருத்திச் சபை தலைவர் திரு. க. நடராசா, பேராசிரியர் அ. சண்முகதாஸ் உட்படப் பலர் உரையாற்றுவார்கள்.

இவ் வைபவத்தின் போது நாவலர் சபை சார்பில் அமரர் சிவசுப்பிரமணியம் நினைவு மலரும் வெளியிடப்படும். [ஐ]

## தாக்குதல் முயற்சியில் பலியானுர்.

(யாழ்ப்பாணம்)

''தனது சொந்த முயற்சியால் 'ஷெக்கட்'டை தானுகவே தனித்து உருவாக்கிஅதை பரீட்சித்து வெற்றி கண்ட தோழர் அன்ரனி ஆட்டிஸ்ட் (சிறி) நேற்று முன்தினம் தாக்குதல் முயற்சி ஒன்றை மேற்கொண்ட சமயம் தவறுதலாக வெடித்ததால் ஸ்தலத்திலேயே பலியானுர்.''

இவ்வாறு தமிழீழ விடுதலை இராணுவம், (ரெலா) ஷெக்கட்தாக்குதல் முயற்சியில் பலியான தமது தோழரின் அஞ்சலி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## கொள்ளையரின் கைவரிசை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 156ம் கட்டையில் உள்ள விவேகானந்த நகரில் இரவுவேளையில் ஆயுதம் தரித்த எட்டுப் பேர் வீட்டில் இருந்தவர்களைத் துப்பாக்கிமுனையில் பணயம் வைத்து ஆறுபவுண் தங்க நகை, தொலைகாட்சிப்பெட்டி கசட் றேடியோ, மற்றும் பல பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

பெருமாள் சக்திவேல் என்பவரது வீட்டிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றது. கொள்ளையர்கள் சிங்களத்தில் கதைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## மின் இணைப்பை துண்டித்து வயர்கள் தீக்கிரை!

(சுண்டுக்குளி)

யாழ். அபிவிருத்திச் சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட ஒரு கிராமத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் சென்றிருந்த ஆனைக்கோட்டை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ். மகாதேவாவும், அவ்வலுவலக ஊழியர்களும் அப்பகுதியில் சட்டவிரோத மின் இணைப்புச் செய்து மின்சாரம் பெற்று வந்த அநேகமானவரின் மின் இணைப்பு துண்டித்ததுடன் பெருந் தொகையான மின் வயர்களையும் கைப்பற்றி அவ் இடத்திலுள்ள சந்தை ஒன்றின் முன்பாக தீயிட்டுக் கொழுத்தினர்.

ஆனைக்கோட்டை உப அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கானமின்விநியோகம்பற்றி திரு. மகாதேவா கருத்து வெளியிடுகையில், நவாலி உப மின் நிலையத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு தாம் மின்சாரம் வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும், சட்ட விரோத மின்பாவனையால் மின்மாற்றிகள் செயலிழந்து விடுவதுடன் நிரந்தர மின்சாரம் பெறுபவர்களும் பாதிக்கப்படுகிறுர்கள் என்றும். இதற்கு பொதுமக்களும் தம்முடன் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கோரினுர்.

## "சிறுவியாதிகளுக்கு வீட்டு வைத்தியமே நல்லது"

### டாக்டர் கூறும் யோசனை

[யாழ்ப்பாணம்]

''மக்கள் இருமல், காய்ச்சல் சிறு சிறு வியாதிகளுக்கெல்லாம் வைத்தியசாலைகளுக்குப் போகக் கூடாது. இவற்றுக்கெல்லாம் வீட்டுவைத்தியங்களையே மேற்கொள்ளலாம். வீட்டுவைத்தியத்துக்குக் குணமாகாத பட்சத்தில் மாத்திரமே வைத்தியசாலைகளுக்குச் செல்லவேண்டும் இதன்மூலம் வைத்தியசாலைகளிலுள்ள நெருக்கடிகளைக்குறைக்கலாம்.

இவ்வாறு டாக்டர். சிவானந்தராஜா, ஆனைக்கோட்டையில் ஆரம்பவைத்திய நிலையமொன்றை கடந்த சனிக்கிழமை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்: ''முறைப்படியான சுகாதார முறைகள் மேற்கொள்ளப்படின் பல நோய்களைத் தடுக்கலாம். ஆயினும் பெரும்பாலான மக்கள் சாதாரண சுகாதாரவிதிகளைத் தானும் மேற்கொள்வதில்லை என்றுர்.''

அவர் தமதுரையில், இரத்தப் பெருக்கைத் தடுக்கும் முறைகள், செயற்கை சுவாசமளித்தல் போன்றவற்றை விளக்கிக் கூறினுர்.

## "கண்ணிவெடி தாக்குதலில் மூன்று இராணுவவீரர் பலி"

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வவனியா - மன்னுர் வீதியில் இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலுக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப்பிரிவான [பி. எல். ஏ.] மக்கள் விடுதலைப்படையே பொறுப்பென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த 6 ம் திகதி மு. ப தேடுதல் வேட்டையை முடித்துவிட்டு 6 ம் கட்டை என்னுமிடத்தில் நடை பவனியாக வந்த இராணுவத்தினர் மீது இக் கண்ணி வெடித்தாக்குதல் நடைபெற்றது. இத்தாக்குதலின்போது அரச படையினர் தரப்பில் மூன்று பேர் பலியானுர்கள். நான்கு பேர் படுகாயமடைந்தார்கள் போராளிகளின் தரப்பில் எதுவித சேதமுமில்லை இச்சம்பவம் நடைபெற்றவுடன் விமானப் படையினர் ஹெலிகொப்டரில் இருந்து இரு மணித்தியாலங்களாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன் போது ஒரு பொது மகன் பலியானுர் இவ்வாறு மேற்படி இயக்கத்தின் அறிக்கையில் கூறினுர்கள்

## விசுவமடு மக்கள் பரிதாபம்

(கிளிநொச்சி)

கல்மடுச் சம்பவத்தின் போது இடம் பெற்ற விமானத்தாக்குதலின்போது சுமார் 3000 விவசாயிகளான விசுவமடுவாசிகள் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு முதலான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர்.

விசுவமடுவிலும் சரமாரியான ஆகாயத் தாக்குதல் இடம் பெற்ற போது மக்கள் பாதுகாப்புத் தேடிக் கால்போன போக்கில் ஓடினுர்கள். இச்சம்பவத்தை அடுத்து நடந்த சில நாட்களாக பதற்றம் தென்பட்டது. அச்சத்தின் காரணமாக இடம் பெயர்ந்த பொதுமக்கள் குறைந்த அளவிலே விசுவமடு திரும்பியுள்ளனர். இதேநிலை தர்மபுரத்திலும் நிலவுகிறது.

## கொள்ளையரின் அட்டகாசம் மீண்டும் தலைதூக்கியுள்ளது?

(யாழ்ப்பாணம்)

யாழ். நகருக்கு அண்மையிலுள்ள கல்லுண்டாய் வெளியில் வழிபறிக் கொள்ளைக் கோஷ்டியினரின் அட்டகாசம் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

இக்கோஷ்டியினர் அவ்வீதியில் செல்லும் வாகனங்களைத் துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தி தமது திட்டம் பலிக்காத பட்சத்தில் சாட்டொன்றைக்கூறி இராணுவம் வருகிறதா? என்று வினவிவிட்டு வாகனங்களைச் செல்வதற்கு அனுமதிப்பார்களாம்.

வாகனத்தில் ஒருவர் அல்லது இருவர் இருந்தால் அவர்களைப்பயமுறுத்தியோ அல்லது தாக்கி விட்டோ உடமைகளை அபகரித்துக்கொண்டு செல்கிறுர்களாம்.

அண்மையில் இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரிடமிருந்தும், தனிமையில் காரோட்டிக்கொண்டு சென்ற ஒருவரிடமிருந்தும் இக்கோஷ்டியினர் துப்பாக்கியாலும் கைகளாலும் தாக்கியும் பற்களால் கடித்துக்காயப்படுத்தியும் பொருட்களைச் சூறையாடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் காரைநகரைச் சேர்ந்தவர்கள். இவ்விருவரிடமிருந்து மோதிரம், கைக்கடிகாரம், ரொக்கப் பணம் ஆகியனகொள்ளை அடிக்கப்பட்டுள்ளன. காரில் சென்றவர் மூளாயைச் சேர்ந்தவர். இவர் யாழ் நகரில் உள்ள தமது கடையைப் பூட்டிவிட்டு வீடு நோக்கிச் சென்றபோது, கல்லுண்டாய் வயிரவர் கோவிலுக்கு அண்மையில உள்ள மதகடியில் துப்பாக்கி ஏந்திய நான்கு நபர்கள் காரைத் தடுத்து நிறுத்தி அவரை விசாரணை செய்தபின் காருக்கு வெளியே இழுத்து அவர் அணிந்திருந்த இரு மோதிரங்களையும் பற்களால் கடித்து எடுக்க முயன்றபோது கைகலப்பு ஏற்பட்டட்டதாகவும், பின்னர் குறிப்பிட்ட தூரம் வரை இழுபறிப்பட்டுக் கொண்டு சென்றதாகவும் கார் உரிமையாளர் அவலக்குரல் எழுப்பவே, தாம்வைத்திருந்த துப்பாக்கியால் பலமாகத் தாக்கி விட்டு கைக்கடிகாரத்தை அபகரித்துக் கொண்டு நால்வரும் தலைமறைவாகி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## "கணேசலிங்கம் மறைவு பேரிழப்பு!" நீலன் அனுதாபம்

(கொழும்பு)

'தமிழீழத்தின் இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் தமிழ் மக்களின் குறிப்பாக, கிழக்கு மாகாண மக்களின் அரசியல் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கு சகல வழிகளிலும் பாடுபட்ட திரு. வி கணேசலிங்கத்தின் மறைவு பேரிழப்பாகும்.'

இவ்வாறு கலாநிதி நீலன் திருச்செல்வம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு ஜே என். டிக்ஸிற், கணேசலிங்கம் குடும்பத்தினருக்கு தமது அனுதாபத்தைத் தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

இதற்கிடையே அமரர் கணேசலிங்கத்தின் பூதவுடல் மட்டக்களப்புக்கு கொண்டு செல்லப்பட்டு தகனக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை நடைபெறும்

## திடீர் பரபரப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு அண்மையில் நேற்று முன்தினம் ரோந்து சென்ற பொலிசாரின் துப்பாக்கி ஒன்று தற்செயலாக வெடித்ததால், மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடத்தொடங்கினர்.

தெய்வாதீனமாக பொது மக்கள் எவருக்கும் காயமேற்படவில்லை (மா)

## வழிபடச்சென்ற பெண்ணின் சங்கிலி அபகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித் தெரு ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமிகோவிலுக்கு கடந்த வெள்ளிக்கிழமை வழிபடச் சென்ற பெண் ஒருவரின் சங்கிலி நபரொருவரால் அபகரிக்கப்பட்டது

வழிபட்ட பின்னர் புறக்கோட்டை பஸ் நிலையத்தில் வீடு திரும்புவதற்கு நிற்கும்போதே இக்களவு இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இன்று ஜி. ஜி. பொன்னம்பலம் மறைந்த நாள்

# சரித்திரம் படைத்த தமிழ்த்தலைவன்

இ. கணேசராசா

''தமிழன் என்றோர் இன முண்டு-தனியே
அவற்கொரு குணமுண்டு''

என்பதை உணர்ந்து செயற்பட்ட முதற் தமிழ்மகள் அமரர் ஜீ ஜீ ஆவார். ஜீ ஜீ அவர்கள் இளைஞராக இருந்த காலத்திலிருந்தே தமிழ்மக்களின் விடிவுக்காக உழைக்கத் தொடங்கினர்.

1931 ஆம் ஆண்டில் டொனமூர்கமிஷனின் சிபார்சுகளில் சிறுபான்மைத் தமிழருக்குத் தீங்கானவற்றை எதிர்த்து அதற்காக மன்னர் தொகுதியில் தேர்தலுக்கு நின்றார். அப்போது சில தமிழ் தலைவர்களின் பகிஷ்காரம் காரணமாக அவர் வெற்றிபெறவில்லை. பின் 1936 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் சட்டசபை உறுப்பினராக இருந்த கௌரவ கே. பாலசிங்கத்தை எதிர்த்து நின்று வெற்றிவாகை சூடினர். இதனல் ஜீ.ஜீயின் புகழ் இலங்கை முழுவதும் பரவியது. தமிழ்மக்களின் உயர்ந்த தலைவராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

1937 ஆம் ஆண்டில் அன்றைய ஆங்கில அரசால் நியமிக்கப்பட்ட சட்டக்கமிஷனுக்குத் தலைவராகவும் தற்காலிய போக்குவரத்து அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். 1939 இல் இலங்கை அரசைத் திருத்தி அமைக்கத் தோசாதிபதிசேர். அண்டிருகல்டிகோட் செய்த சிபார்சுகளின் விவாதத்தின் போது சிறுபான்மை மக்களின் உரிமை கோரி ஜீ ஜீ வாதிட்டார். சேர். பொன். இராமநாதன் 9 மணித்தியாலங்கள் தொடர்ந்து உரையாற்றிய 20 வருடங்களின் பின் ஜீ ஜீ அவர்கள் 14 மணித்தியாலங்கள் தொடர்ந்து செய்த முழக்கம் ஈழம் முழுவதும் எதிரொலித்து 1936 இல்

2ம் உலகப்போரின் போது யுத்தகால மந்திரிசபையில் ஜீ ஜீயும் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார் இலங்கை சிங்களவருக்கு மட்டுமே சொந்தமான நாடு என்றும், இலங்கை சிங்கள நாடு என்றும், சிங்களத் தலைவர்கள் சிறுபான்மைத்தமிழலரை ஒதுக்கத் திட்டமிட்டபோது இச்சூழ்ச்சியை உணர்ந்த ஜீ ஜீ தமிழர்களுக்கென்று ஓ[illegible] கட்சி வேண்டும் என்று எண்ணி 1944 இல் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசை நிறுவினர்.

காங்கிரசின் கொள்கைப்படி 1945 இல் இலங்கை வந்த சோல்பரிக் கமிஷனர்களைச் சந்தித்த தலைவர் ஜீ ஜீ சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் சமப்பிரதி நிதித்துவம் வேண்டும் என்ற ஐம்பதுக்கு ஐம்பதுகோரிக்கையை முன் வைத்தார்.

1947 இல் இலங்கையில் நடந்த பொதுத்தேர்தலில் சோல்பரித் திட்டத்தை எதிர்த்துப் போட்டியிட்ட ஜீ. ஜீ வெற்றிவாகை சூடினர். அவரது கட்சியும் 7 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதிலிருந்து ஈழம் வாழ் தமிழ் மக்கள் தமது பலம் பொன்னம்பலம் என்று உணரத் தொடங்கினர்,

அமரர் ஜீ ஜீ அவர்கள் 1948 இல் கே. ஜி ஆகவும் மகாராணியின் பதவியேற்புக்குப் பின் கியூ. ஸி ஆகவும் மாறினர்.

அப்போதுதான் ஜீ. ஜீ தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்திக் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையையும், கிழக்கு மாகாணத்தில் வாழைச்சேனையில் காகிதத் தொழிற்சாலையையும் நிறுவினர் இதன்மூலம் ஜீ ஜீ தமிழ்ப் பிரதேச பொருளாதாரத்துக்கு வழிகோலினர்.

ட்ரயல் - அற் - பார் வழக்கில் இனத்தாலும், மொழியாலும், கலாச்சாரத்தாலும் ஈழத்தமிழ் மக்கள் தனி இனம் இதனை எவரும் மறுக்க முடியாது என்றும் தனி அரசு நிறுவி அவர்கள் ஈழத்தில் தனியாட்சி செய்யத்தான் போகிறார்கள் என்றும் சட்டவாதத்துடன் அரசியல் சங்கநாதம் செய்து அவசரகாலச் சட்டம் செல்லும்படியாகாது என்றும் வாதிட்டார்

இவ்வாறு தமிழ் மக்களின் விடிவு வேண்டி உழைத்த தலைவர் ஜீ ஜீ மறைந்து இன்றுடன் 9 ஆண்டுகள் சென்றுலும் அவர் விட்டுச் சென்றவை என்றும் அவரை எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கும்.

## வவுனியா வெறிச்சோடியது

[வவுனியா]

வவுனியா நகரில் நேற்று பகல் 11 மணியுடன் கடைகள் பூட்டப்பட்டன.

தாண்டிக்குளம் பகுதியை நோக்கி சீருடையினர் சென்றதையடுத்து அங்கிருந்து துப்பாக்கிவெடிச்சத்தங்கள் கேட்டன. இதையடுத்தேவவுனியா நகர் வெறிச்சோடியது.

## மகளிர் அவை நன்றி கூறுகிறது

(யாழ்ப்பாணம்)

''தமிழ்மகளிர் அவையினராகிய எம்மால்கடந்த நான்கு மாத காலமாக நடத்தப்பட்டு வந்த கச்சேரி-நல்லூர் வீதியிலமைந்த அகதிகள் முகாமானது சில அகநெருக்கடிகளின் காரணமாக தமிழ் மகளிர் அவை உள்ளிட்ட சிலபொது ஸ்தாபன்ங்களின் கூட்டு நிர்வாகத்தின்கீழ் தற்சமயம் நடாத்தப்பெற்று வருகிறது.''

இவ்வாறு தமிழ் மகளிர் அவைத் தலைவி செல்வி கு. மேகலா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: சில வேலைத்திட்டங்களில் ஈடுபட்டிருக்கும் தமிழ் மகளிர் அவையினராகிய நாம் மேற்படி முகாமைத் தனித்து நடத்துவதில் சில நாட்களாக அதிகளவு சிரமங்களையும் பிரச்னைகளையும் எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டது. உணவுப்பிரச்னை முகாமிற்குள் தலைதூக்கியதை ஈடுசெய்வதில் நாம் தனித்துச்செயல்பட முடியாத நெருக்குவாரம் ஒன்றில் தள்ளப்பட்டோம்,

இத்தகைய நிலையால் இப்பொறுப்பை கூட்டுநிர்வாக அடிப்படையில் செயற்படுத்த முன்வந்தபோது பல அமைப்புக்கள் [illegible] ஒப்புக்கொண்டன. எமது சேவைக்கு இது வரை உதவிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறோம். [ஐ]

## இந்துசமய விருத்திச்சங்கம்

[சுண்டுக்குளி]

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தினரின் வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 9 ந் திகதி ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் திரு. சு விசுவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## இடமாற்றம்

[உடுவில்]

நவாலி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியை திருமதி ஆர். இராசரத்தினம் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

[சுண்டுக்குளி]

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு. இ. குமாரசாமி சர்மா யாழ். திருநெல்வேலி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## மக்கள் அவையின் ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள சகலபொது ஸ்தாபனங்களையும் அழைத்து தற்போதுள்ள நெருக்கடி நிலைமைபற்றி ஆராயுமுகமாக இன்று பி. பகல் 2மணிக்குவேம்படிமகளிர் கல்லூரியில் ஆலோசனைக் கூட்டமொன்றை மக்கள் அவை நடத்தவுள்ளது.

இக் கூட்டத்திற்கு யாழ் மாவட்டத்தில் உள்ள சகல சனசமூகநிலையங்கள், கிராம அருவிபித்திச்சங்கங்கள், மகளிர் அமைப்புக்கள், இணக்க சபைகள், விழிப்புக் குழுக்கள்பிரஜைகள் குழுக்கள் என்பனவற்றைக் கலந்து கருத்து தெரிவிக்குமாறு மக்கள் அவையின் அமைப்பாளர் திரு. ச. செந்துராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வயல் சென்று திரும்பிய விவசாயி சூடுபட்டுப்பலி

[கிளிநொச்சி]

வயலுக்கு நீர்ப்பாய்ச்சிவிட்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த இரண்டுபிள்ளைகளின்தந்தையானஒருவர்இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமான சம்பவமொன்று அண்மையில் பரந்தனில் நடைபெற்றது.

பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த இராமநாதர் மகேந்திரன் (32 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். இவர் வீட்டிலிருந்து கோரக்கன் கட்டிலுள்ள தனது வயலுக்கு நீர்பாய்ச்சிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போது கண்டி வீதி வழியாக வந்த சீருடையினர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையடுத்து அவர் துடிதுடித்து மரணமாகி இரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

அவ்வீதி வழியாக நடந்து வந்த 150 க்கும் அதிகமான சீருடையினர் வயலில் இருந்து வந்தவேறுபலரையும்நோக்கிச் சுட்டதுடன், பலரைத்துவக்கினுலும்தாக்கினராம். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகக் கூறப்படுபவர்கள், காயத்துடன் ஓடி மறைந்து விட்டனர்.

## விதை வெங்காயம் இறக்குமதியாகுமா?

### விவசாயிகள் அங்கலாய்ப்பு

[கோப்பாய்]

குடாநாட்டில் பெருமளவு வெங்காயச்செய்கை அண்மையில் தொடர்ச்சியாக பெய்த பெருமழையினல் அழிந்துள்ளது. விதை வெங்காயம் இறக்குமதி செய்து வழங்கப்படுமா? என்பது அறியாது விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இம்முறை கடந்தவருடங்களிலும் பார்க்க கூடியளவு நிலப்பரப்பில் யாழ்ப்பாணப் பகுதியில் எல்லாக் கிராமங்களிலும் வெங்காயம் செய்கை பண்ணப்பட்டது. தற்பொழுது ஏற்பட்ட வெங்காய பயிர் அழிவிலும்பார்க்க விவசாயிகளை அதிகமாக கவலையடையச் செய்திருப்பது அடுத்த இடைப்போக வெங்காயச் செய்கைக்கு விதைவெங்காயம் இல்லையே என்ற நிலைமையாகும்.

1984ம் ஆண்டிலும் வெங்காயச் செய்கை அழிவடைந்த போது இந்தியாவில் இருந்து விதைவெங்காயத்தை இறக்குமதிசெய்து வழங்குவதற்கு முயற்சிக்கப்பட்டது. அரசாங்கம் இந்த முயற்சிக்கு போதிய ஒத்துழைப்பு வழங்காமையினல் முயற்சி இடைநடுவில் கைவிடப்பட்டது.

இந்த வருடம் சேதமடைந்த வெங்காயச் செய்கையை ஈடுசெய்வதற்கு கட்டாயம் விதை வெங்காயம் இறக்குமதிசெய்து வழங்கப்படாவிடில் வடபகுதி விவசாயிகளின் நிலை ''அதோகதிதான்'' என வெங்காயச் செய்கையாளர் பேசிக்கொள்கின்றனர்.

## 'ஒத்துழைப்பு இருந்தால் தேவைகள் நிறைவேறும்'

[காரைநகர்]

''மாதடை மக்களின் நீண்டகால தேவையை நாம் நிறைவேற்றியுள்ளோம். இது போன்ற பலதேவைகளைகாலப் போக்கில் உங்கள் ஒத்துழைப்புடன் நிறைவேற்ற முடியும் என நான் நம்புகின்றேன்''

இவ்வாறு பொருட்திட்ட ஒருங்கிணைப்பாளரும் நிர்வாகியுமான திரு. எஸ். சண்முகதாஸன் காரைநகர் மாதடை கிராமத்தில் நாற்பதினயிரம் ரூபா செலவில் கட்டப்பட்ட பாலர் பாடசாலைக் கட்டிட திறப்புவிழாவுக்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் கூறினர்.

மேலும் அவர் தமதுரையில்; ''இக்கிராமத்துக்கு ஒரு சீரான பாதையில்லை. அப்பாதையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். நாமும் ஒத்துழைப்புத் தருவோம்'' என்றார்.

இவ்விழாவில் பனம்பொருள் உற்பத்தி சம்மேளனம் தலைவர் திரு ந[illegible]சு, வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் திரு. அ அரியரத்தினம், கிராமமுன்னேற்ற சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பயிற்சி வகுப்புகளும் செயல் அமர்வுகளும்

(உடுவில்)

மானிப்பாய் கல்வி வட்டாரத்திலுள்ள பாடசாலைகளில் ஆண்டு 5ல் கல்வி கற்பிற்கும் சகல ஆசிரியர்களுக்குமான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளும் செயலமர்வுகளும் மார்ச் மாதம் 1ம், 2ம் 15ம் 16ம், 22ம் திகதிகளில் நடைபெற உள்ளன.

மானிப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ச தனஞ்செயன் தலைமையில் இவ்வகுப்புக்கள் சுன்னாகம்இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

1986 ம் ஆண்டில் ஆண்டு 5 ல் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் இப்பயிற்சியை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் ஒவ்வொருவரும் முழுமையான பயிற்சிகளை பெறுவது முக்கியமானதென்றும் வட்டாரக்கல்வி அதிகாரி தெரிவித்தார்.

## நோய் அபாயம்

[வேலணை]

மண்கும்பான் கிராமப்பகுதியில் மூளைக்காய்ச்சல் நோய் பரவும்அபாயம்தோன்றியுள்ள இந்த நோயைக் கட்டுப்படுத்தாவிடில் பலருக்கு இந்தநோய் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

இப்பகுதியில் நுளம்பை கட்டுப்படுத்துவதற்கு உபயோகிக்கப்படும் மலத்தியன் போன்ற மருந்துகளைப் பாவிக்காமல்விட்டமையே இதற்குக் காரணமெனக் கூறப்படுகின்றது.

## கையொப்பம் இடுவதில் பலர் ஆர்வம்

[மாவிட்டபுரம்]

பத்துலட்சம் கையொப்பம் சேகரிக்கும் இயக்கம் கீரிமலையில் நடந்த பொழுது ஏராளமானேர் அதில் கையொப்பம் இட்டனர்.

கீரிமலை பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டின் பேரில் கீரிமலை காசி விசுவநாதர் ஆலயத்தில் நடைபெற்ற விசேஷ பூஜையை அடுத்து இந்த கையொப்பம் சேகரிக்கும் இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரஜைகள் குழுத் தலைவர் திரு.க சுந்தரமூர்த்தி முதலில் கையொப்பம் இட்டார் பின்னர் அன்னையர் முன்னணியினர்பொதுமக்கள்பிரஜைகள் குழு உறுப்பினர்கள், ஆலய குருக்கள், திரு ச சந்திரசேகர சர்மா முதலானேரும் கையொப்பம் இட்டனர்.


இந்த கையொப்பம் பெறும் பிரதிகள் சர்வதேச நிறுவனங்கள் பலவற்றுக்கு அனுப்பப்பட உள்ளதால் ஒவ்வொரு தமிழ் மகனும் தவறாது பங்குபற்றி கையொப்பம் இடுதல் அவசியமென கீரிமலை பிரஜைகள்குழுத் தலைவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
வாரமலர்
EELANADU VARA MALAR

# பர்மா

# தென்கிழக்காசியாவில் ஒரு இரும்புத்திரை நாடு



நம் நாட்டில் மிகச் சாதாரணமாகக் காணப்படும் ரகத்தைச் சேர்ந்த கார் இது. பர்மாவில் பணக்காரர்கள் இதனை விரும்பிப் பாவிக்கிறார்கள்.

பர்மாவைப் பற்றிக் குறிப்பாக ரங்கூன் நகரைப் பற்றித் தெரியாத இலங்கையா எவரும் இருக்கமாட்டார்கள் எனலாம். பர்மா அரிசி, பர்மா தேக்கு[ Burma teak], பர்மா றப்பர் போன்றவை இன்றும் எமது நாட்டில் பிரசித்தம்.

இவற்றையெல்லாம்விடத் தமிழர் மத்தியில் ரங்கூன் பெருநகர் மற்றொரு காரணத்துக்காகவும் பிரசித்தி பெற்றுள்ளது. ஒரு காலத்தில் பர்மா நகரின் முக்கிய பதவிகளையெல்லாம் தமிழரே அலங்கரித்தனரெனலாம். தமிழ் நாட்டைப் போல பர்மாவையும் நெருக்கமாகச் சொந்தம் கொண்டாடிவந்தனர் நம்மவர்.

## சேனா

ஆனாலும் பின்னர் பர்மா சுதந்திரமடைந்தவுடன் வெளிநாட்டவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டதும் பெருந்தொகையான தமிழர்கள் கால்நடையாகவே இந்தியா வந்ததும் வழியில் பலர் மடிந்ததும் வேறு கதை!

இன்றுஇந்தப் 'பொன் கொழிக்கும் பூமி' பெரும்பாலும்ஏனையநாடுகளின்றும் தனிமைப்படுத்தப்பட்ட நாடாகவேவிளங்குகின்றது,

பர்மாவின் அண்டை அயல் நாடுகள் பல்வேறு பிரச்னைகளால் பாதிப்படைந்திருக்க பர்மா பெரும்பாலும் அமைதியாகவே காலம்கழிக்கிறது.

அண்டை நாடுகளில் உள்ள நவீன தொழில்நுட்ப 'விசித்திரங்களை, குழப்பங்களைச் சந்தித்துவிட்டு பர்மாவினுள் நுழையும் ஒருவர் இந்நூற்றாண்டின் ஆரம்ப நிலையைத் தரிசிப்பதுபோன்ற உணர்வையே நிச்சயம் பெறுவார்.

ரங்கூன் விமான நிலையத்தில் ஒருவரை வரவேற்கும் சாதனங்கள் ஏனைய விமான நிலையங்களிலுள்ளதைப் போல நவீன கம்பியூட்டர்களுக்கும், தொலைக்காட்சி அறிவித்தல்களுமல்ல; பழைய தட்டச்சு இயந்திரங்களும், தூசுபடிந்த 'லெட்ஜர்' புத்தகங்களுமே!

ரங்கூன் நகரைச் சுற்றிப் பார்ப்பவர்கள் அது ஒரு தலைநகர் என்பதை கஷ்டப்பட்டே நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும்.

ஏனைய தலைநகரங்களைப் போல ரங்கூனில் நவீன மாடமாளிகைகளோ அல்லது வானுயர் கட்டிடங்களோ காணுதல் அரிது. இரவு விடுதிகளோ அன்றிநவீன நியோன் சமிக்ஞை விளக்குகளோ அங்கு இல்லை. அங்குள்ள பெரும்பாலானோருக்கு 'கோகா கோலா' என்றால் என்னவென்றே தெரியாது!

ரங்கூன் நகரில் ஆங்கிலேயர் ஆட்சியை நினைவுறுத்தும்வகையில் பல பழங்கால மாளிகைகளைக் காணலாம். இடிந்து விழும் நிலையில் உள்ள சுற்று மதில்கள், தோட்டங்கள் முழுவதும்இலைகுழைகளினால் மூடப்பட்டிருப்பது பழமை விரும்பிகளுக்கு உவப்பான ஒரு காட்சியே.

பர்மாவுக்குச் செல்லும் எவரும் 'ஸ்ராண்ட்' ஹோட்டலுக்குச் செல்லாமல் இருக்கமாட்டார்கள். ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட இந்த ஹோட்டலின் சீலிங்கில் பழங்காலக் காற்றாடிகள் மெதுவாகச் சுழன்றுகொண்டிருக்கும். பர்மா மக்களின் வாழ்க்கையைப்போல, ஹோட்டல் மண்டபத்தில் கறைபடிந்த வெள்ளைச் சீருடையுடன் பரிகாரகர்கள், சாயம் கழன்ற வெள்ளி 'ட்ரே'களில் உணவு பரிமாறுவது நிச்சயமாக ஒரு கண்கொள்ளாக்காட்சிதான்.

## பூகோள அமைப்பு

கிழக்கே தாய்லாந்தையும் லாவோஸையும், வடக்கு கிழக்கில் சீனாவையும், வடமேற்கில் இந்தியாவையும், பங்களாதேஷை மேற்கிலும், அந்தமான் கடலைத் தெற்கிலும் கொண்ட பரப்பு 2,61,789 சதுரமைல். இது இலங்கையை விடச் சுமார் 10 மடங்கு பெரியது.

பொன்கொழிக்கும் பூமி என வர்ணிக்கப்படும் பர்மாவில் பெரும்பான்மையினோர் தேரவாத பௌத்தர்களாவர்.

1886-ப் ஆண்டில் பிரிட்டிஷாரின் ஆட்சியில் பர்மா வந்தது. அதன்பின்னர் படிப்படியாகத் தமிழர் அரசாங்க உத்தியோகங்களிலும், சீனர் வர்த்தகத் துறையிலும் பலம் பெறத் தொடங்கினர்.

2-ம் உலக யுத்தத்தின்போது பர்மா சிறிது காலம் ஜப்பானியர் வசமிருந்தது. பின்னர் 1948-ம் ஆண்டில் பர்மா சுதந்திரம் பெற்றது.

இதன் பின்னர் தமிழர்களை பர்மிய முக்கிய நிலைகளில் இருந்து அகற்றவேண்டுமென மெதுவாக முகிழ்த்தகொள்கை பின்னர் வலுப்பெறத்தொடங்கியது.

பர்மாவின் பெரும்பாலான மக்கள் பர்மிய மொழியையே பேசுபவர்கள்.

62-ம் ஆண்டில் யூ நூவின் அரசாங்கம் ஜெனரல் நேவின் என்பவரினால் தூக்கியெறியப்பட்டது. புரட்சிகர கவுன்சில் ஒன்று நிறுவப்பட்டு, ஆட்சி அதிகாரம் கையளிக்கப்பட்டது.

## விலைவாசிகள்

பர்மாவில்உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தவிர ஏனைய பொருட்களின் விலை மிக அதிகம்.

ஒரு பான்டா (Fanta)வின் விலை சுமார் 75 ரூபா. ஒரு தொலைக்காட்சிப் பெட்டியின் விலை சுமார் ஒரு லட்சம் ரூபா.

பர்மாவில் 2 தொலைக்காட்சி நிலையங்கள் இருந்தபோதிலும் அவைஒரு நாளைக்கு இருமணித்தியாலங்களுக்குமேல் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதில்லை

ஒரு 'நிஸான்' காரின் விலை சுமார் பத்து லட்சம் ரூபா

## பொருளாதாரம்

தலைவர் ஜெனரல் நே வின்னின் சோஷலிஸக் கொள்கைகளால் பெருமளவு பாதிக்கப்பட்டது பர்மிய பொருளாதாரமே!

பர்மாவில் இயற்கையன்னை அள்ளி வழங்கியுள்ள செல்வங்கள் ஏராளம். அதனால் பர்மாவைப் 'பொன் கொழிக்கும் பூமி' என அழைப்பர்.

தேக்கு, நீலக்கற்கள், றப்பர் பர்மாவின் இயற்கை தந்த செல்வங்கள். எரிபொருள் எண்ணெயும்கூடக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆயினும் பர்மா பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நாடுகளிலொன்றாகவே கணிக்கப்படுகின்றது. ஒரு காலத்தில் அரிசி ஏற்றுமதி செய்யும் நாடுகளில்முதன்மையாக விளங்கியது பர்மா. இப்போது அந்தப் பெருமை இல்லை.

பர்மாவில் மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது கறுப்புச் சந்தைப் பொருளாதாரமே! றேடியோ, டிவி, மற்றும் பல ஆடம்பரப் பொருட்கள் எல்லாம் கறுப்புச் சந்தையில் விற்கப்படுகின்றன.

## அரசியல்

ஜெனரல் நே வின்னின் அரசாங்க செவிகள் மிகவும் கூர்மையானவை.

சுமார் 25 ஆண்டு ஜெனரல் நே வின்னின் ஆட்சியில் மக்கள் அரசியல் பேசப் பெரும்பாலும் அஞ்சுகின்றனர்.

சந்தைகள், திருவிழாக்கள் போன்றவற்றில் மக்கள் பெருமளவில் கலந்து கொள்கின்றனரெனினும் வெளிப்படையாக அரசியல் பேசுவதில்லை. சில காலத்துக்கு முன்னர் ஜெனரல் வின்னின் சில கொள்கைகளை எதிர்த்த மாணவர்குழுவொன்றைஅரசு அடக்கிய விதத்தைப் பலர் மறக்கவில்லை. ஆயினும் பர்மாவின் சில பகுதிகளில் பர்மிய ராணுவம் பெரும் சவால்களை எதிர்நோக்குகிறது. கடந்த 30 வருடங்களாகப் போராடி வரும் 'காரென்' கிறிஸ்துவர்கள், ஷியாங் - கை-ஷேக்கின் சீன தேசிய படைகள் போன்றவை, பர்மிய இராணுவத்தைப் பல இடங்களில் தோல்வியடையச் செய்துள்ளனர். இவற்றுக்கு மேலாகப் போதைவஸ்து உற்பத்தி மற்றும் கடத்தலில் ஈடுபட்டுள்ளவர்களும் இராணுவத்துக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துவருகின்றனர் இவர்களிடம் 20,000 பேர்கொண்ட தனி

(12ம் பக்கம் பார்க்க)



பர்மாவில் ஒரு வீதிக்காட்சி. இது நமது தெருக் காட்சியைப் போன்றிருக்கிறது அல்லவா!

---

## பாலைவனத்தின் பசும் புற்றரை

இனப்பிரச்னை, இனப்பாகுபாடு என்பதெல்லாம் உண்மையில் உண்டா?

அவை இருப்பதாக நினைந்து அவற்றைத் துன்பியல் நாடகமாக நடித்து, களை தீராத நிலையில் தொடர்கின்றோமே?

உண்மை அடிப்படைக்கு ஒவ்வாத கருத்துக்கள் ஓங்கி வளர்வதை நாம் காண்கின்றோம்; உலகெங்கிலும் இன வேறுபாடுகள் பெரும் மோதல்களை வளர்த்து வருகின்றன.

இவ்வித மோதல்கள் துவேஷங்களை வளர்த்து வருவதே இன்றைய போரிலும் மிக அபாயமான காரியம்.

நீண்டபோரானாலும் அது ஓய்ந்து முடிவடையும். ஆனால் பகைமையும் குரோதமும் நாட்டைப் பாலைவனமாக்கிவிடும். எந்த விஞ்ஞான அற்புதமும் இந்தச் சாப நிலைக்கு விமோசனமளிக்க மாட்டாது. உள்ளத்தில் உண்மை ஒளி வேறு; சந்திரனுக்கப்பால் உள்ள செவ்வாயைச் சென்றடைவது வேறு.

38-வது சுதந்திரதினம்; தெற்கில் கொண்டாட்டம்; வடக்கில் மயான அமைதி. எனவே இது தேசிய சுதந்திரம் அல்லவென்பது தெளிவு.

ஒரு வருடத்தில் இந்தநிலை மாறி நாடனைத்தும் சுதந்திர விழாவைக்கொண்டாட என்ன நடைபெறுகிறது? வடக்கில் கூடுதலான ராணுவ முகாங்கள்! பத்துலட்சம் கையெழுத்து அரசைப் பயப்படுத்துமா? அறநனைந்தவர்க்கு கூதலும் என்ன, குளிரும் என்ன?

நனைவதற்குமழைவேண்டும்; ஆனால் நாம் குறிப்பிடுவது சிறீலங்கா பாலைவனம். இனத்துவேஷத்தின் சுயரூபத்தை உலகுக்கு வெற்றிகரமாக எடுத்துரைத்தோமே!

இந்தப் பாலைவனத்திலும் பசும் புற்றரை இல்லாமற் போகவில்லை; வாசகர்களே! சென்ற வியாழக்கிழமை எங்கள் பிரசுரத்தில் முன்னாள் யாழ் அரச அதிபர் சிங்களப்பெருமகன் லயனல் பெர்னாண்டோ தமது நண்பன் கணேஷின் மறைவு குறித்து எழுதிய நயவுரை தேசியஒற்றுமையின் தரமான இலக்கியம்! படியுங்கள் மனந்தேறுங்கள்!

---

## கம்பன் தமிழ்க்கோட்டம்

கம்பன் தமிழ்க்கோட்டம்
கால்கோள் நடக்கட்டும்
கம்பன் கழகத்துப்
பணிகள் தொடரட்டும்.
கம்பன் அவனே
கவிதைக்கொரு கழகம்!
நம்பன் அவனை
நயக்க ஒரு கழகம் -
கம்பன் கழகம்!
பணிகள் தொடரட்டும்
கம்பன் தமிழ்க்கோட்டம்
கால் கொண்டுயரட்டும்.
நூலோர்க்கும் நூலை
நுகர்வோர்க்கும் சீதனமாய்
ஆல் போல், தழைத்தே
அறுகுபோல் வேரூன்றி
காலத்தை வென்றே
கலையை வளர்க்கட்டும்.

- சத்தியசீலன்

[கால்கோள் விழா
10-02-86இல்
இடம்பெறுகிறது.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிய மனிதர்கள்: கொடிய குற்றங்கள்

# அமெரிக்காவில் அதிகரித்துவரும் பால்ய குற்றங்கள்!

அமெரிக்காவின் தென்கரோலிஞ மாநிலத்தின் மத்திய சிறைச்சாலை.

அதில் ஒரு விஷேட மேடையில் ஒரு மின்சாரக் கதிரை வைக்கப்பட்டிருக்கிறது.

டெரி ரோச் எனும் 25வயதே நிரம்பிய இளைஞன் அழைத்து வரப்பட்டு அதில் இருத்தப்படுகிறான்.

அவனது கைகால்கள் கதிரையுடன் பிணைக்கப்படுகின்றன.

மரணத்தை இன்னும் சில விஞடிகளில் தழுவப்போகும் அந்த இளைஞன் தனது இறுதி வார்த்தைகளைக் கூறுகிறான்,

''எனது முடிவு தவறான வழியில் செல்லும் ஏனைய இளைஞர்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும்''.

கூறி முடித்தவுடன் கதிரைக்கு மின்சாரம் செலுத்தப்படுகிறது. அவனுக்கும் தான்.

1500—2300 வோல்ட் உயர் மின்சாரம் செலுத்தப்படுகிறது, 9 நிமிடங்களுக்கு.

துடிதுடித்த அவனுடல் சிறிது நேரத்தில் அமைதியாகிறது.

ஆம் டெரி ரோச் இறந்து விட்டான்!

ஆனல் அவனது மரண தண்டனை அமெரிக்காவெங்கும் அதிர்ச்சி அலைகளைத் தோற்றுவித்துள்ளது.

அமெரிக்க நாட்டின் சமூக, உளவியல் நிபுணர்கள், அமெரிக்காவில் - ஜனநாயகத்தின் தலைவன் எனக்கருதப்படும் நாட்டில் - எதனுல் இந்த பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன என்பதை ஆராய முயன்று மண்டையை உடைத்துக் கொள்ளுகின்றனர்.

அமெரிக்க நீதி அமைச்சின் அறிக்கையொன்றின் படி வருடந்தோறும் சுமார் 27000 பராயமடையாத இளைஞர்கள் சிறைக் கூடங்களுக்குள் தள்ளப்படுகின்னர். இவர்களில் பெரும்பாலானோர் சிறு சிறு குற்றங்களுக்காகவே தண்டனை விதிக்கப்படுகின்றனர்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட டெரி ரோச் 77ம் ஆண்டில், அதாவது தனது 17 வது வயதிலே சீர்திருத்தப் பள்ளியிலிருந்து ஓடிஞன். அதன் பின்னர் அவன் ரொனி மஹாஃபர் [வயது 16], ஷா [வயது 22] ஆகியோருடன் கூட்டுச் சேர்ந்து பல குற்றச் செயல்களில் ஈடுபட்டான்.



**ரொனல்ட் வார்ட்: மிகவும் இளைய மரண தண்டனைக் கைதி**

இம் மூவர் கொண்ட குழுவினரின் குற்றங்களின் சிகரமாக அமைந்தது யாதெனில் இருவரைச் சுட்டுக்கொன்றதாகும். அதுவே பின்னர் டெரி ரோச்சுக்கு மரண தண்டனையைத் தேடிக்கொடுத்தது.

77ம் ஆண்டு ஒக்டோபரில் தென் கரோலினவில் வசித்த டொமிடேலர் எனும் நபரை சுட்டுக் கொலை செய்தனர். அதன் பின்னர் டேலருக்கு

அதன் பின்னர் ரோச்சும், ஷாவும் 5 தடவை வட்டத்தை நோக்கிச் சுட்டுள்ளனர்.

இத்தகவல்கள், பின்னர் அரச தரப்பு சாட்சியாக மாறிய ரொனி கூறியவை அவன் இப்போது ஆயுள் தண்டனையை அனுபவித்து வருகிறான். ஷாவுக்குக் கடந்த வருடம் மரண தண்டனை வழங்கப்பட்டது-

ரோச்சின் சார்பில் வழக்காடிய வழக்கறிஞர்' ரோ சித்தசுவாதீனமற்றவரென்றும் அதனுல் அவருக்கு மரண தண்டனை வழங்கப்படக் கூடாது எனவும் வாதாடினர்.

ஆனல் நீதிபதி தனது தீர்ப்பில் ரோச், எது சரி எது பிழை எனப் பிரித்தறியும் ஆற்றல் பெற்றிருந்தான் எனக் கூறியுள்ளார்.

ரோச்சுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதை அறிந்து அன்னை தெரஸா, முன்னுள் ஜனதிபதி கார்ட்டர், ஐ. நா. பொதுச்செயலர் ஆகியோர் அவனுக்கு மன்னிப்பளிக்குமாறு மாநிலக் கவர்னர் ரிச்சர்ட் ரிலேயைக் கோரினர். ஆனல் கவர்னர் அசையவில்லை!

இம் மாதிரி கல்நெஞ்சர்களுக்கு இதுதான் சரியான தண்டனை என்று நினைத்தாரோ, என்னவோ.

கடந்த 22 வருடங்களில் பாலிய பருவத்தில் செய்த குற்றத்திற்காக மரண தண்டனை நிறை வேற்றப்பட்ட இரண்டாவது இளைஞன் டெரி ரோச் ஆவான்.

பொதுவாகப் பராயமடையாத இந்த இளம் குற்றவாளிகள் சட்டரீதியாக வாக்களிக்க முடியாத நிலையில், வங்கிகளில் கடனெடுக்க உரிமையற்ற நிலையில் மரணதண்டனை அளிக்கப்படுவது மனிதாபிமானமற்ற ஒரு கொடூரமான செயலாகுமென இத்தண்டனைகளை எதிர்ப்பவர்கள் கூறுகின்றனர்.

ஆயினும் அமெரிக்காவில் 31 இளைஞர்கள், தமது இள வயதில் செய்த குற்றங்களுக்காக மரண தண்டனையை எதிர் நோக்கிக்காத்திருக்கின்றனர். அத்துடன் இவர்கள் செய்துள்ள குற்றங்கள் ஒரு மென்மையான மனதினுல் செய்ய முடியாதவையாகவும் உள்ளன.

### மிகவும் இளைய குற்றவாளி

மரண தண்டனையை எதிர் நோக்கியிருக்கும் இவ்விளைஞர்களில் ரொனல்ட் வார்ட்டும் ஒருவன்.

பதினறே வயது நிரம்பிய வார்ட் தனது 15 வது வயதில் 70 வயது நிரம்பிய தம்பதியை அடித்தே கொன்றான்.

### வெய்ன் தொம்சன்

மரண தண்டனையை எதிர் நோக்கியிருக்கும் இளைஞர்களில் பரிதாபத்துக்குரிய இன்னெரு இளைஞன் வெய்ன் தொம்சன்.

16 வயது நிரம்பிய இவ் இளைஞன் தனது 15 வது வயதில் வேறு மூவருடன் கூட்டு சேர்ந்து தன் சகோதரியின் கணவரைக் கொன்றுள்ளான்.

சுருள் மயிருடன் பால்வடியும் குழந்தையைப் போன்ற முகத்தோற்றமுடைய தொம்சன் சிறையிலிருக்கையிலேயே 4 அங்குலம் வளர்ந்துள்ளான்.

ஜேம்ஸ் டிரிம்பின் எனும் இளைஞன் தனது 17 வது வயதில் 22 வயது நிரம்பிய ஒரு யுவதியை கற்பழித்து விட்டு அவளின் கழுத்தை வெட்டிக் கொன்றுள்ளான்.

மென்பனத்தையுடையவர்கள் என வர்ணிக்கப்படும் பராயத்தில் இவர்களின் [illegible] கள் மனோதத்துவ நிபுணர்களை ஆச்சரியப்பட வைக்கின்றன.

### இளம் கைதிகளுக்கெதிரான வன்முறைகள்

இதனிடையே சிறையில் வைக்கப்பட்டிருக்கும்இவ்இளம் குற்றவாளிகளுக் கெதிரான ஏனைய கைதி மேற்கொள்ளும் வன்முறைகள் சிறை அதிகாரிகளை கவலை கொள்ளச் செய்துள்ளன.

இடாகோ மாபெச் சிறையொன்றில் வைக்கப்பட்டிருந்த 17 வயது இளைஞனெருவனை ஏனைய கைதிகள் சித்திரவதை செய்தபின் அடித்தே கொன்றுள்ளனர்.

இதற்கு மேலாக ஓஹியோ மானிலத்தில் சிறையிலிருந்த யுவதியொருத்தியை காவலாளியே கற்பழித்த சம்பவமும் நடந்துள்ளன.

### முடிவுரை

நாகரீக மோகத்தின் உச்சியில் இது போன்ற பாலிய குற்றங்கள் அதிகரிப்பதை எதிர்பார்க்கலாம் தான். ஆயினும் இந்நிலைமை நீடிக்குமாயின் எதிர்கால அமெரிக்க சமுதாயம் அந்நாட்டிற்கு உருப்படியான தலைமையைத் தரமுடியாத நிலையில் இருக்கும்.

## வெங்கட்ராம ஐயர்

தொழில் செய்யும் இடத்துக்கு விசுவாசம், மேலதிகாரிகளுக்கு மரியாதை, தனக்குக் கீழ் பணி புரிபவர்களுக்கு அனுதாபம்.

இந்தப் பண்புகள் பெரும்பாலும் இந்தக் காலத்தில் அரிதாகவிருக்கின்றது. ஆனல் திரு. வெங்கடராம ஐயர் இந்தப் பண்புகளுக்கு இருப்பிடமாகத் திகழ்ந்தார்.

'வீரகேசரி' பத்திரிகையில் அப்பொழுது அவர் பிரதம உதவி ஆசிரியர். ஆசிரியர் பகுதியில் பல்வேறு விதமான பிரகிருதிகள் இருந்தனர். அனைவரையும் சமாளித்து வேலைவாங்குவதில் சமர்த்தர் மட்டுமல்ல, வேலைபழக்குவதிலும் திறமையாளர் அவர்.

திரு. வெங்கட்ராமையரின் கீழ் வேலை பழகிய அனேகர் இன்று தமிழ்ப்பத்திரிகைகளில் பணிபுரிகிருர்கள். அவர்களில் நானும் ஒருவன் என்று நன்றியுடன் கூறிக்கொள்வதில் எனக்கு மகிழ்ச்சியுண்டு.

அண்மையில் அவர் தமது 76-வது வயதில் இந்தியாவில் காலமானுர் என்ற செய்தி என்போன்றவர்களுக்குக் கவலையை அளித்திருக்கும். அவர் ஆன்மா சாந்தியுறுக.

— எஸ். பெருமாள்

## செந்தில்

அருசாமையில் இருந்த கார்லோட்டா எனும் 14 வயது சிறுமியை தமது காரில் ஏற்றிச் சிறிது தூரம் சென்ற பின்னர் காரை நிறுத்தி அவளைக் கீழே தள்ளியுள்ளனர். அதன் பின்னர் மூவரும் கார்லோட்டாவை மாறி மாறிக் கற்பழித்துள்ளனர் முடிவில் அவளைச் சுட்டுக் கொல்ல முயன்றபோது அவள், தனது பெற்ரேர் வசதி படைத்தவராதலால் இவர்கள் கேட்டதையெல்லாம் எடுத்துத்தருவதாகவும், தன்னைச் சுடவேண்டாமென்றும் கெஞ்சிக் கேட்டுள்ளார்.

ஆனல் சதைவெறி தீர்ந்து கொலை வெறியில் நின்ற மூன்று காதகர்களினதும் கல்நெஞ்சை அவளின் கெஞ்சலோ, கண்ணீரோ ஒன்றும் செய்யவில்லை!

ஷா, நிலத்தில்வட்டமொன்றைக் கீறி அதில் கார்லோட்டாவின் தலையை வைக்கும்படி பணித்துள்ளான்.

## இலக்கியத்தில் கடவுள் வழிபாடு

**புத்தொளி**

உலகம் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை தெய்வம் இருக்கிறது என்று வாதிப்பாரும் தெய்வம் இல்லை என்று சாதிப்பாரும் இருக்கிருர்கள். தமிழ்மக்களைப்பொறுத்தவரை தெய்வம் இல்லை என்று சாதிப்பவர் மிகக் குறைவானவர்களே. பிள்ளையார் சுழி போட்டு, சிவமயம்என எழுதியே பழக்கப்பட்டவர்கள் அவர்கள். நித்திரைக்குப் போகும்போதும் விழித்தெழும் போதும், சும்மா இருக்கும் போதும் ''அப்பனே முருகா'' ''சிவனே'' என்று சொல்லி ஆறுதலடைவார்கள். கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதும் கடவுளை நம்பினேர் கைவிடப்படார் என்பதும் இந்நாட்டுப் பழமொழியன்ரே. கடந்துள்ள பொருள் எதுவோ அது கடவுளாகும். பிறப்பு, இறப்பு என்னும் இரண்டையும் கடந்த பொருள்; நல்வினை, தீவினை என்னும் இரண்டையும் கடந்த பொருள் என கடவுள் என்ற சொல்லின் பொருளை விரித்துரைப்பர். கவியரசராகிய கம்பரும் இதனை விளக்கியுள்ளார்.

மூலமும் நடுவு ஈறும்
இல்லதோர் மும்மைத்தாய
காலமும் கணக்கும் நீத்த
காரணன்.

கடவுள் என்பது கம்பர் கருத்தாகும். எல்லாவற்றையும் கடவுள் கடந்தவரேயாயினும் அவரன்றி ஓரணுவும் அசையாது என்பது பண்டைய சித்தாந்தம். பிரகலாதன் கதை இதற்குச் சான்று பகர்கின்றது. இரணியன் அவன் மகன் பிரகலாதனை உன் கடவுள் எங்கிருக்கிருன்? இத்தூணில் இருக்கிருனு?'' என்று அதிலே நின்ற தூணைக் காட்டிக் கேட்டான். அதற்குப் பிரகலாதன் மறுமொழி சொன்னுன். ''தூணிலும் உளன், ஓர்தன்மை அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன், மாமேருக் குன்றிலும் உளன் இந்நின்ற தூணினும் உளன், முன் சொன்ன சொல்லினும் உளன்'' என்று கூறினுன்.

பஞ்சபூதங்களாகிய மண்ணிலும் விண்ணிலும், நீரிலும் நெருப்பிலும் காற்றிலும் கலந்து நிற்பவர் கடவுள். இத்தகைய கடவுளை,

பாரிடை ஐந்தாய்ப் பரந்
தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்
தாய் போற்றி
தீயிடை மூன்ருய்த் திகழ்ந்
தாய் போற்றி
வளியிடை இரண்டாய்
மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்ருய் விளைந்
தாய் போற்றி

என்று தித்திக்கும் திருவாசகம் போற்றுகின்றது.

அன்பே கடவுளின் வடிவம் என எல்லாச் சமயங்களும் வியந்து கூறுகின்றன. கடவுளிடத்தில் நாம் செலுத்தும் அன்பு பக்தி என்று சிறப்பித்துச் சொல்லப்படும். பக்தி முதிர்ந்த நிலையில் தெய்வப் பித்து வந்து சேரும். கடவுளைப் பெரும் பித்தன் என்று பாடினுரும் உண்டு. ''தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவன் பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ'' என்பது திருவாசகம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மை ஆட்கொண்ட பெருமானை, ''பித்தாபிறைசூடி பெருமானே அருளாளா என்று அடி எடுத்து அத்தா உனக்காளாய் இனியல்லேன் எனலாமே'' எனத் திருப்பாசுரம் பாடியருளினர்.

தமிழ் காவியங்களில் சிறப்புற்று விளங்கும் கம்பராமாயணம் கடவுளிடம் ஒப்பு வித்தலை நன்கு விளக்குகின்றது. கம்பராமாயணத்தின் உட்கருத்தைக் கம்பர் முதற்கவியிலேயே குறிப்பாகக் கூறியுள்ளார்.

''உலகம் யாவையும் தாமுள
வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும்
நீங்கலா
அலகிலா விளையாட்டுடை
யார் அவர்
தலைவர் அன்னவர்க்கே
சரண் நாங்களே''

என்பது கம்பர்தரும் கடவுள் வாழ்த்து. உலகங்களை எல்லாம் படைத்தும் காத்தும் துடைத்தும் விளையாடும் பெருமானே ஆண்டவன் அவனே எல்லார்க்கும் அடைக்கலம் அளிப்பவன் என்று இராமாவதாரத்தின் உட்பொருளை உணர்த்தினுர் கம்பர்.


தமிழ்நாட்டில் ஆறுவகைப்பட்ட சமயங்கள் இருந்ததாக ஆன்ரேர் கூறுவர். அவற்றுள் சைவமும், வைணவமும் காலப் பழமை வாய்ந்த சமயங்கள். சமணமும் சாக்கியமும் சில காலம் சிறந்திருந்து நிலைகுலைந்தன. இக்காலத்தில் இஸ்லாம், கிறிஸ்தவம் வளர்த்து வருகின்றன, சமயங்கள் வெவ்வேருக இருந்தாலும் கடவுள் காரணமாகச் சமயவாதிகள் சண்டையிட்டுக் கொள்ளலாகாது என்பதே சான்ரேர் கொள்கையாகும்.

பண்டைக்காலத்தில் ஒரு குடும்பத்தில் தமையன் சைவனுகவும், தம்பி வைணவனுகவும் வாழ்ந்தார்கள். சேர நாட்டை ஆண்ட செங்குட்டுவன் என்பவன் சிறந்த சைவன். அவன் தம்பியாகிய இளங்கோவடிகள் சிறந்த சமண முனிவர். இருவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். தர்க்கமும் குதர்க்கமும் இல்லாத சமரச சன்மார்க்க நெறியை ஆர்வத்தோடு எதிர் நோக்கினுர் தாயுமானுர்.

''தர்க்க மிட்டுப்பாழாம் சமயக் குதர்க்கம் விட்டு நிற்கும் அவர் கண்டவழி நேர் பெறுவதெந்நாளோ'' என்று பாடினுர் அப்பெரியார் அந்நாளே எமக்கு நல்நாளாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குறுநாவல்




[6]

கனகலட்சுமி கதிராசியைக் கல்யாணம் செய்து கொண்டது திட்டத்தில் உள்ள பெண்களுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்து விட்டது. அதை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டார்கள். அவளோடு பேச்சு வார்த்தையைக் குறைத்துக் கொண்டனர் சில பெண்கள். பூமணி அதில் முதன்மையாய் நின்றாள்.

சிரமதானம் நடந்து முடிந்ததும் பொருள்கள் சீராக விநியோகம் செய்யப்படாததும் பெரும் புயலை தோற்றுவித்தது. பூமணி மிகப் பெரிய முறைப்பாடு ஒன்றை எழுதி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்தாள். அங்கிருந்து இந்த விடயத்தை நன்கு விசாரித்து உடன் அறிக்கை அனுப்பச் சொல்லிப் பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் ஒரு நாள் திடீரென்று முழங்கேணிக்குப் புறப்பட்டுச் சென்று பூமணியைச் சந்தித்தார். பூமணி நடந்த விஷயங்களையும் நடக்கின்ற விஷயங்களையும் சாங்கோபாங்கமாக எடுத்துக் கூறினாள். பக்கத்துக் காணிக்காறி கமலாவும் வேறு சிலரும் வாக்குமூலம் அளித்தனர். பெண்களில் சிலர், முதலில் கனகலட்சுமியிடம் சென்று சிரமதானப் பொருள்களைப் பெற விருப்பமில்லாமல் இருந்தும் ஒரு வாரத்துக்குப் பின் சென்று அவள் கொடுத்த பொருள்களைப் பெற்றுக் கொண்டு பதிவேட்டில் கையொப்பம் வைத்திருந்தனர். பொருள்கள் வழங்கிய பதிவேட்டைப் பார்க்க ஏஜிஏ விரும்பியும் அரசகேசரி இல்லாதபடியால் அதைப்பார்க்க முடியவில்லை.

''நீர்தானே திட்டத் தலைவி.. உம்மிடம் திறப்புத் தருவதில்லையா?- ஏஜிஏ பூமணியிடம் கேட்டார்

அவர் இப்ப என்னோடை கதைப்பதில்லை கனகலட்சுமியிடம்தான் எல்லாப் பொறுப்பையும் கொடுத்திருக்கிறார்.

ஏஜிஏ கனகலட்சுமியை ஆள்விட்டுக் கூப்பிடுவித்தார்.

''கூப்பிட்டீங்களா சேர்?'' முகமெல்லாம் சிரிப்பாக ஏஜிஏக்கு முன் வந்து நின்றாள் கனகலட்சுமி.

''ஸ்ரோர் திறப்பு உம்மிடம் தானே?''

''திறப்பு என்னட்டை இல்லை சேர்... அரசகேசரி ஐயாதான் வைச்சிருக்கிறார்.''

உதவி அரசாங்க அதிபர், மௌனமாக அவளையே பார்த்துக் கெண்டு நின்றார்.

சிரமதானப் பொருள்கள் வழங்கப்பட்ட பதிவேட்டை உதவி அரசாங்கஅதிபரின் உத்தரவின் பெயரில் அரசகேசரி அலுவலகத்திற்குக் கொண்டு வந்திருந்தான். ஒவ்வொருவருடைய பெயருக்கு நேரிலும் சீனி, மைசூர்ப்பருப்பு வழங்கப்பட்ட மாதிரி பதியப்பட்டு ஒவ்வொருவரது கை எழுத்தும் பதியப்பட்டிருந்தன.

''என்ன டீஓ அங்கை எல்லாரும் சிரமதானப் பொருள்கள் தாங்கள் எடுக்கவில்லை என்று வாக்குமூலம் தந்திருக்கினம்... இஞ்சை ரெஜிஸ்தரிலை கை எழுத்து வைச்சிருக்கு! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை...! சந்தேகக் கண்ணோடு அரசகேசரியை எதிர் நோக்கினார் ஏஜிஏ.

''அதிலைதான் விஷயம் இருக்கு. பெட்டையள் பொருள்கள் எல்லாம் எடுத்துப்போட்டுக் கடைசியிலை இப்படி வம்புத்தனம் செய்யினம். எல்லாம் இந்தப் பூமணி என்ற பெட்டைதான் குழப்பங்களுக்குக்காரணம்... கனகலட்சுமி எண்டு ஒரு அங்கத்தவர்... அவள் ஒரு நல்ல ஒழுங்கானவள். அவள் பொருள்கள் விநியோகத்தைப் பொறுப்பெடுத்தது மற்றவைக்கு பிடிக்கவில்லை''

''ஆனால் வழக்கமாகப் பூமணிதானே இவ்வளவு காலமும், இப்படியான வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்தவள். அவை தங்களுக்குத் தோதான ஆளைத்தானே தலைவியாய்த் தெரிவு செய்தவை. நீர் ஏன் அதிலை ஒரு மாற்றத்தைச் செய்தனீர்?''

உங்களுக்கு அங்கை நடக்கிற விஷயம்ஒண்டும் தெரியாது... எல்லாரும் சண்டைக்காறியள் அலுவல் உருப்படியாகச் செய்யமுடியாது.''

''அப்படிஒன்றும் செய்யமுடியாது. உம்மாலை நடத்த முடியாது என்று நினைத்தால். நீர் எனக்கு முன்னரே அறிவிச்சிருக்கலாம்தானே... இவ்வளவு காலமும் குழப்பங்களை எனக்குச் சொல்லாமல் விட்டது உம்முடைய பிழை.''

''இப்ப நீங்கள் சொல்லுறதைப் பார்த்தால் ஏதோ நான்தான் எல்லாத்துக்கும் காரணம் எண்டு சொல்லுற மாதிரி எல்லோ கிடக்கு...'' —அரசகேசரியின் வார்த்தைகளில் சூடு ஏறியது.

''அதுசரி, நாலாம் ஐஞ்சாம் காணியளுக்குத் தண்ணீர் கொணடு போகப்பூட்டிய எஸ்லோன் பைப் துண்டுகள் ஒன்றும் அங்கை இல்லை... அவை எங்கை வைச்சிருக்கிறீர்?''

''அது கழட்டி அங்கைதான் வைச்சிருக்கு''

''எங்கை வைச்சிருக்கிறீர்?''

''ஸ்ரோரிலைதான் கிடக்கு.''

''ஸ்ரோரிலை இல்லையாமே... கனகலட்சுமியின் கடையிலை கொண்டுபோய்ப் போட்டிருக்காம்''

''ஓ... அது... இரண்டு பைப் கொஞ்சம் நீளம் கூடியது. அந்த இரண்டுதான் அங்கை கிடக்கு. ஸ்ரோரிலை வைக்க முடியாது. கனகலட்சுமியின் கடையிலை கிடந்தால் என்ன? நான்தானே பொறுப்பு.

''டிஓ, அரசாங்கச் சொத்துக்களைத் தனியார் பாதுகாப்பிலை கொண்டு போய் வைப்பது ஒழுங்கில்லை... [illegible]

பொறுப்பு என்ற விஷயம் எனக்கு மட்டுமல்ல, எல்லாருக்கும் தெரியும். ஆனால் நீர் செய்தது பிழை. நாளைக்கு அந்தச் சாமான்கள் களவு போனால் யார் பொறுப்பு?''

''இப்ப ஏன் 'களவுபோற கதையைப்பற்றி கதைப்பான்? அது நான் பொறுப்பு ஏற்றனான் கவனிப்பன்தானே?

''டிஓ, நீர் இப்படி ஏறுக்கு மாறாக மறுமொழி சொல்ல வேண்டாம். நான்இப்ப என்னுடைய அறிக்கையையும் இந்தப் பதிவுப் புத்தகத்தையும் அரசாங்க அதிபருக்கு அனுப்புகிறன். நீர் அங்கை போய்க் கதையும். சரி, நீர் போகலாம்.''

உதவி அரசாங்க அதிபர் கோபத்துடன் கூறினார்.

''நீங்கள் தாராளமாய் அனுப்புங்கோ... அது நான் மறுமொழி சொல்லுவன்.''

அரசகேசரி இறுமாப்புடன் சொல்லிவிட்டு எழுந்துபோய் விட்டான்.

அரசகேசரியின் பேச்சு வார்த்தைகள் பதிவுப் புத்தகம் பேணப்பட்ட முறை யாவும் உதவி அரசாங்க அதிபருக்கு மனத்தில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டது. வழக்கமாகவே அரசகேசரி தன்னை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை என்ற ஆத்திரம் கொஞ்சநாட்களாய் அவருடைய மனத்தில் வேரூன்றி இருந்தது. பெண்கள் திட்டத்தில் தான் சேகரித்த விபரங்கள், வாக்குமூலங்கள், பதிவுப் புத்தகம் யாவற்றையும் அரசாங்க அதிபருக்குத் தானே நேரில் கொண்டு போய்க் கொடுத்து அரசகேசரியை உடன் இடமாற்றம் செய்யும்படி கூறிவிட்டு வந்து விட்டார் ஏஜிஏ.

அரசகேசரி இதைப்பெரிதும் எதிர்பார்த்தான்.

உதவி அரசாங்க அதிபர் தன்னை அழைத்துத் திட்ட வேலைகள் பற்றிக் கேட்ட அன்றிரவே கொழும்புக்கு ரெயில் ஏறி விட்டான்அவன். இரண்டு நாட்கள் நின்று மந்திரியைச் சந்தித்து, பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபரை உடன் இடமாற்றம் செய்ய வேண்டும் என இருநூறுபேர் கையொப்பம் இட்ட மகஜர் ஒன்றை அவரிடம் கையளித்தான்.

''நீங்கள் செய்ய வேண்டிய சகல வேலைகளுக்கும் முட்டுக் கட்டையாய் நிற்பார்!''

- இதுதான் அரசகேசரி உதவி அரசாங்க அதிபரைப் பற்றிக் கூறிய குற்றச்சாட்டு. தன்மீது வீண் பழி சுமத்தித் தன்னை இடமாற்றம் செய்ய அவர் அரசாங்க அதிபருக்குச் சிபார்சு செய்த கதையையும் வெகு உருக்கமாக எடுத்து மந்திரியிடம் கூறினான்.

''நீர் ஒன்றுக்கும்கவலைப்பட வேண்டாம். என்னை மீறி ஒரு அலுவலும் நடக்க நான் விட [illegible] அங்கை

யிருந்து மாற்ற நான் விட மாட்டன். வேணுமென்றால் ஏஜிஏ மாற்றத்திலை போகட்டும்.''

''அவர் எம்பியின்ரை ஆள் சேர்.''

''அரசகேசரி உந்தக் கதையை எனக்குச் சொல்ல வேண்டாம் அந்தத் தொகுதிக்கு நான்தான் அமைப்பாளன் எண்டு உமக்குத் தெரியுந்தானே. நீர் கவலையில்லாமல் போய் நடக்க வேண்டிய அலுவல்களைப்பாரும். மிச்சம் நான் பார்த்துக் கொள்ளுவன்.''

அரசகேசரி கவலை இல்லாமல் பூஞ்சோலைக்கு வந்து சேர்ந்து விட்டான். உதவி அரசாங்க அதிபர் அனுப்பிய அறிக்கை கிணற்றுக்குள் போட்ட கல் மாதிரி ஒன்றுமே நடக்கவில்லை!

மாறாக பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபருக்கு உடனடியாக இடமாற்ற அறிவித்தல் 'ரேடியோ மெசேச்' மூலம் கொழும்பிலிருந்து வந்தது!

எம்பி கோபத்தில் கத்திக் கொண்டு நின்றார்.

''பாம்புக்குப்பால் ஊத்தின மாதிரி இவனை ஆளாக்கி விட்டனே. எல்லாம் உன்னாலை வந்தவினை!'' பரமலிங்கத்தைப் பார்த்துக் கத்தினார், எம்பி.

''எனக்குத் தெரியாமல்தான் இவ்வளவு நாளும் இந்த வேலையள் நடந்திருக்கு சேர்''- பரமலிங்கம் மெதுவாகக் கூறினார்.

''அப்ப நீ இவ்வளவு காலமும் பூஞ்சோலையிலை நித்திரை கொண்டனியே? விசர்க் கதை கதைக்கிறாய்...''

''நான் உண்மையைத்தான் சொல்லுறன் சேர். அவன் மந்திரிக்குக் கூட்டம் ஒழுங்கு செய்தது, பெடியள் பெட்டையளை அங்கத்தவராக்கினது எல்லாம் சரியான முறையிலை ரகசியமான நடவடிக்கையாய்த்தான் செய்தவன்!''

''அவன் கெட்டிக்காரன். —அவனுக்கு மூளை இருக்கு. உங்களுக்கு.. எட இவனைக் கொண்டு போய் மந்திரிக்கு அறிமுகம் செய்துவைச்சனே... இப்ப எல்லோருக்கும் தலையிலை மிளகாய் அரைக்க போறானே.. !''

பரமலிங்கம் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தான்.

''சரி நீ போய் வாற சனிக்கிழமை பூஞ்சோலையிலை ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்! எல்லா ஆட்களுக்கும் சொல்லி வை. நான் வந்து எல்லாம் கவனிக்கிறன்''

பரமலிங்கம் இவ்வளவு காலமும் தனக்குப் பின்னால் திரிந்த இளைஞர்களை அவசரமாகச் சந்தித்தான். ஒவ்வொரு குறிச்சியிலும் எம்பியினுடைய ஆதரவாளர்கள் என்று சொல்லிக் கொண்டு இருந்த சில வயது வந்தவர்களை எல்லாம் சந்தித்தான். சனிக்கிழமை காலை கூட்டத்துக்குச் சகல ஒழுங்குகளும் செய்திருந்தான்.

காலையில் எம்பி ஜீப்பில் தனது காரியதரிசியுடன் வந்து சேர்ந்தார்.

கூட்டம் நடக்க ஏற்பாடு செய்திருந்த இடம் வெறிச்சோடிக் கிடந்தது. பரமலிங்கம் முகமெல்லாம் வெளிறிப் போய் நின்றான்.

பூமணியின் சகோதரன் 'முரட்டு மணியம்' நல்ல குடிபோதையில் வாசற்படியில் அமர்ந்திருந்தான்.

எம்பி ஜீப்பிலிருந்து இறங்கி வந்தார்.

''என்ன பரமலிங்கம், கூட்டம் என்ன மாதிரி...ஒரு ஆட்களையும் காணவில்லை...''

''அதுதான் சேர் எனக்கும் விளங்கவில்லை.. எல்லா ஆட்களிடமும் சொல்லி வைச்சனான்..'' - அவன் வார்த்தைகளை இழுத்தான்.

''உனக்குஎப்பஎல்லாம் விளங்கப் போகுது எண்டு கடவுளுக்குத்தான் தெரியும். நீ சரியாய் இருந்தால் இவ்வளவு அலங்கோலம் வந்திருக்காது.''

எம். பி. இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போது முரட்டு மணியம் எழும்பிக் கிட்டவந்தான்.

''தம்பி வாருங்கோ... இஞ்சை...இஞ்சை ஆர் பெரியவன்? கண்டவன் நிண்டவன் எல்லாம் பெரிய ஆட்கள்... அங்கை திட்டத்தை அவன் அரசகேசரி இழுத்து மூடப் போறான். நீங்கள் இஞ்சை நித்திரை கொள்ளுங்கோ...!''

அவனின் நடை தள்ளாடியது.

''மணியம் அங்காலை போ...!''-பரமலிங்கம் மணியத்தின் நெஞ்சில் கையை வைத்துத்தள்ள முயற்சித்தான்.

''எடடா கையை... நீ இஞ்சை என்னட்டைச் சண்டித்தனம் காட்டாதை... ஏலுமெண்டால் அவன் அரசகேசரியிட்டை போய் சண்டித்தனத்தைக்காட்டு!''

''பரமலிங்கம் சும்மா இரு ...அவன் வெறியிலை நிற்கிறான்.. நீ கொளுவி மரியாதை கெடாதை...!''

—எம்.பி. பரமலிங்கத்துக்கு கேட்கக் கூடியதாய்ச் சொல்லி விட்டு ஜீப்பில் ஏறிவிட்டார். காரியதரிசியும் மௌனமாய்ப் போய் ஏறிக்கொள்ள ஜீப் புறப்பட்டது.

''போங்கோ... இஞ்சை வராதேங்கோ...! இஞ்சை பெரியவன் அரசகேசரி தான்...!''

முரட்டுமணியம் போதையின் உச்சியில் நின்று கத்திக் கொண்டிருந்தான்.

பரமலிங்கம் வெட்கத்தினால் முகம் சிவக்க, தன்னுடைய மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டுபோய்விட்டான்.

பூஞ்சோலைக் கடைத்தெருவுக்கு பொருள்கள் வாங்க வந்தவர்கள் எல்லோரும் இந்தக் காட்சிகளைக்கண்டு தம்முள் கதைத்துக் கொண்டிருந்தனர்.

வேப்பமரத்தின் கீழ் அமைந்திருந்த 'தேவிவிலாஸ்' தேநீர்க் கடையினுள் மறைந்திருந்து நடப்பனவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அரசகேசரி ஒரு புன்சிரிப்புடன் வெளியே வந்து கடையின் ஓரத்தில் நிறுத்தியிருந்ததனது மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றான். அதையும் கடைத் தெருச் சனங்கள் கண்டனர்.

[வளரும்]

## விடிவுதான் எப்போது?

வறுமை... சூன்யம்...
விம்மல்... வேதனை...
இழப்பு... ஏக்கம்...
இன்று நம் வாழ்வின்
இருளின் கூறுகள்
என்றுதான் விடியும்
என்றுதான் ஒளிரும்

★

கூந்தல் கலைந்து
முக்காடிட்டு..
வெண் புறாக்களாய்
விதவைப்பூக்களாய்
உதிர்ந்த பெண்கள்..
இறக்கும் இளமை
ஏங்கும் முதுமை
உயிரோட்டமற்ற
உயிரின் உதிர்வு...
மயான பூமியில்
மரணிக்கும் ஜனனங்கள்

★

ஏவி விட்ட
மரணத் துயரங்களின்
கொடுமைகளுக்கும்
வறுமைத் தீயில்
வறண்டு கிடக்கும்
மானிடர்க்கும்
விடிவுதான்..?

நாவாந்துறை
டானியல் சவுந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவண்ணத் தேர்ச்சியிருந்தால் எம்மண்ணிலும் சிறப்பாக வாழலாம்!

நா. மாணிக்க இடைக்காடர்

சுமார் முப்பது ஆண்டுகளுக்குமுன் ஔவை சண்முகம் சகோதரர்களின் நாடகக்குழு இலங்கை வந்திருந்தது. அப்பொழுது பம்பலப்பிட்டியில் ஒரு இந்துகல்லூரி தாபிப்பதற்கு பணம் சேகரிக்க உதவுவதற்கு இக்குழுவினர் வந்திருந்தனர். ஒருநாள் மத்தியான போசனத்திற்கு இந்த குழுவிலுள்ள இருபத்தைந்து பேரையும் எங்கள் இல்லத்திற்கு அழைத்தோம். உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது ''இலங்கையில் தமிழ் இனம் என்ன கஷ்டப்பட்டாலும் பிள்ளைகளை நன்கு கல்விகற்க பெற்றோர் எல்லா வசதியும் செய்து கொடுக்கிறார்கள்'' என நான் கூறினேன். அதற்கு சண்முகத்தின் மருமகன் சிவதாணு ''இது போதாது ஐயா கல்வியுடன் ஏதாவது ஒரு கைவேலையையும் பழகியிருக்க வேண்டும்'' என்று கூறினார். இவர் சொல்லும் பொழுது எனக்கு அவ்வளவு தூரம் விளங்கவில்லை. ஆனால் வயது கூடக்கூட உலக அனுபவம் வரவர சிவதாணு கூறியதின் முக்கியத்துவத்தை அறிந்தேன்.

### சிறுதொழிற்சாலைகள்

சமீபத்தில் ஒரு ஜெர்மன் சஞ்சிகையை வாசித்தேன். இங்கே பல அற்புத கருத்துக்களை கண்டறிந்தேன். மேற்கு ஜெர்மனியில் பெரிய தொழிற்சாலைகள் உண்டென்று அறிந்தேன் ஐந்து இலட்ச சிறு தொழிற்சாலைகள் இயங்குகின்றன. ஒருதொழிற்சாலைக்கு சராசரி எட்டு ஆட்கள் வேலை செய்வதால் நாற்பது லட்சம் மக்கள் தங்கள் கைவன்மையால் சீவிக்கிறார்கள். இந்த சிறுதொழிற்சாலைகளில் இயந்திரமல்ல முக்கியம்; மனிதனே முக்கியம் பெரிய இயந்திரங்களுக்கு மனிதன் ஒரு இயந்திரமாக வேலை செய்கிறான் ஆனால் சிறு தொழிற்சாலைகளில் மனிதன் சிறு ஆயுதங்களை உபயோகித்து தனது வன்மையால் கடமையாற்றுகிறான்.

உதாரணமாக பற்றிக் துணியை எடுத்துக் கொள்ளுவோம், கைவேலையாலும் தயாரிக்கிறார்கள். இயந்திர மூலமாகவும் தயாரிக்கிறார்கள். ஆனால் பெறுமதியான பொருள் என்றால் கைவேலையால் தயாரித்த துணியே. இங்கே ஒரு மனிதனின் கைவன்மையை காணலாம். இதுபோல் பல பொருள்கள் உண்டு எந்த நாட்டிற்கும் பெரிய தொழிற்சாலைகள் தேவை. அதேபோல் சிறு தொழிற்சாலைகளும் தேவை. எங்களுக்கு தற்போதைய சூழ்நிலையில் சிறு தொழிற்சாலைகள் கூடத்தேவை. இங்கே முதலாளி தொழிலாளி என்ற வித்தியாசம் கிடையாது. எல்லோரும் சமமாக வேலை செய்வார்கள், வாழ்வார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கது. மத்திய கிழக்கால் திரும்பும் எங்கள் பிள்ளைகளுக்கு உகந்தது சிறு தொழிற்சாலையே. அங்கே என்ன கலையை கைவேலையை கற்றார்களோ அதை இங்கே கற்பித்து மற்றவர்களுக்கும் உதவிச் சிறப்புடன் வாழலாம்.

இரு வாரத்திற்கு முன் நான் திருச்சி சென்றிருந்தேன். பல பல சிறு தொழிற்சாலைகள் இருக்கும் இடத்தை பார்வையிட்டேன். இதை எட்டு ஆண்டுகளுக்கு முன்பும் பார்த்திருக்கிறேன். திருச்சியிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இந்த இடத்தில் இருவித சிறு தொழிற்சாலைகளுண்டு. ஒரு வித தொழிற்சாலைகளில் பெரிய தொழிற்சாலைகளுக்கு தேவையான சிறு இயந்திர பகுதிகளை தயாரித்துக் கொடுக்கிறார்கள். ஆங்கிலத்தில் கூறுவதென்றால் ''These are feeder factories for large factories'' மற்ற வித தொழிற்சாலைகளின் பொருள் செய்து முடிந்தவுடன் சந்தைப்படுத்த கூடியவை.

### ஒரு தொழிற்சாலை ஆரம்பம்

இந்த சிறு தொழிற்சாலைகளில் ஒன்று ஓரளவில்எனது மகளின் வெள்ளவத்தை வீட்டில் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்த விருந்தால் தாபிக்கப்பட்டது. நாங்கள் அக்காலத்தில் மலேசியாவில் இருந்து விடுமுறைக்கு வந்தோம் அப்பொழுது மலேசியாவில் சிற்றுண்டியாய் உண்ணும் [Agar-agar] அகார் - அகார் என்ற கடல் பாசியிலிருந்து [Sea - weed] தயாரிக்கும் உணவை வந்த நண்பன் ஒருவருக்கும் அவர் குடும்பத்தினருக்கும் கொடுத்தோம். வந்த நண்பன் இந்த உணவு என்ன என்று வினவியதும் நான் இது கடல் பாசியிலிருக்கும் ஒரு சாதி தாவரத்திலிருந்து தயார் செய்வது என்றும் இதில் சத்துணவு நிறைய உண்டென்றும்கூறினேன், ஜப்பானியமக்களின் உணவில் ஒன்றென்றும் சொன்னேன். இதற்குப் பிறகு இவர் கொழும்பிலுள்ள கடற்பாசியை நன்கு ஆராய்ச்சி செய்து திருப்தியடைந்து திருச்சியில் ஒரு சிறு தொழிற்சாலையை ஆரம்பித்தார். 2 ஆண்டுகளுக்கு முன் திருச்சி சென்றதும் தொழிற்சாலைக்குத் தேவையான பாசி இராமேஸ்வரப் பகுதியிலிருந்து வருவது போதாதென்று கூறப்பட்டது. இதன்பின் நான் யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு எங்கள்பகுதியிலுள்ள பாசியை [Sample] அனுப்பினேன். திருச்சி நண்பனுக்குத் திருப்தி அளித்தது ஆனால்தற்போதைய நிலையில் யாழ்ப்பாணமிருந்து இப்பாசித் தாவரத்தை அனுப்ப முடியாத நிலையிலிருக்கிறது. இந்த உதாரணத்தைக் கூறுவதின் காரணமென்னவென்றால் ஒரு சிறு விருந்தால் ஒரு தொழிற்சாலையே ஆரம்பிக்கப்பட்டது. இது போல நாங்கள் வாழ்க்கையில் பலதைக் காண்போம்கேட்போம்; ஆனால் போதியது சிந்திக்கிறோமாவென்பதுதான் கேள்வி?

### தொழில் நிபுணத்துவம்

தமிழ்நாட்டில் பூம்புகார் தாபனம் முன்வந்து கொண்டிருக்கிறது. இதனால் தமிழ் நாட்டுக்கைத்தொழில் படைப்புகளை பார்க்கக்கூடியதாயிருக்கிறது. நஷ்டமில்லாமல் பல கிளைகளுடன் முன்வருகிறது. சமீபத்தில் வடஇந்தியாவிலும் கிளைகள் தாபிக்க திட்டமிட்டிருக்கிறார்கள். பூம்புகார் போன்ற தாபனம் தான் எங்கள் கற்பக நிலையம். கற்பகம் போன்ற தாபனங்களை நாங்கள் வெளிநாட்டில் தாபிக்கிறதற்கு நல்ல தரமுள்ள பொருள்களை தயாரிக்கவேண்டும். பட்டு புடைவைகளுக்குக் காஞ்சியும், அப்பளத்திற்குக் கல்லிடைக்குறிச்சியும் போல யாழ்ப்பாணம் எந்தப்பொருளுக்கு உலகில் நல்ல பெயர் வாங்கப்போகிறது? தனிஇலங்கைக்குள் விற்பதைக் குறிக்கோளாய் வைக்காமல் உலகிலே பல பாகங்களில் விற்கப் பார்க்கவேண்டும். தமிழர் உலகில் பல பாகங்களில் வசிக்கிறார்கள். இவர்கள் எங்கள் உற்பத்திப் பொருள்களை விற்பதற்குக் கட்டாயம் உதவி செய்வார்கள். நாங்கள் தரமுள்ள பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும். இதற்குத் தொழில் அனுபவம் நிறைந்தவர்கள் ஆழ்ந்து, யோசித்து புத்திமதி கொடுக்கவேண்டும்.

எந்த எந்த பொருள் எங்கள் சூழ்நிலையில் உற்பத்தியாக்கலாமென்பதை அறியவேண்டும். இதற்கு எங்களிடம் என்ன வளம் உண்டு என்பதை யோசித்து எந்த விடயத்தில் நாங்கள் மறுநாடுகளிலும் பார்க்க விசேடமாக எங்கள் கை வன்மையை காட்டமுடியுமோ என்பதை யோசித்து திட்டமிடவேண்டும்.

காஞ்சியையும் கல்லிடைக்குறிச்சியையும் பற்றி குறிப்பிட்டேன். இந்த இருபகுதிகளையும் பற்றிச் சில குறிப்பு எழுதுவது உசிதமென்று நம்புகிறேன். காஞ்சி நூற்றாண்டுகளாக அல்ல ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பட்டுப் புடைவைக்குப் புகழ்வாய்ந்தது. பல ஆண்டுகளுக்கு முன் காஞ்சி சென்றபொழுது குளக்கரையில் ஒரு பத்துவயதுப் பையன் மிக விலையுயர்ந்த பட்டுப்புடைவைக்கு கிடாரத்தில் நீர் கொதிக்கவிட்டுச் சாயம்போட்டுக் கொண்டிருந்தான். நாங்கள்மோட்டாரிலிருந்துஇறங்கி ''தம்பி இப்படிப்பட்ட விலை பெற்ற பட்டுடன் வேலைசெய்ய எப்படி அனுமதித்தார்கள்'' என வினவியதற்கு அவன்பதில் ''கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும். அதுபோல் காஞ்சியில் எல்லோருக்கும் இந்தத் தொழிலும் இதன்நுட்பமும் தெரியும்'' என்றான். ஆங்கிலத்தில் கூறுவதாயின் இங்கே வசிக்கும் மக்கள் எல்லோரும் பட்டுச்சேலை தயாரிப்பில் நிபுணர்கள். இதுபோல் நாங்களும் ஏதாவது ஒரு தொழிலில் நிபுணத்துவம் பெறவேண்டும்.

### வீடுதோறும் சிறுதொழில்

கல்லிடைக்குறிச்சி அப்பளமென்றால் தமிழ்நாட்டில்மட்டுமல்ல முழு இந்தியாவிலும், அரேபியாவிலும், அமெரிக்காவிலும், லண்டனிலும் நல்ல பெயர் உண்டு. தாமிரபரணி ஆற்றங்கரைத்தண்ணீர் அப்பளத்திற்கு தனி ருசி கொடுக்கிறது. இந்தக் கிராமத்தில் பதினெட்டுவீதிகள் ஒவ்வொரு வீதியிலும் ஒவ்வொரு வீட்டிலும் அப்பளத் தயாரிப்புவேலையில் ஈடுபடுகிறார்கள். சுமார் 1500 பெண்கள் இந்தத்தொழிலைச் செய்கின்றனர். அதிகமாக பெண்கள்தான் ஈடுபடுகிறார்கள் ஆண்டாண்டு காலமாக இங்குள்ளவர்கள் இதேதொழிலைச்செய்வதால் அனுபவமிகுதியால் நல்லமுறையில் உருப்பெறுகிறது அப்பளம். முழுக்கமுழுக்க கையாலேயே செய்யப்படுவதால் அனுபவம் மிக்க கைப்பக்குவமும் சேர்ந்து இன்னும் சுவை பெறுகிறது. நாங்களும் இதுபோல் வேம்பு மிகுதியாயிருக்கும் பகுதிகளில் வடகம் செய்ய இயலாதா?

இப்படிப்பட்ட விடயங்களுக்கு இது தகுந்த தருணமா வென்ற கேள்வி எழுப்பலாம். இதற்கு என் பதில் ''ஆம்'' ஏனென்றால் எப்பொழுதோ இப்பொழுது இருக்கும் இக்கட்டான நிலைநீங்கும். நீங்கும் பொழுது என்ன என்னசெய்ய வேண்டுமென்று யோசிப்பதிலும் பார்க்க இப்பவே யோசித்து வைத்தால் நல்லது. அத்துடன் இக்கட்டான நிலையிலும் சில கருமங்களைச் செய்யலாம். ஒருவிவேகமான இனம் விவேகமாக எப்பொழுதும் நடந்துகொள்ளவேண்டும்.

### இங்கும் செய்யலாம்

பனை ஓலையிலிருந்து பாய், கடகம், சித்திரமான பெட்டி, கொட்டப்பெட்டி முதலிய பொருள்களையும், தரமுள்ள பனங்கட்டி போன்றதும் என் மனதில் தோன்றுகின்றன. நான் கூறிய அகார், அகார் ஏன் நாங்களும் செய்யக் கூடாது! கடலட்டை பிறநாடுகளில் தேவைப்படுகிறது. பெரிய இறாலும் தேவைப்படுகிறது. இப்படிப் பலதையும் யோசிக்கலாம். ஆனால் இது ஒரு நிபுணர் குழுவின் ஆற்றலைப்பொறுத்தது. தனிநிபுணர்களிலும் பார்க்கத் தொழிற்சாலை அனுபவமுள்ளவர்களும் சந்தைப்படுத்துவதில் அனுபவம் உள்ளவர்களும் சேர்ந்து ஆலோசித்தால் நடைமுறைப்படுத்தக்கூடிய கருமங்களின் பட்டியல் ஒன்றைப் பொதுமக்கள் முன் வைக்கலாம். இது தற்சமயம் எங்களுக்கு இன்றியமையாததேவைகளில் ஒன்று என்று கூறினால் மிகையாகாது.

## அன்னத் தோணி

அன்னத் தோணி வருகுது
அன்னத் தோணி வருகுது
முன்னும் பின்னும் ஆடி ஆடி
சின்னத் தோணி வருகுது

பட்டு வெள்ளைப் பூக்கள் போலவே
முட்டி முட்டிச் செல்குது
குட்டித் தம்பி கிட்டச் சென்று
தொட்டுப் பார்க்கச் சொல்லுது

முன்னே இரண்டு போகுது
பின்னே இரண்டு போகுது
பாலைப் போலவே வெள்ளையாக
நாலு தோணி போகுது.

அங்கும் இங்கும் அசைந்தசைந்தேன்
அன்னத் தோணி போகுது
அக்கா தம்பி அண்ணைக்கெல்லாம்
சொக்கா வாங்கப் போகுதா?

மெல்ல மெல்ல மெல்ல நீந்தி
அன்னம் எங்கு செல்குது
சொல்லிக் கொள்ள முடியாத
தூர தேசம் போகுதா?

— தென்மட்டுவில் சி. சதாசிவம்

## ஐயோ, யாழ். நகரை நரகமாக்குகின்றார்!

நேரிசை வெண்பா

அன்றாடு வீடுகளில் சேருகின்ற குப்பைதனை
நன்றாக ரோட்டோரம் நங்கையர்கள் — குன்றாகக்
கொட்டிக் குவித்தையோ! கூறுமுயர் யாழின்
கட்டழகைப் போக்குகின்றார் காண்.

வீட்டு வளவின்கண் மூலையி லோர்கிடங்கை
மேட்டினின் வெட்டியெங்கள் மெல்லியர்கள் - நாட்கணக்கில்
அன்றாடு சேருங்குப் பைகூளம் அத்தனையும்
நன்றாகப் போட்டுவரின் நன்று.

அதைவிடுத்து,
நல்லெழில்சேர் நாரியரும் நன்றிமிக்க நாய்களுமே
சொல்நகரின் சுத்தமதைப் போக்கியந்தோ! - அல்பகலாய்
யாழ்ப்பாண நன்னகரை யாண்டும் நரகமதாய்ப்
பாழ்படுத்து கின்றனரே பார்.

கவியரசு முருகசூரியன்.

## ஞாயிறு சிந்தனை

வண. பிதா வின்சன்ற் பற்றிக்

''நீங்கள் மகத்தானது என்று கருதும் ஒரு காரியத்துக்காக உங்கள் வாழ்க்கையை நீங்கள் பயன்படுத்த வேண்டும். நீங்கள் தேய்ந்த பொருளாக குப்பையோடு குப்பையாக எறியப்படுவதற்கு முன்பு அந்த மகத்தான காரியத்துக்காக உங்களைப் பயன்படுத்துங்கள். இதுதான்

### நீமனிதனைப் பிடிப்பவன் ஆவாய்

நீங்கள் செய்யவேண்டியது. அல்லாமல் உலகம் உங்களுக்கு எதுவும் செய்யவில்லை என்று சலித்துக்கொண்டு வேதனைகளுக்கும் துயரங்களுக்கும் உறைவிடமாகக் கூனிக் குறுகி வாழக்கூடாது'' என்கின்றார் அறிஞர் பெர்னார்ட்ஷா.

இயந்திரமயமாக்கப்பட்ட சூழலிலே, பணம், பொருள், தொழில், அதிகாரம், அந்தஸ்து போன்றனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்ற சமுதாயத்திலே இறைவனை மையமாக வைத்து வாழுகின்ற மனிதரைக் காண்பது அரிதாகின்றது. அழிந்து போகின்ற உலக செல்வங்களுக்காக உறவுகளைத்துறந்து, உண்மைகளை மறந்து, உரிமைகளைச் சிதைத்து வாழுகின்ற மனிதன் ஈற்றில் அழியாத இறைச் செல்வத்தையே இழந்துவிடுகிறான்.

இறைவன் வரலாற்றில் ஆரம்பத்திலிருந்தே மனிதனை நிறைவான வாழ்க்கைக்கு அழைக்கின்றார்; புதியதொரு வாழ்க்கை முறையினைக் காண்பிக்கின்றார்; நேரிய வழியினிலே வாழ் என்று கற்பிக்

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அழிவைத் தவிர்க்க தொழில் நுட்பக்கல்வி

எஸ். கே. ஏ. ஆனந்தன்

கல்வி - மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று. அது எல்லோர்க்கும் உடமையாக வேண்டும். ஆண், பெண் இரு பாலாருக்கும் கிடைக்க வேண்டும். கல்வி வாய்பினுக்குத் தடையாகப் பிறப்பிடமோ, மொழியோா, சாதியோ, நிறமோ, வறுமையே வரவிடக் கூடாது. கல்வி நல்வாய்ப்பு. அது மனித வளர்ச்சிக்கு வாய்ப்பு; சமுதாய முன்னேற்றத்துக்கு வாய்ப்பு; மாற்றத்திற்கு வாய்ப்பு. பொருளாதார வளர்ச்சிக்கும் வளத்திற்கும் கல்வியே துணை.

முன்னேறிய நாடுகளில் தொழில் வளம், தொழிற் கல்வி நெறிகள் மேலும் மேலும் அபிவிருத்தி பெறுகின்றன. உயர்கல்வித்துறைகள், தொழில் நுட்பக் கல்வி நெறிகளை கற்றோரைப் பொருளாதாரத்துறை ஏற்றுக் கொள்ளும் நிலைமை உள்ளது. ஆனல் நமது நிலை வேறு. நமது நாட்டுப்பொருளாதார நிலை மந்தமாகியுள்ளது. பொதுக்கல்வி, பல்கலைக்கழக கல்விகளைப் பெறுவதற்கான இட நெருக்கடி அதிகரிக்கின்றது. பொறுப்பேற்கும் வயது வந்தபிறகும், வேலை அனுபவமின்றி படித்த இளைஞர்களும் யுவதிகளும் முழு நேர வேலையில்லாதவர்களாக வாழ்வது அவர்களுக்கும் நல்லதல்ல; நாட்டிற்கும் நல்லதல்ல.

## முதலாம் உலக நாடுகள்

ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், சோவியத் ரஷ்யா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளின் முன்னேற்றம் தொழில் வளர்ச்சிகளுக்குநாட்டின் கல்வித்திட்டம் நன்கு திட்டமிட்டு, நாட்டின் அபிவிருத்தியில் மனித வலுஇணைக்கப்பட்டுஉருவாக்கபட்டதாகும். இந்த நாடுகளின் சிறப்பிடத்திற்கு; நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் தொழில் 'நுட்பக்கல்வி இன்றியமையாதது என்னும் கொள்கை உண்மையாகக் கைக்கொள்ளப்பட்டமையே ஆகும்.

## இந்தியாவில் ...

சுதந்திர இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தொழில் நுட்பக் கல்வி அவசியமானது என்பதை உணர்ந்து நிறைவுற்ற மூன்று ஐந்தாண்டுப் பொருளாதார திட்டங்களிலும் இக்கல்விக்கு நல்ல ஸ்திரமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையை நாம் மறந்துவிடக் கூடாது. இந்தியாவில் தொழில் நுட்பக்கல்வியை விரிவுடடுத்தவும் தேசிய அபிவிருத்தியின் செயற்பாட்டில் பூரண வெற்றியளிக்கும் பங்களிப்பைச் செய்யவும் ஒரு தனிக்கல்வித்துறையாக நெறிபடுத்தப்படுகின்றது.

தமிழ்நாட்டில் தொழில் நுட்பக் கல்வி வியத்தகு வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு மட்டும் 12 பொறியியற் கல்லூரிகள், 35 பல்துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரிகள் உண்டு. இதில் 3 மகளிர் தொழிற்பயிற்சிக் கல்லூரிகளும், 7 சிறப்புப் பல்துறைத் தொழிற்கல்லூரிகளும் அடங்கும். மேலும் 14 தொழில்நுட்ப உயர் நிலைப் பள்ளிகளும் செயற்படுகின்றன. இவற்றினை விட பல தனியார் தொழில் நுட்பக் கல்வி அளிக்கும் நிறுவனங்களும் உள்ளன.

## புதிய அணுகுமுறைகள்

இன்று புதியதொழில் நுட்பக்கல்வி நிலையங்களை உருவாக்குவதனை விடுத்து ஏற்கனவே இயங்கிவரும் இக் கல்வி நிலையங்களின் தேவைகளைப்பூர்த்தி செய்வதிலும் அவற்றின் தரத்தை உயர்த்துவதிலும் அதிக அக்கறை கையாளப்படுகின்றது. கடந்த நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களில் முக்கியத்துவம் கொடுத்துக் கற்பிக்கப்பட்ட பொறியியற்கல்வி— பொதுவியல், இயந்திரவியல், மின்னியல் போன்ற சிறப்புப் பொறியியற் கல்விகளுடன் நாட்டின் பொருளாதார விருத்திகளுக்கு ஏற்ற வேலை வாய்ப்பினை அடிப்படையாகக் கொண்டு விருத்தியுற்று வருகின்றது. மேலும் நவீன பொறியியற் கல்வியுடன் வேலை வாய்ப்பினை அடிப்படையாகக் கொண்ட பல சிறப்புத் தொழில் நுட்பக் கல்விப்பயிற்சிகளும் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

சாதாரண பட்டக்கல்வி பெற்றவர்கள், சாதாரண பட்டம்பெற்ற பொறிஞர்கள், மேலும் பல துறைகளில் சிறப்புப் பயிற்சிபெற்று (Post-graduate Degree holders) ஆகும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. டிப்ளோமா தொழிற் பயிற்சி பெற்றவர்கள்தொழிற் பயிற்சிக் கல்லூரிகளிலுள்ள இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி மற்ற தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான சிறிய கருவிகளைச் செய்து கொடுத்து அவற்றின் மூலம் வேலைவாய்ப்பும் வருமானமும் தமது தொழில் நுட்ப அறிவினை அபிவிருத்தி செய்யவும் கூடிய; 'ஊக்கமூட்டும் திட்டம் [Incentive Scheme) தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்லூரி, மதுரையில் முதலில் அறிமுகப்படுத்தி, நல்லமுறையில் பயன்படத்தக்கதாக அமைந்து இன்று வேறு பல கல்லூரிகளுக்கும் விருத்தியாக்கப்பட்டு வெற்றிகண்டுள்ளது.

திருச்சி, சென்னை ஆகிய இடங்களிலுள்ள தொழில் நுட்பக்கல்லூரிகளில் 'பயிலுங் காலத்திலேயே ஈட்டும் திட்டம்' [Earn while you learn] அறிமுகமாக்கப்பட்டு வெற்றி கண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இறுதியாண்டு இயந்திரவியல் பயிலும் மாணவர்கள் கல்லூரி நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் கல்லூரியிலுள்ள இயந்திர வசதிகளைப் பயன்படுத்தி வருமானமும், அனுபவத் தொழிற் பயிற்சியும் பெறுகின்றனர்.

தற்போது தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிறுவனங்கள், தொழில் நுட்பக்கல்லூரிகளுக்கும் இடையே ஒருங்கிணைந்த ஒத்துழைப்புமூலம் இக் கல்வித்துறையில் உள்ளமாணவர்கள்தொழிற்திறன், படிப்பு, வேலை அனுபவம், தொழிற் சாலைகளின் அமைப்பு விதிகள், தொழிலாளரின் ஒழுங்குமுறைகள் அறிவும் அனுபவமும் பெறுகின்றனர். இதுஇன்றைய வளரும் விஞ்ஞான யுகத்தின் புரட்சிகரமான முன்னேற்றங்களுக்கு ஈடுகொடுக்கவும் திடமாகத் தொழிலை மேற்கொள்ளும் சுய ஆற்றலையும் வளர்க்கும் பேறினைத் தருகின்றது.

## வரலாற்று ரீதியில் ...

பிரிட்டனின் கைத்தொழில் புரட்சியால் தோன்றிய தொழில்நுட்பக் கல்வித்துறை மேற்குலகின் கைத்தொழில் மற்றும் நவீன தொழில்துறைகளை முன்னேற்றம் செய்யும் வாய்ப்பினை அளித்தது. சோவியத் ரஷ்யாவின் தோற்றத்தால் தொழில் நுட்பக் கல்வி தனித்துவமான, ஆக்கபூர்வமான முதன்மை பெற்று உலகின் முதலாம், மூன்றும் உலக நாடுகளில் சிறப்பிடம் பெற்று வருகின்றது.

## இலங்கையில் ...

இலங்கையின் பொருளாதார அமைப்பில் கைத்தொழிலாக்கம் மற்றும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகள் பெயரவிலதான் உண்டு. நாட்டின் கல்வித்திட்டமே உறுதிபாடு அற்றது. அது அரசியல் கட்சிகளின் போக்கினுக்குஏற்ப அல்லற்படுகிறது. இந்த நிலையில் இன்று நமது நாட்டில் 27தொழில்நுட்பக் கல்லூரிகள் உண்டு. இவற்றில் மருதானை தொழில்நுட்பக் கல்லூரியும், ஹாடி தொழில் நுட்பக்கல்லூரியும் மொரட்டுவ பல்கலைக்கழகமுமே உயர்தொழில் நுட்பக்கல்வியின் தனித்துவமான கல்வி நிறுவனங்கள் இந்த 27 தொழில் நுட்பக்கல்லூரிகளில்; கொக்குவில் தொழில்நுட்பகல்லூரி [யாழ்ப்பாணம்] கன்ஷ்ட தொழில் நுட்பக்கல்லூரி சம்மாந்துறை இரண்டுமே தமிழ்மொழியில் கல்வி வழங்கும் நிறுவனங்கள் மருதானை தொழில்நுட்பக் கல்லூரி, ஹாடி தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவையில் மட்டுமே ஆங்கிலமொழி கற்கைகள் சில உள்ளன. மிகுதி சிங்களமொழிப் போதனை நிறுவனங்களாகும்.

இத்தொழில்நுட்பக் கல்லூரிகள் இலங்கையின் நடைமுறைக் கல்வித்திட்டத்தின் எட்டாந்தரம், க. பொ. த. [சாதாரணம்], க. பொ. த. [உயர்தரம்] ஆகிய வகுப்புகளுடன் பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டவர்களுக்கு மீண்டும் கல்விபயில இடம் அளிக்கும் கல்வி நிறுவனங்களாகவே உள்ளன. இக்கல்லூரிகளில்: தராதரப்பத்திர தொழிற்பயிற்சிகள், தொழிற் கற்கைநெறிகள்- டிப்ளோமா கற்கை நெறிகள் போன்றவையே உள்ளன. இத்தொழில் நுட்பக்கல்வித் திட்டம் நாட்டின் பொருளாதாரத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் ஒருங்கிணைப்புக் கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படையாகும்.

மேலும் நமது நாட்டில் உள்ள தனியார் தொழில் நுட்பக்கல்வி நிறுவனங்கள் பெருமளவுக்கு வர்த்தக நோக்கில் இயங்குபவையாகும் இங்கு பெருமளவு பணம் அறவிடப்பட்டே போதனைகளைத் தொடரமுடியும். இவற்றோடு ஒப்பிடுகையில் இலங்கை அரசின் 27 தொழில் நுட்பக் கல்லூரிகளில் முழுநேர வகுப்புக்கள், இலவசமாகவும் பகுதிநேர வகுப்புக்கள், குறைந்தளவு கட்டணத்தில் கல்வி கற்பிக்கும் சலுகையும் அரசின் தராதர அங்கீகாரத்தையும் கொண்டிருப்பதே நன்மையாகும்.

இலங்கையின் தொழில் நுட்பக் கல்விக் கொள்கையில் தேசிய அபிவிருத்தியும் நாட்டின் ஆற்றல் மிகு மனித வளமும் நன்கு இணைக்கும் திட்டம் ஒருங்கிணைக்கபட வேண்டும். நவீன விஞ்ஞானயுகத்துடன் நாமும் வளர்ச்சியடைவதை செய்யும் தொழில் நுட்பக்கல்வி மிகவும் அவசியமாகும்.

# காடுகளை அழிக்காதீர்

பூமிக்குத் தேவையான பிராண வாயுவைக் காடுகள் தான் கொடுக்கின்றன. மரத்திலிருந்து சுமார் 20,000 விதமான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நிலம், நீர் முதலிய மூலப்பொருள்களின் கிரியைகளைக் காடுகள் கட்டுப்படுத்துகின்றன. சில அம்சங்களில் உலக மாகடலோடு ஒப்பிடக்கூடிய சைபீரியக் காடுகள் இதில் மிக முக்கிய பங்காற்றுகின்றன. சைபீரியக்காடுகளின் பரப்பளவை விட உலகத்தில் பெரும் பகுதிகளின் சுற்றுப்புறச் சூழல் மீது அது ஏற்படுத்தும் விளைவுகள் முக்கியம்.

உலகத்தில் காடுகள் பயன்படுத்துவது மிகப்பெரிய முக்கியத்துவம் பெற்றுவிட்டது. உலகில் ஒவ்வொரு நாளும் சுமார் 200 கோடி பேர் உலக மக்கள் தொகையில் சுமார் 45 சதவிகிதத்தினர், விறகாக எரிக்க மரங்களை வெட்டுவதாக எகிப்தைச் சேர்ந்த சுற்றுப்புறச் சூழல் நிபுணரான பேராசிரியர் முகம்மது சுல்தான் கூறுகிறார். சென்ற 20 ஆண்டுகளில் வெப்ப மண்டலக்காடுகளில் சுமார் 3 ல் ஒரு டங்கு அழிந்து விட்டது.

ஆபிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் பெரும் பகுதிகளில் காடுகள் அழிந்து பாலைவனமாகிவட்டன.

காற்றில் நச்சுக் கலப்பது உலகு தழுவிய முக்கிய பிரச்னை யாகும். நைட்ரஜன் டயொக்சைட் என்ற இரசாயனப் பொருளும் கந்தகக் கலவைப் பொருள்களும் கலந்த "திராவக மழை" எனப்படும் மழையினல் காடுகள் அழிகின்றன. இதுவரை மேற்கு ஐரோப்பாவிலும், மத்திய ஐரோப்பாவிலும் உள்ள காடுகளில் சுமார் 20விகிதம் இந்த "திராவக மழை" யால் அழிந்துவிட்டன. அதிகரித்துவரும் இந்தப்போக்கைத் தடுத்து நிறுத்துவது கடினம். இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழி என்ன? சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கப் பயன்படும் சிறந்த தொழில் நுட்பங்களைக் கையாள்வதும் பிரத்தியேகமர வகைகளை நட்டு வளர்ப்பதும் தான் இதற்கு உள்ள வழி. ப்ளோரின் என்ற ரசாயனப் பொருளை எதிர்க்கும் ஆற்றல் உடைய ஆமூர் வார்ச் என்ற மரவகையைச் சைபீரிய விஞ்ஞானிகள் ஆராய்ந்து இப்படி வளர்ப்பதற்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். அலுமினியத் தொழிற்சாலைகள் உள்ள இடங்களில் அந்த மரங்களை நடலாம் என்பது அவர்களுடைய ஆராய்ச்சிகளிலிருந்து தெரிகிறது.

காடுகள் அழிவதைப்பற்றி மேலை நாடுகளில் பெரிதும் பேசப்படுகிறது. ஆனல் இந்தப் பிரச்னை தீர்வதற்கு இதைப்பற்றிய உண்மைகள் தெரிந்து இருந்தால் மட்டும் போதாது. குறிப்பாக காடுகளைப் பாதுகாப்பதற்கான திட்டங்கள் இல்லாத வளர்முக நாடுகளில் முக்கியமாக சமுதாய முரண்பாடுகள் அகற்றப்படவேண்டும். இந்த நாடுகளில் அபூர்வமான மரங்கள் பெருமளவில் வெட்டி அழிக்கப்படுவதற்குக் காரணம் அங்கு நிலவும் கஷ்டமான பொருளாதார நிலைமைகள் தாம். மக்கள் தொகை அதிகரிப்பினல் இந்த நாடுகள் மீது இப்பிரச்னை திணிக்கப்பட்டுள்ளது. இதைத் தீர்ப்பதற்கு வேறு வழிகள் உள்ளன. நிர்வாக நடவடிக்கைகளின் மூலமும். சட்டங்களின் மூலமும் மட்டும் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. வறுமையை ஒழிப்பது, மக்களின் தொழில் நுட்ப அறிவை உயர்த்துவது முதலிய நடவடிக்கைகள் எடுப்பது அவசியம். இதைச் செய்தால் நன்றியுள்ள காடுகள் நமக்கு முழுமையாக பதிலுக்குப்பலன் அளிக்கும்.

ஆதாரம்:- நல்வழி

தொகுப்பு:- க. கனகராசா

# இலக்கியச்சந்தி

✶ யாழ்வாணன்

'நம் நாட்டின் எழுத்தாளர்கள், கலைஞர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்பட 'வேண்டும்' என்ற கொள்கையுடன் செயற்பட்டுவருபவர்கள் நாம்.

கலாசார அமைச்சு 1984-ம் ஆண்டில் பிரபல சிங்கள எழுத்தாளராகிய ஜி. பி. சேனநாயக்காவின் இலக்கிய சேவையைப் பாராட்டிச் சன்மானம் கொடுத்துக்கௌரவித்தது.

சிங்கள இலக்கியத்திற்குச் சேவையாற்றிய சிங்கள எழுத்தாளர்களைப் போலவே, ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முன்னேடியாகவிருந்து வரும் வடக்கு கிழக்கு, மலையக எழுத்தாளர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சுக்கு இலக்கியஅமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்தன.

அக்கோரிக்கை கிணற்றில் போட்ட கல் மாதிரி ஆகிவிட்டது

தற்போதும் கலாசார அமைச்சு கலை இலக்கியத் துறைகளில் ஈடுபட்டுள்ளோர்களின் வாழ்க்கை விபரங்களையும் அவர்களுடைய பணிகளையும் மற்றும் விபரங்களையும் கொண்ட பதிவேடுகளைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

கலாசார அமைச்சு கலை இலக்கியத்துறையில் ஏதாவது செய்யும் போது சிங்களக்கலை இலக்கியத்துறைக்கு மாத்திரமென்றே கணிக்கக் கூடியதாகவுள்ளது.

தமிழ் இலக்கிய கலைத்துறையை பிரதேச அபிவிருத்தி இந்து கலாசாரத்துறை தத்து எடுத்துக்கொண்டபின் தமிழ் இலக்கிய கலைத்துறை வளர்ச்சி கருதி என்ன செய்துள்ளது என்ற கேள்வி எம்மிடையே எழுவது நியாயமானது தான்.

கலாசார அமைச்சு முன் சாகித்திய மண்டலம் மூலம் ஆண்டு தோறும் ஆக்க இலக்கியத்துறை நூல்களுக்குப் பரிசளித்துவந்தது. அதை பிரதேச அபிவிருத்தி இந்துக்கலாசார அமைச்சு ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை ஒட்டுமொத்தமாக வழங்கி வருகின்றது. இதுதான் ஆக்க இலக்கியத்துறைக்கு வழங்கும் ஊக்குவிப்பா... ?

சில ஆண்டுகளுக்குமுன் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் விபரத்திரட்டு வெளியிடுவதற்கென எழுத்தாளர்களிடமிருந்து விபரங்கள் கோரப்பட்டதாக ஞாபகம்.

அவற்றிற்கு என்ன நடந்தது?.. ஒன்றும் புரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமாற்றத்தின் இராசிவாரியான பொதுப்பலன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

குரோதன வருஷம் தை மாதம் 10-ம் திகதி [23-1-86] அன்று வியாழக்கிழமை பின் இரவு கும்ப இராசிக்குள் பிரவேசித்துள்ள குரு பகவானின் பொதுப்பலன்.

## விருச்சிகம்

விசாகத்து நாலாங்கால், அனுசம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களைக் கொண்ட விருச்சிக இராசியில் ஜனனமானவர்களுக்கு இரண்டாமிடம் ஐந்தாமிடத்திற்கு அதிபதியாகிய வியாழபகவான் நாலாமிடமாகிய கும்பராசிக்குள் பிரவேசிப்பதால் இக்காலம் தாய் வழிச் சிறப்புக்கும் அவ்வழிச் சுகக்குறைவிற்கும் இடமுண்டு. மேலும் தனதானியச் சிறப்பும் பொருளாதார விருத்தியும் தென்படும்.

மேலும் இக்காலங்களில்தேக சுகக்குறைவிற்கும் இடமுண்டு. வியாபாரத் துறையிலும் சம சுகம் காணப்படும். 85-11-3ன் மேல சனிபகவான் ஜென்மமாகிய விருச்சிக இராசிக்குள் சஞ்சரித்து இருப்பதால் தொழில் துறைகளாலும் பிணக்குகள் தோன்ற இடமுண்டு. இக் காலங்களில் மேலொப்பமிடல், நம்பி நடத்தல், கொடுக்கல் வாங்கல் ஆகியன தவிர்க்கப்படல்நன்று. இல்லத்திலும் இருள் சூழ்ந்த நிலைக்கு இடமுண்டு. வாத ரோகங்களாலும் அவஸ்தைப் பட நேரிடும். காணித் தகராறுக்கும் இடமுண்டு. தன் தொழில் புரிவோர் - கதொழிலாளர்களுடன் பகைத்துக் கொள்ள வேண்டிவரும் இக் காலங்களில் வீண்விவாதங்களை தவிர்த்துக்கொள்வது நன்று. வாகனத்தொழில்ஈடுபடுவோர்களுக்கு நலிவுக்கு இடமுண்டு. புதிய தொழில் புரிவதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படும். திடீர் வேலை நிறுத்தங்களும் ஏற்படும். குடும்பத்திலும் சிறுபிணி வாட்டும் குதூகலமான சம்பவம் ஒன்றும் இடபெறலாம். மாணவ மாணவிகளுக்கு கல்வியில் மந்தநிலைக்கு இடமுண்டு. எனவே விடாமுயற்சி அவசியம் பேணப்படல் வேண்டும். விவாகமாகாதவர்களுக்கு இக் காலம் விவாகசுகமும் பொருள் வரவுமுண்டு. மேற்படி பலாபலன்களை சனி பகவான் 2½ வருடத்திற்கு செய்யுங் காலத்தில் வியாழ பகவானின் மாற்றம் நன்மையைச் செய்யும்.

எனவே இக் காலங்களில் யாபேரும் இஷ்ட தெய்வங்களைப் பூஜித்து தானதருமங்கள் செய்துவர நன்மை உண்டாகும்.

## தனுசு

மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் ஆகிய நட்சத்திரங்களைக்கொண்ட தனுசு இராசியில் ஜனன மானவர்களுக்கு ஜென்மாதிபன் நாலாதிபனுகிய குரு பகவான் மூன்றுமிடமாகிய கும்பராசிக்குள் பிரவேசிப்பதால் இக் காலங்களில் முன்னேற்றகரமான விடயங்களும் இடம்பெறும். சகோதர சுகத்துடன் சரீர சுகமும் உண்டு. திடீர் வரவு உங்களை வாழ்க்கையின் முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும். இறையருளும் இல்லிடச் சிறப்புமுண்டு.

1985-11-3ன் மேல் சனி பகவான் 12மிடமாகிய விருச்சிக இராசிக்குள் சஞ்சரித்திருப்பதால் இக்காலம் ஏழரைச் சனி ஆரம்பமான காலமாகும். எனவே அரசாங்கத் துறைகளில் பணி புரிவோர்களுக்குச் சிறப்புக்கு இடமுண்டு. புதிய தொழில் குறித்தும் சிந்தனை உருவாகும். திடீர் பணவரவுடன் பிறதேச பிரயாணங்களுக்கும் இடமுண்டு. நீண்ட காலம்எதிர்பார்த்திருந்த காரியமொன்று நடைமுறைக்கு வரும் தன்தொழில் புரிவோர்களுக்கு தனிச்சிறப்புண்டு. சிலருக்கு புதியவாகனம் கொள்வனவுசெய்வதற்கும்இடமுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சிநிலவும். இனசனக் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு. மாணவ மாணவிகளுக்கு கல்வியில் மந்த நிலை காணப்படும். இட மாற்றங்களும் ஏற்படும். சிநேகித வழியாலும் சஞ்சலப்பட நேரிடும். சகோதர வழியாலும் சச்சரவுகள் தலைதூக்கும். விவாகமாகாதவர்களுக்கு இக் காலங்களில் விவாகசுகமுண்டு. காதலர்களுக்கு நிறைவான காலமாகும். பொதுவாக இக் காலம் பெண்கள் சொந்தவிடயங்களில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

எனவே இக் காலங்களில் யாபேரும் பக்தி சிரத்தையுடன் குரு, சனி வாரந்தோறும் கிரக வழிபாடு செய்து இஷ்ட தெய்வங்களையும் வழிபட்டு வரல்நன்று.

## மகரம்

உத்தராடத்துப்பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை ஆகிய நக்ஷத்திரங்களைக் கொண்ட மகரராசியில் ஜனனமானவர்களுக்கு 12 மிடம் 3 மிடத்துக்கு அதிபதியாகிய குருபகவான் 2 இடமாகிய கும்பராசிக்குள் பிரவேசிப்பதால் இக்காலங்களில் தடைப்பட்ட விடயங்கள் நடைமுறைக்கு வரும். நண்பர்களாலும் நன்மையுண்டு. குடும்பவழிச் சிறப்புக்கும் இடமேற்படும். எண்ணிய காரியத்தில் நிறைவுக்கும் எதிர்பாராத வரவுக்கும்இடமுண்டு. இறையருளும் உண்டு. 1985 - 11 - 3 ல் சனி பகவான் பதினோராமிடமாகிய விருச்சிகராசிக்குள் சஞ்சரிப்பதால் தொழில் நலன், தொல்லைகள் நிவர்த்தி, பொன்பொருள் சிறப்பும் உண்டாம். மூத்தசகோதரங்களால் நன்மையும், முன்னேற்றப்பாதையில் வீறுநடை போடவும் இடமுண்டு. ஆளடிமை, அன்னிய பிரபுக்கள் உதவி இவற்றுடன் வாகன சுகம், வரவிலும் திருப்தி ஆகியன உண்டு. கைத்தொழில் புரிவோர்களுக்கு தொழில் விருத்திக்கு இடமுண்டு. திட்டமிடப்பட்டிருந்தவிடயமொன்று திடீரென நடைமுறைக்கு வரும். குடும்பத்திலும்சிறுசச்சரவு தோன்றி மறையும். வியாபாரிகளுக்கு லாபகரமான தொழிலில் முதலீடு செய்ய இடம் உண்டு. கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் நிவர்த்தியாகும் பிரிந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். மாணவ மாணவிகளுக்கு கல்வியில் முன்னேற்றமும் உயர்கல்வியில் நாட்டமும் உண்டு. தொழில் வாய்ப்புக்களுக்கும் இடம் உண்டு. பொதுவாக இக்காலங்களில் பெண்கள் வாழ்க்கையில் குறை கேட்க நேரிடும் அ[illegible] நன்று

மேற்படி பலன்களை சனி பகவான் 2½ வருடத்திற்கு செய்யுங்காலத்தில் வியாழ பகவானின் மாற்றம் மனதில் சில மாற்றங்களை உண்டுபடுத்தும்.

எனவே இக்காலங்களில் யாபேரும் குரு, சனி வாரங்களில் விரதமிருந்து, கிரக வழிபாடு செய்து இஷ்ட தெய்வங்களைப் பூஜித்து தானதருமங்களை செய்து வரல்நன்று,

## கும்பம்

அவிட்டத்துப்பின்னரை, சதயம், பூரட்டாதி, முன்முக்கால் ஆகிய நக்ஷத்திரங்களைக் கொண்ட கும்ப இராசியில் ஜனன மானவர்களுக்கு 11 இடம் 2 இடத்துக்கு அதிபதியாகிய குரு பகவான் கும்பராசிக்குள் பிரவேசிப்பதால் இக்காலம் நன்மையான காலமாகும். திருப்திகரமான வரவுகளுக்கும் இடமுண்டு. தேகசுகம் மத்திமம். தேடியது கிடைக்கும். தெய்வத்தின் துணையும்உண்டு. பொதுவாக இக்காலத்தில் எத்தொழில்புரிபவர்களுக்கும் அட்டாவதானம் வேண்டும். 1985 - 11 - 03 ன் மேல் சனி பகவான் பத்தாமிடமாகிய விருச்சிக இராசிக்குள் பிரவேசித்திருப்பதால் தொழில் விடயங்களில் திடீர் மாற்றங்களுக்கும் இடமேற்படும். தன்தொழில் புரிவோர்களுக்கு தரமானகாலமாகும். இக் காலங்களில்வாகன சுகம், வரவிலும் திருப்தியுண்டாம். தொழில் மாற்றம் அல்லது இருப்பிடமாற்றத்துக்கானவழி கோலப்படலாம். நீண்டகாலம் இருந்து வந்த எதிர்ப்புகளால் தாக்குதல்களுக்கும் இடமுண்டு. மேலும் அக்கினி ஆயுதபீடைகளுக்குரிய இடமிருப்பதால் அவதானம் வேண்டும். உங்கள் விடயங்கள் அனைத்திலும் இக்காலங்களில் எச்சரிக்கையாக நடந்து கொள்வது விரும்பத்தக்கது. தடைப்பட்ட காரியங்களும் நடைமுறைக்கு வரலாம். குறிப்பாக தொழில் துறையில் பங்காக கடமை புரிவோர் பிறரின் அவச்சொல்லுக்கு ஆளாக நேரும். இருப்பிடத்திலும் திடீரென வரும் வரவால் திகைக்க நேரும். இக்காலங்களில் மாணவ மாணவிகளுக்குப் பொறுமை வேண்டும். எதற்கெடுத்தாலும்சீறிவிழுவீர்கள். கல்விவிடயத்தில் பெரியோர்களின் ஆதரவுமுண்டு. முயற்சியாலும் முன்னேற்றம் காணப்படும். மணமாகாதவர்களுக்கு மணவாழ்க்கைக்கான முயற்சியும் மேற்கொள்ளப் படலாம்.

இவ்வாறு சனிபகவான் 2½ வருட காலத்திற்குப்பலன் செய்யும் வேளையில் வியாழ பகவானின் மாற்றம் திடீர் மாற்றங்களை ஏற்படுத்தும்.

எனவே இக்காலங்களில் யாபேரும் குருவாரம் சனி வாரந்தோறும் விரதம் இருந்து கிரகவழிபாடுசெய்து, இஷ்ட தெய்வத்தைப்பூஜித்துத் தானதருமங்கள் செய்து வரல்நன்று.

## மீனம்

பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நக்ஷத்திரங்களைக் கொண்ட மீனஇராசியில் ஜனனமானவர்களுக்கு ஜென்மாதிபன் பத்தாதிபன் ஆகிய குருபகவான் பன்னிரெண்டாமிடமாகிய கும்பஇராசிக்குள் பிரவேசிப்பதால் இக்காலம் எம்முறையைக் கொண்டவர்களானலும் நம்பிநடக்கக்கூடாதவாம். மேலும் மேல் ஒப்பமிடல், நம்பிநடத்தல், கொடுக்கல் வாங்கல் போன்ற விடயங்களில் முன்னெ சரிக்கையுடன் நடந்து கொள்வது நன்று. ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பங் [illegible]

1985 - 11 - 03 ல் சனிபகவான் 9 இடமாகிய விருச்சிக இராசியில் சஞ்சரி து இருப்பதால் இக்காலங்களில் பெரியவர் ஒருவருடன் கருத்து மோதல்களுக்கும் இடமேற்படலாம். பிதாவிற்கும் திடீர் சுகயீனங்களுக்கு இடமுண் . எனவே இக்காலங்களில் சிறுவருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கப்படல் வேண்டும். நீண்டகாலமாக இருந்து வந்த பணமுடக்கங்கள் தீரும் பகைத்தவர்களே மீண்டும் உறவுக்கு வருவார்கள். புத்திரவழியாலும் தனிச்சிறப்புக்கு இடமுண்டு. புண்ணிய காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். குடும்பத்திலும் நிலவிவந்த நெருக்கடிகள் தீரும். இறைவழிபாட்டிலும் ஆர்வம் ஏற்படும். கைத்தொழில் புரிவோர்களுக்கு திடீர் மன முறிவுகளுக்கும், இடமாற்றங்களுக்கும் இடமுண்டு. கணவன் மனைவியிடையே இடைக் காலப்பிரிவுக்கும் இடம் உருவாகும். மாணவ மாணவிகளுக்கு கல்வி நிலையில் திடீர் முறிவுக்கு இடம் இருப்பதால் சிந்தித்துச் செயல்படுவது நன்று. பொதுவாக இக் காலங்களில் இறைவிசுவாசமும் விடாமுயசிற்யும் வெற்றியைத்தரும். மணமாகாதவர்களுக்கு விவாக சுகத்துக்கும் திடீர் மனமாற்றங்களுக்கும் இடமுண்டு.

இவ்வாறு சனிபகவான் 2½ வருடத்திற்கு பலன் செய்யுங் காலங்களில் வியாழ மாற்றமும் நல்ல பலனை செய்யும்.

எனவே யாபேரும் குரு. சனி வாரங்களில் உபவாஸம் இருந்து கிரகவழிபாடு செய்து இஷ்ட தெய்வங்களையும் பூஜித்து தங்களால் இயன்ற தான தருமங்களைசெய்துவரல் நன்று.

# இவ்வாரம் எப்படி?

திருமலை க.வே.ரவீந்திரன்

### இன்று

மாதம் — தை

திகதி- 27 [1986 - 02-09]

கிழமை - ஞாயிறு

திதி-அமாவாசை காலை 7-16ன் மேல் பிரதமை.

நக்ஷத்திரம்- அவிட்டம் பின் இரவுவரை.

## மேடம்

கடமையில் தடைகள் தோன்றும். நஷ்டத்திற்குஇடமுண்டு. மனையில் பூசல்கள் தோன்றிமறையும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும். உடல்நலிவும் தோன்றும். பிணிக்கு இடம் கொடாதுநடக்கவும். நாவடக்கம் நன்று.

## இடபம்

அறிவுப்பசிக்கு தாராளமாக விருந்துகிடைக்கும். ஆராய்ச்சிகளில் ஆர்வம் பிறக்கும்,குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை தென்படும். வாகனச்சாரதிகள் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவர். தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும், மேலிடத்துச் சிபார்சும் கிடைக்கும்.

## மிதுனம்

குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தையளிக்கும். அடக்கம் வேண்டும். வசதிகளும் பெருகும். வாழ்க்கை வளமாகும். புத்திரவழியால் புகழும் கிடைக்கும். நண்பர்களிடமிருந்து வரவேற்புக் கிடைக்கும்.

## கடகம்

எதிலும் அவதானம் வேண்டும். வெளியிடத்துப் பயணம் வேதனையைத்தாலாம். எண்ணத்தின் தாக்குதல் நெஞ்சத்தைப்புண்ணுக்கும். பொறுமை வேண்டும். வயிற்றுக்கோளாறு தோன்றக்கூடும். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

## சிங்கம்

களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும், காதலர் வாழ்வில் கனகுஷியான வாரம். வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும். பிரமச்சாரிகள் வாழ்க்கையில் காதல் அரும்பும். புத்திரர் வழியாலும் மகிழ்ச்சியுண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர்.

## கன்னி

பணத்தைக் கொடுத்துபகையைச் சம்பாதித்துக்கொள்வீர்கள். தொழில் துறையிலும் சோர்வு தென்படுகிறது. நண்பர்கள் மூலம் புதிய தொல்லைகள் தோன்றும். நிதானபுத்தியுடன் நடக்கவும் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் வேதனைப்படுவீர்கள். பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

## துலாம்

கைகொடுத்து உதவுவதற்குத் தந்தை முன் வருவார். காரியசித்தி கிட்டும். நீண்ட நாள் எதிரிகள் மீண்டும் நண்பர்களாவார்கள், கடமையாற்றும் இடத்தில் ஒத்துழைப்புக்கிடைக்கும். பொதுப்பணி மூலம் புகழுக்கும் இடமுண்டு. அதிர்ஷ்டகரமான வாரம்.

## விருச்சிகம்

முயற்சியால் உயர்ச்சி உண்டு. விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நண்பர்கள் மூலம் புதிய தொடர்பு ஏற்படும். தொழில் துறையில் புதிய உத்வேகம் காணப்படும்.

## தனுசு

மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று அம்பலத்திற்கு வரலாம் குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். நண்பர்களும் காலைவாரி விடுவர். நிதானம் வேண்டும். மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். உள்ளத்தில் உவகைதுள்ளும். சகோதரபாசம் தலைதூக்கும். கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு.

## மகரம்

குறுக்கு வழித்தலையீட்டால் சட்டத்தில் மாட்டிக்கொள்ள நேரிடும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கை கண்காணிக்கப்படும். பொறுமையைப் பேணி நடக்கவும். கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். நிதி நெருக்கடியைத் தவிர்க்க மதிவழி நிற்கவும்.

## கும்பம்

கவலைகள் தாக்கும். சீறிவரும் கோபத்தை அடக்கவும். கொள்கையிற் கோணலால் நல்ல சந்தர்ப்பத்தை இழக்கநேரிடலாம். பிள்ளையொன்றின் பிணி கவலையைக் கொடுக்கும் அமைதியுடன் செயலாற்றவும்.

## மீனம்

இதயப்படுதாவில் இன்பக் கூத்து. சில சுபகாரியங்கள் நிகழும். கற்றதனால் பலன் கைமேல் கிடைக்கும். நுட்பமானவேலைகளில் ஈடுபடுவோர் போற்றப்படுவார்கள். பொதுதுறையில் சம்பந்தப்பட்டவர்களுக்குப் புகழ் குவியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிறுகதை

# கறிவேப்பிலை

● இ. சிவகுமாரன்

காலை வேளையின் வழமையான காட்சிகள்,, வீதியில் ஜனங்களின் நடமாட்டம். காகங்களின் கரையல்கள்; வாகனங்களின் பேரொலி.

பொன்னம்மா ஆச்சி தன் வீட்டுத் திண்ணையில் ஒரு சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டு வழமை போல் குந்தி விட்டாள். பொன்னம்மா ஆச்சியின் கணவர் - ஆறுமுகக் கிழவர் - ஆச்சி கொடுத்த தேநீரைப் பனங்கட்டியோடு குடித்துவிட்டுத் துவாய்த் துண்டைத் தோளில் போட்டபடி கிளம்பிவிட்டார்.

''நான் ஒருக்கா உதில சந்திவரை போட்டு வாறன்'' — தானும் ஒரு சுருட்டைப் புகைத்தபடி கிழவர் படலையைத் திறந்து கொண்டு போகிறார்.

''ம் . . மனிசி இனி குந்தின இடத்தை விட்டெழும்ப எப்படியும் ஒன்பது, பத்து மணியாகும்'' - கிழவர் தனக்குள் தானே கவலையுடன் முணுமுணுத்தபடி நடக்கிறார்.

★

பாடசாலைக்குப் போகும் சின்னஞ் சிறு பிள்ளைகளையே ஆசையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறாள் பொன்னம்மா ஆச்சி ஒரு பிள்ளை, பொன்னம்மா ஆச்சியைப் பார்த்துக் கள்ளமில்லாமல் சிரித்துக் கைகாட்டி விட்டுப் போகிறது. ஆச்சியின் கண்களில் காரணமில்லாமல் கண்ணீர் விளிம்பு கட்டுகின்றது.

'ம் ... முந்தி இவன் தம்பி குமாரும் இப்படித்தானே சின்னப் பெடியனாக இருந்தான். சின்னப்பிள்ளையாய் இருக்கேக்கில என்ன மாதிரி ஆச்சி, அப்பு வெண்டு எங்களில், உயிரையே வைச்சிருந்தான்!

'என்ர தங்கச்சி சாகேக்கில இவனுக்கு மூன்று வயசு தானே? பிறக்க முன்னமே அப்பனை விழுங்கினவன் எண்டு அவள் தாய்க்காறி எப்பவும் இவனைத் திட்டிக் கொண்டே இருப்பாள். அப்பவெல்லாம் அவனை நான் தானே பராமரிச்சன். கடைசியில தங்கச்சிக்கும் வியாதியெண்டு எமனு வந்திட்டுது. தாயில்லாத இவனைப் பிள்ளையில்லாத நான் கண்ணுக்குக் கண்ணு எடுத்து வளர்த்தனே, இப்ப இவன் என்னடா வெண்டால் ... ம் ... !'

— ஆச்சியின் கன்னங்களில் உப்பு நீரின் கோடு தெரிந்தது. அடிவயிற்றிலே ஆற்றுமையுணர்வு தீயாகத் தகித்துப் பெருமூச்சாகப் புகை விட்டது.

'சாப்பாட்டைக் குடுத்தாத் தின்னமாட்டான். நான் தான் தீத்தி விட வேணும். அப்பு புத்தகங்களை எடுத்துக் குடுத்துப் பள்ளிவரை கொண்டு போய்விட வேணும், இல்லாட்டி அண்டைக்குப் பள்ளிக்குப் போனபாடில்லை. இவ்வளவு பெரியவனு வளர்ந்த பிறகும் என்ர பிள்ளை என்ர மடியில் கிடந்து தானே நித்திரை கொள்ளுறவன். வேலையெண்டு கொழும்புக்குப் போனுன் பாவி, ஆள் அடியோட மாறிட்டானே. அப்பு, ஆச்சி எண்ட நினைவுதானும் அவனுக்கில்லாமல் போச்சே. கடவுளே! யாருக்கு சொல்லி என்ன ஆகப்போகிறது'' என்பது போன்றஇயலாத துயரத்தின் உருவம் பொன்னம்மாவின் மனதைப் பிராண்டிப் புண்ணுக்கியது.

''என்னெணை ஆச்சி உனக்கு வேற வேலையில்லையா? ஒவ்வொரு நாளும் காலமையில இப்பிடித் திண்ணையிலே குந்தியிருக்கிறியே? உனக்கென்ன விசரே'' — பக்கத்து வீட்டுச் சிவகாமி தான் வருகிறுள்.

''சிவகாமியே, வா வா இப்பிடி இதில் இரு. உவன் தம்பி குமாரிண்ட கடிதம் ஏதாவது வருதோ தெரியேல்லை. அதான் இதில் இருக்கிறன்''

''ஏனெணை கடிதம் வந்தா தபால்காரன் வந்து மணி அடிப்பான் தானே! உதில இருக்கிற நேரம் உள்ளுக்கிள போய் ஏதாகிலும் வேலையளைச் செய்து கொண்டு இருக்கலாமே ... ம் ... எங்கயணை ஆச்சி உன்ர வெத்திலைத் தட்டு ... ?'' ''வெத்திலையே ... ? ம் ... அங்க அந்த விருக்கில தானிருக்கு உனக்கு வேணுமே?'' ...

''ஓமணை ரெண்டு நாளா இந்த மனிசனிட்டை வெத்திலை வேண்டியாங்கோ எண்டு சொல்லி அலுச்துப் போனேன். மனிசன் வெத்திலை போட்டாத் தானே அவருக்கு வெத்திலை நினைவு வரும்''.

''ஓம்! ஓம்!'' என்று - ஆச்சி தலையை ஆட்டுகிருள் பார்வை மட்டும் அடிக்கடி படலையடியையே மேய்ந்து கொண்டிருந்தது.

''வெத்திலை போடாட்டி வாய் ஒரு மாதிரியாக இருக்கும். அதுதான் உன்னட்ட வந்தனுன். அப்ப ... வெத்திலைத் தட்டத்தை ... கொண்டரட்டேயெணை? என்னணை?''

ஆச்சி ''ஓம்'' என்று தலை அசைக்கிருள்.

சிவகாமி உள்ளே போய் வருகிருள். கையில் வெற்றிலைத் தட்டிருக்கவில்லை; வேறு பொருட்கள் தான் இருக்கின்றன.

''என்னணை ஆச்சி ... குசினிக்கிளை நிறைய முருங்கக்கரய் கிடக்கு? உந்த முத்தத்து மரத்தானே .. ? உனக்கும், அப்புவுக்கும் இவ்வளவும் என்னத்துக்கு? மிச்சம் தானே? நாளொரு ஆறு முருங்கக்காயைக் கொண்டு போறன், என்ன?''

ஆச்சி மௌனமாக தலையசைத்துவிட்டு, படலையைப் பார்த்துக் கொண்டிருக்கிருள்.

''ஆச்சிட்ட வெங்காயம் நிறையக் கிடக்கு. என்னட்ட ஒரு பல்லு வெங்காயம் கூட இண்டைக்கு கறிக்கு இல்லை. கொஞ்சம்கொண்டுபோறேன். பிறகு சம்பளத்திலே வேண்டித்தாறன். எனக்கு உன்னைத் தவிர வேறயாரணை இஞ்ச உதவிக்கிருக்கினம். உன்னட்ட தான், எல்லாத்துக்கும் ஓடியந்து பழகிப்போச்சு''

''மெய்யணை உனக்கொரு விசயம் தெரியுமே... உவள் சரஸ்வதின்ர பெட்டை பாமா வெல்லே..! அந்த மெக்கானிக் பெடியனோடை போட்டாளாம்''

''அப்படியா?'' ஆச்சியின் கேள்வியில் சுரத்தில்லை.

''இன்னும் ஏன் இந்தத் தபால்காரப் பெடியனைக் காணேலை'', ஆச்சியின் இந்தப் பரிதவிப்பு சிவகாமியை ஒன்றும் செய்யவில்லை.

''இப்ப ... இந்த வெள்ளனையில் தபால்காரன் வரவே போருன்? பத்துப் பதினொரு மணி செல்லும்; வழமையிலே அதுவும் றெயில் வரப் பிந்தினுப் பனிரெண்டு மணியுமாகும் அவன் வர ... அவ்வளவு நேரத்துக்கும் நீ இதிலேயே காவல் இருக்கப் போருய்? தபால் வந்தா ... தபால்காரன் வந்து மணியடிப்பானுச்சி. நீ உள்ளுக்கிளை வந்து மத்தியானத்துக்கு ஏதும் செய்யப்பார்''

''இல்லையடி சிவகாமி! இப்ப வாற தபால் காரப் பெடியன் புதிசு. அவனுக்கு எங்கட விலாசம் தெரியுமோ என்னவோ? விலாசம் தெரியாமல் கொண்டு போயிட்டானெண்டா என்ன செய்கிறது? இப்ப என்ன அவசரம்? மத்தியானம் ஒரு சோறும் - ஒரு கறியும் செய்யிறதுக்கு நேரமாயில்லே?''

''அது சரியணை ... உன்ர மோன் கடிதம் போட்டு எத்தனை நாளாகுது உனக்கு? எப்படியாம் பெண்சாதி? பிள்ளை ஏதும் பிறந்ததாமே? பொடிச்சி சிங்களப் பெட்டையெல்லே? உவனுக்கு ஏனிந்த குறுக்கால போன புத்தி?''

''எனக் கென்னடி தெரியும்? பிள்ளை பிறந்திச்சோ ... பெடியன்பிறந்திச்சோ எண்டு. பிள்ளையின்ர கடிதம் வந்தே ஆறேழு மாதமாகிறது.''

''உவன் என்ன பிள்ளை .. ? ஆறேழு மாதமா ஏன் கடிதம் போடாமல் இருக்கிருன்?''

''அவன்ர வேலையே பெரிய வேலை. அதோட கலியாணமும் கட்டிப்போட்டான். பிள்ளைக்கு என்னென்ன கரைச்சலோ யார் கண்டது? வேலைப் பிராதியில் கடிதம் எழுத நேரம் கிடைக்கேலைப் போல'' ஆச்சி அப்படிச் சொல்லித் தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொள்கிருளா? அல்லது அயலவர்களுக்கு முன்னிலையில் தன் மகனின் குற்றத்தை மறைக்கச் சொல்கிருளா?

''என்னணை பெரிய வேலை செய்யிருன். கடிதம் எழுத முடியாமல் . ஆ இல்லை, தெரியாமல்தான் கேக்கிறன். ஆச்சி, அப்புவெண்டு ஒரு இரண்டுவரி எழுதிப்போட அப்பிடி நேரமில்லையா? உதென்னெணை விசர்க்கதை அலம்பிருய்? எணை ஆச்சி ... உந்தக் காலத்துப் பெடியளே இப்படித் தானணை. பெண் சாதிமாரிட்டப் போய்ட்டு ஏதோ காணுததைக் கண்டது மாதிரி ... பெத்ததுகளையே மறந்து போடுவினம். நீயென்ன அவனைப் பெத்தனியோ? வளத்தனி தானே? உன்னைப்பற்றி அவன் ஏனணை நினைக்கப் போருன்?''

''சீ என்ர பிள்ளையை அப்படிச் சொல்லாதை. அவனப்பற்றி உனக்குத் தெரியாதே ? என்ர மடியில் கிடந்து வளர்ந்தவன். என்னையும் அப்புவையும் அப்பிடி லேசில மறக்கமாட்டான். ஒரு [illegible]தான் விடுகிறுளில்லையா எங்களோட்சேர என்னவோ தெரியேலை. ஆனு ... என்ர பிள்ளை மாறமாட்டான். அது எனக்குத் தெரியும்'' ஆச்சி தன்னைத் தானே தேற்றிக் கொள்வது போல் வீம்புடன் நம்பிக்கை காட்டினுள்.

''சரி யெணை உன்ர நம்பிக்கையை வீணு ஏன் கெடுப்பான்? ஆனு தெரியாமத்தான் கேக்கிறன் பெண்சாதிக்கு தெரியாமல் ஒரு கடிதம் அனுப்பக் கூடாதே? நீ என்ன அவனிட்ட காசு கேட்டு எழுதிறியே?''

''எனக்கென்னத்துக்கடி காசு' ஏதோ ... அவனுல் பாத்து அனுப்பினு அவன் உழைச்சதில் எனக்கு ஒரு ஐந்து ரூவா கிடைச்சா என்ர பிள்ளையின்ர உழைப்பெண்டு சந்தோஷமா இருக்கும்தான் அவன்ர பேரால ஒ கற்பூரக்கட்டி வேண்டி வைரவருக்குக் கொழுத்தேக்கில ரெண்டு சீலை, சுருட்டை வேண்டக்கில பெருமையா இருக்கும் தான். ஆனு நானுக் கேட்டு எதுவும் எழுகிறது இல்லையடி பிள்ளை. அவனு நினைச்சு அனுப்ப வேணும். அப்ப தான் எனக்கும் சந்தோசம். எனக்கென்ன காசுக்குக் கஷ்டம்? என்ர மனிசன்ர பென்ஷன் காசு எங்கள் ரெண்டு பேருக்கும் காணுதே ... ? ஏதோ ... பிள்ளையெண்டு வளத்த தோஷத்துக்கு ... பாழாப் போனநான் பாசம் வைச்சிட்டன். அது தான் நான் செய்த பெரிய பாவமாப் போச்சுது'' — ஆச்சியின் குரல் தளுதளுத்தது

''ம் ... ம் ... சரியணை ... நீ இனி ஒப்பாரி வைக்கத் தொடங்காதை. என்னவோ கடவுள் விட்ட வழி. எனக்கு நேரமாய் போச்சு. நான் வரப்போறன் ...ம் எணை இதில ரெண்டு மூண்டு வெத்திலையக் கொண்டு போறன். இண்டைக்கும் அந்த மனிசன் மறந்து போய் வருகிறதோ என்னவோ'' என்று கூறியபடி புறப்பட்ட சிவகாமி சிறிது தாமதித்து ஆச்சியிடம் மெதுவாக ''ஆச்சி உன்னட்ட காசு ஏதும் இருக்கே ?'' என்று கேட்கிருள், ''ஏன் பிள்ளை ... ? எவ்வளவு ... வேணும் ...? '' ஆச்சி ஆதரவாக கேட்கிருள்.

'ஒரு ஐந்து ரூபா இருந்தால் தாணை சம்பளத்தில பிறகு தாறன். பிள்ளையள் நல்ல சாப்பாடு சாப்பிட்டு கனநாளாய்ப் போச்சு. அதுதான் இன்டைக்கு கொஞ்சம் மீன் வாங்கிக் காச்சுவமெண்டு ...'' இரந்து இழுக்கும் அவளைப் பரிதாபத்துடன் பார்த்து விட்டு தனது சேலைத் தலைப்பில் முடிந்திருந்ததை அவிழ்த்து ஐந்து ரூபாவை எண்ணிக் கொடுக்கிருள் ஆச்சி.

''ஆச்சியெண்டா ஆச்சி தான். நீ கவலைப்படாதையெணை உனக்கொண்டு நடந்தா - உன்ர மகன் வருவானே, மாட்டானே என்டது சந்தேகம் தான். ஆனு இந்தச் சிவகாமி குடும்பம் இருக்கிற வரை உன்னைக் கவனமாப் பார்த்துக்கொள்ளுவமெணை. நீ யோசியாதெணை. நான்வாரன் ஆச்சி ... [illegible]தைச்சுக்கொண்டு நிண்டதில நேரம் போச்சுது. மனிசன் வந்து கத்தப் போகுது. அப்ப நான் வாரன் என்னணை?'' அவசரமாகப் போகிருள் சிவகாமி.

அவசொன்ன வார்த்தை உள்ளத்திலிருந்து வரவில்லை. உதட்டிலிருந்து வந்தது. என்பதை பொன்னம்மா ஆச்சி அறியவில்லை.

ஏனே ஆச்சியை அறியாமலேயே ஆச்சியிடமிருந்து பெருமூச்சுக் கிளம்பியது.

''ஆச்சி ஆச்சி'' என்றபடி ஓடி வந்தான் அன்னம்மாவின் மகன். ''என்னடா மோனை?'' என்று கேட்டள் ஆச்சி, அவனுக்குப் பின்னுல் படலையையே பார்த்துக் கொண்டு இருந்தாள் 'இன்னும் தபால் காரனைக் காணவில்லையே?' என்ற ஆதங்கம் ஒன்று தான் அவளுக்கு.

'ஆச்சி! ஆச்சி'' அம்மா உன்னட்ட கொஞ்சம் கருவேப்பிலை வேண்டி வரட்டாம். இந்த முத்தத்துக் கண்

(12ம் பக்கம் பார்க்க)

## அந்த நறுஞ் சீருணவு எங்கே?

பொன்னுச்சி பேரனல்லோ வாடா தம்பி
புன்னகையோ மாறவில்லை வளர்ந்து விட்டாய்
என்னுச்சு உடம்புக்கு இளைத்துப் போனுய்
ஏதுபுது நாகரிகம் வளர்ந்த தல்லால்
மன்னுச்சு எங்களுயர் உணவும் போச்சு
மணிதவறு துண்டென்ன? சத்திலைக் காண்
புண்ணுச்சு மனமிந்தப் புது யுகத்தின்
போக்கெண்ணிக் கலங்குகிறேன் இரடா தம்பி

ஆறுபணம் கொண்டந்தப் பட்டணம் போய்.
அரிசிபுளி காய்கறிகள் உப்பும் வாங்கி
கூறுபட முடிச்சிரண்டில் கட்டி ஏற்றக்
கூலிக்கும் ஆள்பிடித்த செலவு போக
வாறபொழு திரண்டுபணம் மீதிகொண் டென்
வாசலிலே வந்திறங்கி மகிழ்ந்த காலம்
போறதிசை தெரியாமற் போச்சுச் சின்னப்
'பொலித்தீன்பை' நிரம்ப வொரு நூறு வேணும்.

தகரத்தில், போத்தலிலே பொலித்தீன் பைக்குள்
தாள் வண்ணம் தோன்றவெதோ? அடைத்து விற்பார்
நகரத்துச் சாப்பாடு பலதும் தின்றென்?
நாக்குக்குச் சுவையில்லை எங்கள் சாலம்;
பகரத்தான் மொழியுண்டோ! பணம் பண்டங்கள்
பனுட்டொடியல் கூழ் எண்ணில் வாயே யூறும்
நிகருண்டோ வரகரிசிச் சோறு மொண்டி
நெல்லுழுந்து சாமை,கம்பு தின்ற லுத்தோம்

தூதுவளை முசிட்டையிலை முருங்கைக் கீரை
தும்பைக்காய் என்னருசி குறிஞ்சாச் சுண்டல்,
ஏதுஇணை இவைக்கின்று என்ன ஆச்சு?
ஏதேதோ மனுட்டு மோகம் தாகம்;
போதுமடா! தம்பியிந்தப் 'புடிங்' கும், 'கேக்' கும்
பூச்சடித்த சுவருள்ளே குப்பை கூழம்
தாதுநிறை எம்முணவை நீக்கி விட்டு;
தரித்திரத்தைக் காதலித்தோம் எங்கள் பாவம்!

நடமாட வலுவில்லை நாங்கள் வாழ்ந்த;
நாட்களைப்போல் இன்றில்லை அணுவின் வேகம்;
விடமிட்டோ புதிதாக விளைந்த நோய்கள்;
விசித்திரங்கள்! உணவின்று குளிகையாச்சு?
முடமாடாய் வீழ்ந்திந்தப் புவியில் வாழ்ந்து
முன்னையநம் பெருமைகளை மறந்து போனேய்!
அடடா! ஏன்? நிற்கின்றுய்; இரடா தம்பி!
அந்தநறுஞ் சீருணவு எங்கே போச்சோ?

— செ. மகேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய புத்தகம்

# ஆரம்ப விண்ணியல்

தாய் மொழியில் கல்வி கற்கும் கொள்கை நம் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுச் சுமார் முப்பது வருடங்களாகி விட்டன. ஆயினும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தமது பாடங்களைத் தாய்மொழியில் உள்ள புத்தகங்கள் மூலம் முழுமையாகக் கற்றுக்கொள்ளும் நிலை இன்னமும் ஏற்படவில்லை என்றே கூறலாம்.

விஞ்ஞானம் சம்பந்தமான புத்தகங்கள் தமிழ்மொழியில் மிகக் குறைவு. ஆங்கிலத்தில் உள்ள புத்தகங்களையும் மொழி பெயர்த்துள்ளமை குறைவு. இந்த நிலையில்தமிழ்மொழியில் 'ஆரம்ப விண்ணியல்' நூல் வெளிவந்துள்ளது.

'வானசாஸ்திரம்' என நம் முன்னோர்கள் கூறிவந்த 'விண்ணியல்' பற்றிய அறிவு இன்று நம் இனத்தவரால் வளர்க்கப் படவில்லை என்பது கவலைக்குரியது.

நம் புராண, இதிகாசங்களில் காணும் ''கற்பனைகள்'' என நாம் எண்ணுபவை இன்று நிஜமானவைகளாக வெளிநாட்டவர்களால் காட்டப்படுகின்றன. ஏன் இந்த முயற்சிகள் இன்று நமது மக்களால் கைவிடப்பட்டன? சுயமொழியில் அறிவை வளர்க்கத் தவறிவிட்டமை இதற்குக் காரணம் எனலாம்.

பௌதீகம், இரசாயனம், கணிதம் எனப்பல்வேறுபட்ட விஞ்ஞானத் துறைகளிலே வானசாஸ்திரம் எனப்படும் 'விண்ணியல்' மிகப்பழங் காலந்தொட்டு ஆய்வுக்குரியதாகத் தொடர்ந்து இன்றும் இருந்து வருகிறது.

'விண்ணியல்' சம்பந்தமாகப் பூரண அறிவு பெறுவதென்பது மிகவும் கடினமான காரியம் ஆனால் விண்ணியலில் சகலவிஞ்ஞானங்களும்அடங்கி நிற்கின்றன. நாம் வாழும் பூமியும் ஒரு கிரகமாதலால்



நூலாசிரியர்:
டபிள்யூ. எஸ்,
செந்தில்நாதன்
[தலைவர், யாழ்.வானியற் கழகம்]

பூமியில் இருக்கும் உயிரியல், பௌதிக, இரசாயன, தாவரவியல்களைத் தெரிந்து கொள்வதன்மூலம் வானவியலைப் பற்றிய அறிவை ஓரளவு பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு, தமது மொழியில் நாம் விளங்கிக்கொள்ளும் வகையில் இப்பெரிய விஷயத்தை எழுதமுற்பட்டுள்ளவர்கள் எமது இனத்துக்குப் பெருந் தொண்டாற்றுபவர்களாகின்றனர்.

திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் அவர்கள் எழுதியுள்ள ஆரம்ப விண்ணியல் மிகவும் இலகுவாக வான நிலைகளை எமக்குத் தெரியப் படுத்துகிறது.

அறிமுகம்' என்ற முதலாவது பக்கத்தில் புத்தகத்தின் குறிக்கோள் முன்வைக்கப் படுகிறது. பூமி, சந்திரன், சூரியன், கிரணங்கள், சூரிய குடும்பங்கள் என வரிசைப்படி சாதாரணமாக ஒரு பாடசாலை மாணவன்முதல் விஞ்ஞான அறிவு இல்லாதவர் வரை விளங்கிக் கொள்ளுமளவிற்கு விஷயங்கள் எழுதப் பட்டுள்ளன. இருபத்திரண்டு அத்தியாயங்களிலும் மிகத் தெளிவாக, குறைந்த சொற்பிரயோகங்களால் விஷயங்கள் விளங்கப்படுத்தப்பட்டுள்ளமை 'விண்ணியலைப்' பூரணமாகத் தெரிந்து கொள்ளும் நிலைக்கு வாசகனைக் கொண்டு செல்கிறது.

நம் மூதாதையர் சோதிடத்தில் கணித்து கிரகநிலைகளில் குறிப்பிடுபவைகளை மிகத் தெளிவாக நூல் ஆசிரியர் விளக்கப் படங்களுடன் படம் பிடித்துக்காட்டியுள்ளார்.

யாழ்.வானியற் கழகத் தலைவராக இருக்கும் இந்நூல் ஆசிரியர் பட்டதாரி மட்டுமல்ல சட்டத்தரணியுமாவார். லண்டன் வானியற் கழக உறுப்பினராக இருந்தவர். பல வெளி நாடுகளுக்குச் சென்று வானியல் ஆராய்சிகளைப் பார்வையிட்டவர்.

வெளியீட்டு விழாக்கள் எதுவுமின்றி அமைதியாக, வெளிவந்துள்ளஇவ்வரிய நூல் நூலாசிரியரின் பிள்ளைகளின் பங்களிப்பினால் மேலும் சிறப்புப் பெற்றுள்ளது.

கைக்கு அடக்கமாகச் செட்டியார் அச்சகத்தில் அழகாக அச்சுப்பதிவுபெற்று வெளிவந்துள்ள ஆரம்ப விண்ணியல் 'வானையளப்போம் கடல் மீனையளப்போம்; சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்' என்ற பாரதிவாக்கினை நினைவூட்டுவதாகவுள்ளது.

—ஐ. சண்முகலிங்கம்.

## சிறுகதை

(11ம் பக்கத் தொடர்ச்சி)

டில கொஞ்சம் பிடுங் கட்டே?'' ''சரியடா! கொஞ்சத்தைப் பிடுங்கு''

சிறுவன் தலையை ஆட்டிவிட்டு 'மள மள' வென்று கறிவேப்பிலைகளைப் பிடுங்கிவிட்டு, அவசர அவசரமாகப் போனான்:

''பிள்ளை ராசா!''

''என்னணை ஆச்சி ... ? நான் கெதியெண்டு போக வேணும்''

'இந்தத் தபால்காரப் பெடியனைக் கண்டனீயே ராசா?'' ''இல்லையெணை, நான் போறன்'' சிறுவனுக்கு விளையாட்டு அவசரம்.

ஆச்சியின் ஆவலையோ, ஏக்கத்தையோ உணரும் தன்மையோ, பக்குவமோ, அக்கறையோ அவனுக்கில்லை.

அவனைச் சொல்ல வேண்டாம்; தாயில்லாத பிள்ளையை தன்னுடைய பிள்ளையாகச் சீராகச், சிறப்பாக வளர்த்து ஆளாக்கி விடப்பட்ட ஆச்சியின் மகன் குமாருக்கே அவளுடைய ஆதங்கத்தை, ஆசையை உணரும் சக்தி இல்லையே!

தூரத்தில் சைக்கிள் மணி கேட்கிறது. பார்க்கப் பார்க்க ஆச்சி திண்ணையில் ஏறி நின்று பார்க்கிறாள். றோட்டுத் தெரிகிறது. ''ஓ! தபால்காரன் தான் அப்பாடி! வந்திட்டான். முருகா! பிள்ளையின்ர கடிதமேதாவது வரவேணும். அவன் எப்படி இருக்கிறானோ? என்னவோ?'' ஆச்சி முணுகியபடி ''குடு குடு'' வென்று படலையை நோக்கி ஓடாத குறையாய் நடந்தாள்.

தபால் காரன் வந்து கொண்டிருக்கிறான். ஆச்சியின் மனம் ''பக் பக்'' என்றது. அடக்க முடியாத எதிர்பார்ப்பு ஆவலால் நெஞ்சில் முறலாய்ப் பரபரத்தது. இதோ ஆச்சிக்குக் கிட்ட வருகிறான், வந்து விட்டான்; நடுங்கும் கைகளால் படலையை அழுத்தமாகப் பிடித்தாள் ஆச்சி.

''ஆச்சி? இண்டைக்கும் உனக்கு கடிதம் இல்லையெணை'' தபால் காரனுக்கு ஆச்சியின் நிலை வழமையாகி விட்டதால் ஆச்சி ஏதற்காக நிற்கிறாள் என்று புரிந்து கொண்டு ஆச்சி கேள்வி கேட்க முன்னமே அவன் பதில் சொல்லி விட்டுப் போகிறான்.

சில நிமிடங்கள் 'பட்' என்று வடிந்து போன ஏமாற்றத்தால் மரத்து நின்ற ஆச்சி அடக்க முடியாத துயரத்தைப் பெருமூச்சாக விட்டு சோர்வுடன் உள்ளே திரும்பினாள். ஆச்சியின் கண்களில் மொட்டையாக நின்ற அந்தக் கறிவேப்பிலைக்கன்றுதான் தென்பட்டது ஆச்சியின் கண்களில் நெஞ்சின் பரிதவிப்பின் பிரதிபலிப்பைக்கண்ணீர் நிறைத்துக் காட்டியது.

கறி ருசிக்கு இரையாகும் கறிவேப்பிலை தன்னுடைய மணத்தையும், ருசியையும் கறிக்குக்கொடுக்கிறது. ஆனால் கடைசியில் அது வெளியே எடுத்து எறியப்படுகின்றது. இந்தக் கறிவேப்பிலைக்கு உவமேயமாக பொன்னம்மா ஆச்சியும் அவளுடைய பாசமும் அமைந்து விட்டது என்பதைப் பார்க்கும்போது பரிதாபமாகத்தான் இருக்கிறது.

[யாவும் கற்பனை]

## பர்மா

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் படையொன்றும் உள்ளது. இவையெய்லாம் ஏனைய நாடுகள் அறியாதவையாகவே உள்ளன. ஏனெனில் பர்மா ஒரு மூடிய திரையுடையசமுதாயமாகவே காணப் படுகிறது.

ஏனைய நாடுகளினுடனான உறவுகளைப் பொறுத்தவரையில் சோவியத் யூனியனினுடனான உறவுகளைச் சிறிதுசிறிதாக பர்மா குறைத்துக் கொண்டு வரும் அதேவேளை சீனாவுடனான தனது உறவுகளை மேம்படுத்திவருகின்றது. எனினும் பொதுவாக நடு நிலையான போக்கையே பர்மா கடைப்பிடித்து வருகிறது.

அணிசேரா நாடுகள் அமைப்பு உதயமாவதற்கு முக்கிய காரணமாயிருந்த பர்மா 79-ம் ஆண்டில் அதனை விட்டு விலகியது. எந்த வல்லரசுடனும் கூட்டுச்சேர்வதில்லை என்ற கொள்கையை இந்த அமைப்புபடிப்படியாக இழந்து வருகிறது என்று குற்றஞ்சாட்டியே இது விலகியது.

### பர்மா குண்டு வெடிப்பு


உலகின் கண்களிலிருந்து ஒதுங்கியிருந்த பர்மா இரண்டாண்டுகளுக்கு முன்னர்திடீரென உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. பர்மாவுக்கு விஜயம் செய்திருந்த தென்கொரிய முக்கியஸ்தர்கள் பயணம்செய்த காரொன்று குண்டு வெடிப்புக்கிலக்காகி அவர்கள் மரணமடைந்தனர். அதிர்ஷ்டவசமாக குறி பார்க்கப்பட்டிருந்த தென் கொரிய ஜனாதிபதி அந்தக்காரில் பயணஞ்செய்யவில்லை.

இச்சம்பவமொன்றே பர்மாவைப்பொறுத்தவரையில் உலகைக் கலக்கிய-உலகின் கவனத்தை ஈர்த்த விஷயமெனலாம்.

தற்போது 74 வயதுடைய ஜெனரல் நே வின் 81ம் ஆண்டில் தனது வாரிசான ஜெனரல் சான் யூவை நியமித்தார்.

பர்மாஇனிமேல்தான் நவீன தொழில்நுட்பத் துறையைக் காணப்போகின்றதா, ஜனநாயக அரசியல் முறையை பர்மியர்கள் அனுபவிக்கப் போகிறார்களா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விஷயங்கள்.

# நாடோடிக் கதைகள்



✶ தமிழில்: நீர்வை பொன்னையன்

## மலைகளை அகற்றிய மூடக் கிழவன்

ஆயிரக் கணக்கான அடிகள் உயரமுள்ள மூன்று மலைகள் இருந்தன. இந்த மலைகளுக்கு வடக்கேயுள்ள ஒரு கிராமத்தில் தொண்ணூறு வயதுடைய ஒரு முதியவர் இருந்தார். அவர் ஒரு முட்டாள் என்று அழைக்கப் பட்டார்.

முதியவரிருந்த கிராமத்திலுள்ளவர்கள் அயல் கிராமத்துக்குச் செல்வதாயிருந்தால் இந்த மலைகளைச் சுற்றிச் செல்லவேண்டும். இது அவர்களுக்கு பெரும் சிரமமாக இருந்தது. இந்த விவகாரம் பற்றி ஆலோசிப்பதற்கு தனது குடும்பத்தவர்களை ஒன்று கூட்டினார்.

''இந்த மூன்று மலைகளை வெட்டித் தகர்த்து, மட்டம் செய்தால் நாம் தெற்கு நோக்கி ஒருவீதியை அமைக்க முடியும். இதனால் எதிர்காலத்தில் எல்லோரும் நன்மையடையமுடியும். இதற்கு நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து வேலைசெய்யவேண்டும்''

முதியவர் கூறினார். அவரது ஆலோசனைக்கு எல்லோரும் உடன்பட்டனர். ஆனால் அவரது மனைவி எதிர்ப்புத் தெரிவித்தாள்.

''ஒருசிறிய குன்றைத்தானும் வெட்டி மட்டம் செய்வதற்கு இந்த வயோதிப காலத்தில் உனக்குப்போதிய உடற்பலமில்லை. இம்மூன்று பெரும் மலைகளை உன்னால் எப்படி அகற்ற முடியும்?''

மனைவி முதியவரைக்கேட்டாள்.

''நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்தால் இலகுவில் மலைகளை அகற்றிவிடமுடியும்.''

உறுதியுடன் முதியவர் பதிலளித்தார்.

''வெட்டுகின்ற மண்ணையும், பாறைகளையும் என்ன செய்வது?''

மீண்டும் மனைவிகேட்டாள்.

''அவற்றை கடலுக்குள் கொட்டுவோம்.''

முதியவர் விட்டுக்கொடுக்கவில்லை.

உடனே மூடக் கிழவனும் அவரது மகனும் பேரப்பிள்ளையும் ஒன்றுசேர்ந்து மலைகளை வெட்டும் வேலையை ஆரம்பித்தனர். அவர்கள் மண்ணையும், கற்களையும் வெட்டி கூடைகளில் நிரப்பிக்கொண்டு சென்று கடலுக்குள் கொட்டினர். அப்பொழுது அயல் வீட்டிலுள்ள ஒருவிதவையின் ஏழு வயதுடைய ஒரு சிறுவனும் அவர்களுடன் சேர்ந்துவேலை செய்தான். அவர்கள் ஒரு தடவை கடலுக்கு மண்ணையும் கல்லையும் எடுத்துச் சென்று கொட்டிவிட்டு திரும்பிவர பல மாதங்கள் பிடித்தன.

அந்தக் கிராமத்திலுள்ள ஒரு புத்திசாலி அவர்களைக் கேலிசெய்து இந்த முட்டாள் தனமான வேலையைக் கைவிடும்படி புத்திமதிகூறினார்.

மூடக்கிழவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

''நீ ஒரு பெரும் சோம்பேறி. இந்த விதவையின் ஏழுவயதுடைய மகனுக்கு இருக்கின்ற அறிவுதானும் உனக்கில்லையே. இந்த மலைகளை அகற்றி முடிக்கமுன் நான் இறந்துபோகக்கூடும். ஆனால் எனது மகனை நான் விட்டுச்செல்வேன். அவன் மலைகளை அகற்றும் வேலையைத் தொடர்ந்து செய்வான். அவனுக்குப்பின் அவனுடைய மகன் அவ் வேலையைத் தொடர்வான். இப்படி தலைமுறை தலைமுறையாக பிள்ளைகள் தொடர்ந்து மலைகளை அகற்றும் வேலையைச் செய்வார்கள். ஆனால் இந்த மலைகள் பெரிதாக வளர முடியாது. நாங்கள் தொடர்ச்சியாக மண்ணையும், பாறைகளையும் வெட்டி வெட்டி அகற்ற மலைகள்குறைந்துகொண்டே செல்லும். அப்படியானால் எங்களால் இந்த மலைகளை ஏன் அகற்ற முடியாது?''

மூடக் கிழவன் புத்திசாலியைக் கேட்டான்.

புத்திசாலியால் இதற்குப் பதில் கூறமுடியவில்லை

மூடக்கிழவனும் ஏனையோரும் மலைகளை அகற்றும் வேலையைத் தொடர்ந்து செய்தனர்.

இறுதியில் அவர்களது முயற்சி பலித்தது.

நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவைதான் இன்று உள்ள முப்பெரும் மலைகள். இம் மும்மலைகளும் அழித்தொழிக்கப்படா விட்டால் மனித குலத்திற்கே விடிவில்லை. இந்த மூன்று மலைகளும் அகற்றப்படுவது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி.

## ஞாயிறு சிந்தனை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார். இறைவனால் அழைக்கப்பட்டு, அர்ச்சிக்கப்பட்டு, அனுப்பப்படும் மனிதர்கள் புனிதமான வாழ்க்கையை மேற்கொள்வதோடு ஏனைய மனிதரும் தூயராய் வாழத் தூண்டுகோலாய் விளங்குகின்றார்கள்; பரிசாக, நிலையான வாழ்வினை, நித்தியத்திற்கும் அழியாத பேற்றினைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இறைமகன் கிறிஸ்து மீன்களைப் பிடித்துக் கொண்டிருந்த சீமோன் இராயப்பரிடம் ''இன்று முதல் நீ மனிதர்களைப் பிடிப்பவன் ஆவாய்'' என்று கூறி இறையழைப்பின் மேன்மையை உணர்த்துகின்றார். என்றும் வாழும் இறைவன் இன்றும் எங்களை அழைக்கின்றார். மனிதருக்கு நல்வழி காட்டிகளாக, வாழ்விழந்தோருக்கு வாழ்வு கொடுப்பவர்களாக, இருளில் வாழ்வோருக்கு ஒளியைக் கொடுப்பவர்களாகவாழும்படி எம்மை அழைக்கின்றார். எனவே;

அருளில் வாழ்வோம்
ஆனந்தத்தில் மிதப்போம்
இனியதைப் பேசுவோம்
ஈகையை வளர்ப்போம்
உயர்வினைப் பெறுவோம்
ஊக்கமுடன் உழைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பீரங்கி வேட்டு, படகின் முன்னால் விழுந்து வெடித்தது!"

[யாழ்ப்பாணம்]

''காரைநகர் கடற்படை முகாமிலிருந்து தீர்க்கப்பட்ட பீரங்கிவேட்டுக்களில் ஒன்று நாங்கள் சென்ற படகின்முன் விழுந்து வெடித்ததால், எனது பேரன் படுகாயமடைந்தார். அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதும் அங்கு மரணமானார்.

இவ்வாறு ஊர்காவற்றுறைக் கடல்பகுதியில் பலியான கட்டுமரம் ஓட்டிச் சென்ற மாணவனான கந்தசாமி கமலநாதன் (பாலன்) [17 வயது] என்பவரின் மரண விசாரணையில், அவருடன் சென்ற பேரனான க. மகாலிங்கம் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

மரணவிசாரணையை சட்டத்தரணி க. கேசவன் நடாத்தினார். யாழ். ஆஸ்பத்திரியில் இந்த மரண விசாரணை நடைபெற்றது.

சாட்சி மேலும் தெரிவித்ததாவது; இறந்தவர் எனது பேரன்முறையானவர். காரைநகர் தோப்புக்காட்டில் வசிப்பவர். இவர் கல்விகற்று வருகிறார். 7ம் திகதி காலை 9 மணிக்கு நானும் அவரும் கட்டுமரமொன்றில் ஊர்காவற்றுறைக்குச் சென்றோம். கட்டுமரத்தைக் கடற்கரை ஓரத்தில் நிறுத்திவிட்டு நான் ஆஸ்பத்திரிக்கும், அவர் முடிவெட்டிக்கொண்டு துணிவகை எடுக்கவும் சென்றோம். பின் காலை 10 மணியளவில் இருவரும் சேர்ந்து கட்டுமரத்தில் ஏறி. காரைநகர் நோக்கி 25 யார் தூரம் சென்றுகொண்டிருந்தபொழுது கடற்படை முகாமிலிருந்து பீரங்கி வேட்டுக்கள் முழங்கின. அவ்வேட்டுக்களில் ஒன்று கட்டுமரம் முன்னால் வெடித்து பேரனின் இடுப்பில் பட்டது. அவர் சரிந்து விழுந்துவிட்டார். உடனடியாக மீண்டும் ஊர்காவற்றுறைக்கு கட்டுமரத்தைத் திருப்பி அங்குள்ள ஆஸ்பத்திரிக்கும், பின் யாழ். ஆஸ்பத்திரிக்கும் கொண்டு வந்தோம். அங்கு இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

பிரேதபரிசோதனையை பதில் சட்டவைத்திய அதிகாரி வைத்திய நிபுணர் பரிமேலழகர் நடாத்தினர். (மா)

# "டென்மார்க் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பவேண்டாம்"

[கொழும்பு]

''டென்மார்க்கிலுள்ள தமிழ் அகதிகளைப் பலாத்காரமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதை நாம் எதிர்க்கின்றோம். தமிழ்மக்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்படும் இச் சோதனையான காலத்தில் அவர்களை இங்கு அனுப்புவது மேலும் பிரச்னையை உண்டாக்கும்.''

இவ்வாறு கலாநிதி நீலன் திருச்செல்வம் கொழும்பிலுள்ள டென்மார்க் தூதுவர் திரு. தோபெக்கை சந்தித்துக் கவலை தெரிவித்துள்ளார்.

''சுமார் 500 தமிழ் அகதிகள் டென்மார்க்கில் உள்ளனர். இவர்களுக்கு டென்மார்க் அரசு தொடர்ந்தும் புகலிடம் அளித்துவரும் என்று தாம் திடமாக நம்புவதாக நீலன் கூறியுள்ளார்.

## இலங்கை...

[ ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதிகள் ஒன்றிணைய வேண்டுமென்பதில்லை என தமிழர்விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

''வடக்கு-கிழக்கு இணைப்பதென்ற கோரிக்கையைக் கைவிட்டால்தான் பேச்சு வார்த்தை தொடரும்'' என்ற இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் கூற்றுக்குக் கருத்துத் தெரிவித்துப் பேசியஅவர் இவையிரண்டும் ஒரே பகுதியாக இருந்து பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் தான்வடக்குக் கிழக்கு என பிரிக்கப்பட்டன என்றார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள 1 லட்சம் தமிழர்களை இலங்கையரசாங்கம் விரட்டி விட்டு அவ்விடத்தில் 2 லட்சம் சிங்களவர்களைக் குடியமர்த்தியுள்ளது. [செ]

## கல்மடு

[1ம் பக்கத் தொடர்ச்சி)

இதே நிலை தர்மபுரம் பகுதியிலும் காணப்படுகிறது. பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன

## அப்பாவி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வடபகுதிசர்வோதயவெளிக்கள இயக்குனர் திரு. க. கதிரமலையால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி கூட்டத்தில் வண. விமலசார தேரோ மேலும் பேசுகையில் கூறியதாவது:

''துப்பாக்கி மூலம் சமாதானத்தை ஏற்படுத்தமுடியாது. அண்மையில் வவனியாவுக்கு வந்திருந்த ஜனாதிபதியின் மகன் ரவி ஜெயவர்த்தனவும் இதனையே தெரிவித்தார். சிங்கள மக்கள் தீவிரவாதிகள் தம்மைத் தாக்குவார்கள் எனஅஞ்சுகின்ற அதேவேளையில் தமிழ் மக்கள் ஊர்காவல் படையினருக்குப் பயப்படுகின்றனர். இருசாரார் மத்தியிலுமுள்ள அச்சத்தை நீக்க நாம் முயன்று வருகிறோம்''.

## அறுவடை.,..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னருக்கு அஞ்சி ஓடிய பலர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர். அதில் இருவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

இச் சம்பத்தின்போது கைது செய்யப்பட்ட ஐவரில் வாடகைக்கார் உரிமையாளரான அம்பலவாணர் செல்வம் [39 வயது] என்பவர் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பரந்தன் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுகிறது.

## காரைநகரில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''கடற்கண்ணி வெடியினால் கடும் சேதத்துக்குள்ளான அக்கப்பல் கடலுள்ளிருந்து ஏனைய கடற்படைக் சப்பல்களினாலும், ஹெலிக்கொப்டரின் உதவியுடனும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் மீட்கப்பட்டதாகவும், தமிழீழ விடுதலைப் போராட்டவரலாற்றில் மிக நவீன முறையில் முதற்தடவையாக மேற்கொள்ளப்பட்ட கடற் கண்ணிவெடித் தாக்குதல் பெரும் வெற்றியளித்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா]

## அக்கினோ ,.

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் திருமதி அக்கினோ பெரும்பாலும் வெற்றியீட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது

இறுதிமுடிவுகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லையாயினும் அங்கிருந்துவரும் உத்தியோகப்பற்றற்ற தகவல்களின்படி திருமதி அக்கினோ முன்னணியில் நிற்கிறார். ஆயினும் ஜனாதிபதி மார்க்கோஸின் ஆதரவாளர்கள் ஜனாதிபதி திருமதி அக்கினோவைவிட 10% அதிகப்படியான வக்குகளால் முன்னணியில் நிற்கிறோரெனத் தெரிவித்துள்ளனர்

இதனிடையே பிலிப்பைன்ஸில் தொடர்ந்து ஆங்காங்கே வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்று வருவதுடன் தேர்தலில் பல மோசடிகள் நடைபெற்றுள்ளனவென்று இத்தேர்தலைக் கண்காணிக்கவென வந்துள்ள குழு தெரிவித்துள்ளது.

## பேச்சுவார்த்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்செயல்களுக்கு ஒருமுற்றுப்புள்ளிவைக்கப்படும் வரை, எவ்வித பேச்சுவார்த்தைகளிலும் இந்திய அரசு விசேஷ ஆர்வம் காட்டாது என இந்திய அரசவட்டாரங்களைமேற்கோள் காட்டி திரு. ஜி. கே ரெட்டி நேற்றைய இந்து' பத்திரிகையில் எழுதியுள்ளார். இன்னுமொரு சுற்று பயனற்ற பேச்சுவார்த்தைகளை நடாத்தி ஏற்கனவே ஏற்பட்டுள்ள விரக்தியை மேலும் அதிகரித்துக் கொள்ள இந்தியா நிச்சயம் விரும்பாது என்று அவர் மேலும் எழுதியுள்ளார்.

# கொக்குவில் ரயில்நிலைய கடத்தல்: உணவு மூடைகளில் சீருடைகளாம்!

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து வந்த சரக்குரயில் கொக்குவில் புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த போது அதிலிருந்த தவிடு மூடைகள், பருப்பு மூடைகள், நில அளவைக்குரிய சில உபகரணங்கள் என்பனவற்றை இனந்தெரியாத நபர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

உணவு மூடைகளுள் சீருடைகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது

இக் கொள்ளையின் போது எடுக்கப்பட்ட பொருட்கள் யாவும் லொறியிலும் மாட்டு வண்டிகளிலும் ஏற்றிச் செல்லப்பட்டனவாம். [ஐ]


SENTHURAN INSTITUTE

DIPLOMA COURSE IN HOME SCIENCE AND NEEDLE WORK

35 வருட ஆசிரிய அனுபவமுள்ள திருமதி வனிதா மகேஸ்வரன் அவர்களின் மேற்பார்வையில் ஸ்தாபிக்கப்பட்ட மகளிர் பயிற்சி ஸ்தாபனத்தில் பயிற்சி நெறி வகுப்புகள் ஆரம்பம்: 19-2-1986 புதன் காலை 8-30 மணி.

திறம்பட்ட சேவை - தனிப்பட்ட கவனிப்பு - நவீன முறை விரிவுரைகள் - பாதுகாப்பான இடம் - தங்குமிடவசதி.

SCIENTIFIC CUTTING - விஞ்ஞான முறையில் உடைவெட்டுதல்.
NEEDLE WORK - தையற் கலை.
HAIR DRESSING - சிகை, கொண்டை அலங்காரம்.
BATIK PRINTING - பற்றிக் அச்சுப்பதித்தல்.
HOME SCIENCE - மனையியல் விஞ்ஞானம்.
(Cake icing and Cookery)

'மிதிலை'
324, பலாலி வீதி,
கந்தர்மடம். (C 660)



கடைசிநேர வரிவிளம்பரம்

தேவை

Morris, LD Austin J2 1 1/2 Ton Lorry நல்லநிலையில் உடன்தேவை. தொடர்பு கொள்க. R G and S J அசோசியேற்ஸ் (சாந்திதியேட்டர் முன்பாக), 22 இராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். C 662

வைத்தியம்

நாட்பட்ட வியாதிகளுக்கு விசேஷ சிகிச்சை அளிக்கப்படும் டாக்டர் எம். வி தில்லைசந்ரன், Registered Homoeopath, 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். C 671

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
பாண்டியன்—கவுண்டமணி
ராஜகோபுரம்

லிடோ சினிமா
10-30. 2-30, 6-30
கார்த்திக்—ராதா
நடித்த
அலைகள் ஓய்வதில்லை

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
முத்துராமன், ஜெயசித்திரா ஸ்ரீகாந், வி கே. இராமசாமி
நடித்த
இன்ஸ்பெக்டர்மனைவி
(புதிய பிரதி)
14-2-86 முதல்
THE BRIDGE TWO FAR



எமது அடுத்த
புதிய வெளியீடுகள்

நீண்ட இடைவெளிக்குப்பின் ரஜனி, ஸ்ரீதேவியுடன் இணைந்து வழங்கும்
1. நான் அடிமையில்லை (தரமான பிரதி)
சிறந்த படங்களையே தயாரித்து வழங்கிவரும் டி. ராஜேந்தரின்
2. மைதிலி என்னைக் காதலி (தரமான பிரதி)
முழுவதும் மாறுபட்ட வேடத்தில் பாண்டியன், ஜீவிதா நடித்த
3. கோவில் யானை
விஜயகாந்த், ராதிகா நடித்த
4. நானே ராஜா நானே மந்திரி V. G. P
முரளி, நளினி, சத்யராஜ். கவுண்டமணி நடித்த
5. கீதாஞ்சலி

வீடியோ பிரசாத்
இல. 232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[A-223]



எமது புதிய வெளியீடுகள்
1. ஆண்டவன் சொத்து Thomson
மாதவி — ஜெய்சங்கர்
2. மருமகள் Pyramid
சிவாஜி — ரேவதி
3. கண்மணியே பேசு Pyramid
சிவகுமார் — அம்பிகா
4. கீதாஞ்சலி VGP
முரளி — நளினி — கவுண்டமணி
5. நானே ராஜா நானே மந்திரி
விஜயகாந் — ராதிகா — கவுண்டமணி VGP

நல்லூர் வீடியோ சென்ரர்
நல்லூர். C 676


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spoken English &
Book-keeping & Accounts
(London Exams.)

தபால் மூலமும் நேரிலும்

English Short-hand and
Typewriting (London Exam.)

நேரிலும் பயிற்றப்படும்.

IMPERIAL INSTITUTES,
DISPENSARY LANE, MAIN STREET,
ILAVALAI. (C 621)

## "தமிழ்சமுதாயத்தின் இழப்பு"

(தெல்லிப்பழை)

"பட்டிருப்புத் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பூ. கணேசலிங்கம் மறைந்துவிட்டார் என்ற செய்தி தமிழ் மக்கள் எல்லோரையும் துக்கத்தில் ஆழ்த்திவிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரான இவர், பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பொழுது கிழக்கிலங்கைத் தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காகத் தனித்து நின்று போராடிய ஒரு பெருமகனா. எத்தனையோ கஷ்டங்களின் மத்தியில் தமிழ் மக்களின் விடுதலைக்காகச் செயற்பட்ட இவர் ஓர் செயல் வீரர். எடுத்த கருமத்தைச் சாதிக்க வல்லவர் இவருடைய இழப்பு பொதுவாகத் தமிழ்மக்கள் அனைவருக்கும், குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழ் மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்."

இவ்வாறு தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. சி சிவமகாராசா பட்டிருப்பு முன்னாள் எம். பி. திரு. பூ. கணேசலிங்கத்தின் மறைவு குறித்து விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## அறிவித்தல்

இங்கிலாந்து புறூக்லி மள்பானேறேட்டு, அபிராமசுந்தரி பொன்னம்பலம் ஆகியநான், மதுரங்குழி புத்தளம் வாசியான நடராசா விபுலானந்தனுக்கு கொடுத்த தத்துவ உறுதி 5-9-1985ல் அருணி குலரத்தினவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதி 33ஆல் வழங்கப்பட்ட தத்துவ உறுதியை இத்தால் வலிமையில்லாமல் அழித்துவிடுகிறேன் என்று இலங்கை அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன். C-627

A. A. T.

I. C. M. A. பயில தராதரம் பற்று
தவர்களுக்கான புதிய பயிற்சிநெறி

வார இறுதி வகுப்புகளில் பயிலமுடியாத மாணவர்களின் நன்மைக்காக வாரநாட்களில் நடைபெற உள்ளது.

ஆரம்பம் 17 Feb. 1986

NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14, St. PETERS LANE,
HOSPITAL ROAD, JAFFNA.
Tele 24355 (A 218)

குடும்பப் பெண்களே!

உங்கள் நாளாந்த வீட்டுத் தேவைகள்
யாவற்றையும் ஒரே இடத்தில் பெற
வருகை தாருங்கள்!

ஷோபாஸ் ஷொப்பிங் சென்ரர்

★ தரமான பொருட்கள் ★ நியாயமான விலைகள்

Also available: BROILER, CURRY CHICKEN,
FISH, ANIL ICE CREAMS,
LP GAS.

வீட்டு விநியோக சேவை:

உங்கள் வசதி கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சேவை மூலம் உங்கள் தேவைகள் யாவற்றையும் வீட்டிலிருந்தபடியே பெறலாம். மேலதிக கட்டணமில்லை. 3 மைல்களுக்குள் வசிப்பவர்களாயின், இன்றே எம்முடன் தொடர்புகொண்டு விபரங்களைப் பெறுங்கள்.

Oyn Ads

SHOBAS SHOPPING CENTRE
603, K. K. S. Road, Jaffna.
(நாவலர் சந்தி அருகே)
(A 205)

## பூதவுடல் நல்லடக்கம்

[வவுனியா]

வவுனியாவில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான கமத்தொழில் சேவை நிலையங்களின் திணைக்கள தொழில் நுட்ப சிரேஷ்ட அதிகாரி திரு பிரேமானந்தாவின் பூதவுடல் இறம்பைக்குளம் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அரச அதிபர் திரு லோகேஸ்வரன், ஏ. ஜி ஏ ஐயம்பிள்ளை, பதில் நீதவான் திரு ஆர். வி. வில்வராஜா மற்றும் உயர் அதிகாரிகளும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

உலகப் பிரசித்தி பெற்றதும்
ஸ்ரீலங்காவின் விற்பனையில்
முதன்மை பெற்றதும்

நெஷனல்

இதோ!

புத்தம் புதிய மொடல்

14" கறுப்பு வெள்ளை

பூஸ்ரர் உள்அமைந்த விசேட அமைப்பு
வெளிப்புறம் மரத்தினால் செய்யப்பட்டது
தன்னியக்க வோல்ரேச் சீராக்கி
80V — 290V அல்லது
12V கார் பற்றி

V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23447 A-215

மாணவ மாணவிகளே

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

தாமதமின்றி தொடர்பு கொள்ளுங்கள்

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

| | | |
|---|---|---|
| Nursing | தாதிப்பயிற்சி | 8-2-86 |
| Pharmacy | பாமஸி | 8-2-86 |
| Radio & TV | - | 8-2-86 |

ஆரம்பமாகவுள்ள புதிய பயிற்சி நெறிகள்

| | |
|---|---|
| Motor Mechanism | 10-2-86 |
| Motor Winding | 10-2-86 |
| A. A. T. | 17-2-86 |
| I. D. P. M. (COMPUTER) | 10-2-86 |

[விரிவுரைகள் (Nursing/Pharmacy) தமிழ் மொழிமூலம் விளக்கம் அளிப்பது மாணவரின் நலன்கருதியே, உங்கள் பதிவுகள் இரண்டு கிழமைக்குள் மட்டுமே.]

NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane,
Hospital Road, Jaffna.
A 219

கனடா, ஜேர்மனி,
பிரான்ஸ், இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எங்கள் முகவர்
உங்களை அழைத்துச் செல்வார்.
அத்துடன்

மத்திய கிழக்கு நாடுகளில்
ஆண், பெண் இருபாலாருக்குமான
வருமானத்திற்கான ஒழுங்குசெய்து கொடுப்பதுடன்

பாஸ்போட், BOND,

சகல நாடுகளுக்குமான
விமான ரிக்கட்டுகளுக்கும் துரிதகதியில்

GROUP ATLANTIC TRAVELS
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.
A-109

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எனது அன்புக் கண வரும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய திரு. செ. கணேஷ் (மேலதிக இறங்குதுறை அளவையாளரும் உதவிசுங்க சேகரிப்பாளரும்] அவர்களின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டும் ஆதரவு நல்கிய உள்ளூர் உறவினர், நண்பகளுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துகொள்ளுகிறோம்.

**மனைவி, மக்கள்.**

36, கச்சேரி நல்லூர்வீதி,
யாழ்ப்பாணம். C 657

## முதலாவது வருட நினைவஞ்சலி

**ஜி. ஆர். அரியரத்தினம்**
(குலம்)
(தொழில் நுட்பவியலாளர் நீர்ப்பாசன இலாக்கா, வவனியா)



இயேசுவின் கையில் காவல்.

அன்பு மனைவி,
குழந்தைகள்,
குடும்பத்தினர்.

99, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம். C 652

## 31-ம் நாள் நினைவஞ்சலி

**திரு.வே. தில்லையம்பலம் நாகமுத்து**



தோற்றம்: 6-6-1902
மறைவு: 13-1-1986
அந்தியேட்டி; 11-2-86

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் அன்பு மனைவி மாணிக்கம்மா, மைத்துனர் சி. சண்முகம், மருமக்கள் புஷ்பநாதன், இராஜேஸ்வரி, லோகேஸ்வரி, மகன் இராமச்சந்திரன்.

அன்னாரின் இறுதிக்கிரியையின் போது அஞ்சலி செலுத்தியோருக்கும் பல்வேறு உதவிகள் செய்தோருக்கும் எமது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

**மனைவி, மருமக்கள், மைத்துனர், மகன்.**

47, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம். A191

## அஞ்சலி கூட்டங்களுக்கு ஏற்பாடு

(மாவிட்டபுரம்)

அடங்காத்தமிழன் அமரர். செ. சுந்தரலிங்கம் மறைந்து ஓராண்டு பூர்தியாவதையொட்டி பல்வேறு அஞ்சலி நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுமாறு நினைவாஞ்சலிக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

திரு சுந்தரலிங்கம் அமரராகி ஓராண்டு நிறைவு நினைவு நாள். வரும் 11ம் திகதி வருவதையொட்டியே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுதுள்ளது.


## L. P. GAS

3 மைல் வட்டத்தினுள் வசிப்பவர்களுக்கு வீட்டில்டெலிவரிசெய்வோம்.

RELIABLE and PROMPT SERVICE

**ஷோபாஸ்**
**ஷொப்பிங் சென்ரர்**
603, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(நாவலர் சந்தி அருகே)
A-198


## 31-ம் நாள் நினைவஞ்சலி

**அந்தோனிப்பிள்ளை இம்மனுவேற்பிள்ளை**
(செல்வராஜா)



பிறப்பு: 01-12-1922
உதிர்வு: 10-01-1986

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து கடமை, கண்ணியம், அன்புடன் எம்மை வாழ வைத்த குலவிளக்கே அப்பா! எம்மை ஆருத் துயரில் ஆழ்த்திச் சடுதியாக மறைந்து விட்டீர்களே!

பாசம் நிறைந்த நேசத் தந்தையே! உங்கள் நினைவு என்றென்றும், எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை அநுதினமும் மன்றாடுகிறோம்.

14-01 86ல் இடம்பெற்ற மரணச்சடங்கில் சமுகமளித்தவர்களுக்கும், அநுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், 08-02-86-ல் நினைவுப் பலியில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமாந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

என்றும் உங்கள்பிரிவால் துயருறும்:

**மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகளுடன்,
சகோதரரும்,
உற்றுர், உறவினரும்.**

42/1, கோயில்வீதி
ஒழுங்கை,
யாழ்ப்பாணம். C 631

## இன்று 'மருதாணி' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'மருதாணி' என்னும் பெயரில் காலாண்டு இலக்கியச் சஞ்சிகை யொன்று இன்று மாலை ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் அல் ஹாஜ் மௌலவி வி. கே. எம். எச். காலிதீன் தலைமையில் வெளியிடப்படவுள்ளது.

ஜனுப் ஜெஸ்மின் அன்சாரை ஆசிரியராகவும் ஜனுப் ஜினூஸ் சுல்தானை அமைப்பாளராகக் கொண்டு வெளியாகும் இவ்இலக்கிய சஞ்சிகையின் முதற்பிரதியை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே சிவஞானம் வாங்குவார். (ஐ)

## மின் ஊழியர் காலமானுர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சந்தையுள் இராணுவத்தினரின் 'ஷெல்' தாக்குதலின் போது காயமடைந்துயாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபபட்ட கிருஷ்ண பிள்ளை இராஜேந்திரம் காலமானுர். இவர் பருத்தித்துறை நகரசபையின் மின்சார ஊழியராவார். வேலையின் நிமித்தம் சந்தையில் நின்றபோதே 'ஷெல்' தாக்குதலுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவந்தார்.

இத்தாக்குதலில் காயமடைந்த வட இந்து மகளிர் பாடசாலை மாணவியான செல்வி நிருபா (10-வயது) யாழ். அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு தேறிவருகிறுர். [ஐ]

## ஓராண்டு நினைவஞ்சலி

செல்வன்
**வி. அருளானந்தம்**
(அருள்)
பருத்தித்துறை
(பழக்கடைப் பங்காளர்)



மலர்வு: 18-11-1965
உதிர்வு: 21-01-1985
திதி: 09-02-1986

ஆலமரமாய் அனைவருக்கும் நிழலாய் அவனியில் பவனிவந்து உயிர் மீட்க உயிர் ஈந்து அமரனடி சேர்ந்த அன்பின் திருவுருவே எங்கள் நெஞ்சிருக்கும்வரை உன் நினைவிருக்கும்!

காலன் எங்களிடமிருந்து இவ்வளவு சீக்கிரமாக உம்மை பிரித்துக் கொண்டான். மறைந்து ஓராண்டு ஆகியும் உமது நினைவு பசுமைமய உமது பிரிவால் வாடி அன்பு முகத்தைக் காணுமல் வேதனையுடன் நினைவு கூர்ந்து உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்

**தாய், சகோதரர்கள்,
அண்ணிமார்கள்,
மைத்துனர்,
பெருமக்கள்,
மருமக்கள், நண்பர்கள்.**

42, மக்கள் சந்தை,
பருத்தித்துறை. C 576

## வவனியா மாவட்டத்தில் ஒன்பது தடைசெய்யப்பட்ட வன பகுதி

(வவனியா)

விசேஷ வர்த்தமானி மூலம் வவனியா மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட காட்டுப் பிரதேசங்களாக ஒன்பதுபகுதிகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

பரந்தன், நயினமடு, இறம்பைக்குளம், மேற்குளம், பூவரசன்குளம், இராசேந்திரகுளம், மகா இறம்பைக்குளம், மாமடும, கருங்காலிக்குளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வனப்பகுதிகளே தடைசெய்யப்பட்ட காட்டுபபிரதேசங்களாகும்.

மேற்குறித்த வன பகுதிக்குள் நுழைதல், தங்கியிருத்தல் நிரந்தரமாக வசித்தல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளது

எனவே இப்பகுதியில் வசிப்பவர்கள் அங்கு நுழையவும் தொடர்ந்து இருக்கவும் இராணுவ இணைப்பதிகாரியினது அனுமதியினைப் பெறவேண்டும்.

வவனியாவிலுள்ள சகல பொதுமக்களுக்கும் இவ்அறிவுறுத்தலை தெரியப்படுத்துமாறு இப்பகுதி கிராமசேவையாளர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.


## யோக சிகிச்சை

பீனிசம், தொய்வு, சலரோகம், எக்சிமா மூலவருத்தம், காக்காய் வலிப்பு, நரம்புத்தளர்ச்சி, கபாலஇடி, உச்சந்தலைக்குத்து, விலக்குக் காலங்களிலேற்படும் குத்து, சழுத்துப்பிடிப்பு, நாரிப்பிடிப்பு, வாதநோய், பார்சவாதம் முதலிய நோய்களினுல் அவஸ்தைப்படுகின்றீர்களா? உடனே தொடர்புகொள்ளுங்கள்:

**வ. சண்முகம்** [யோகாசன ஆசிரியர்]
ஆஸ்பத்திரி ஒழுங்கை, சங்கானை.

மேற்கூறப்பட்ட நோய்களை முறையே யோகாசனம், பிராணுயாமம், தியானம் மூலம் குணப்படுத்திக் கொள்ளாம். C-600


## மசேஸ்வர இல்லம்
### நவாலி, மானிப்பாய்

மேற்படி இல்லத்தில் 5-15 வயதுக்குட்பட்ட பெற்றேரில் ஒருவரையோ அல்லது இருவரையும் இழந்த ஆதரவற்ற பிள்ளைகளை சேர்ப்பதற்கு வெற்றிடங்கள் உள்ளன. அத்துடன் சமையல்செய்து பிள்ளைகளைப் பராமரிப்பதற்கும் ஆள் தேவை உடனடியாக விண்ணப்பிக்கவும்.

**தர்மகர்த்தா சபை**
(C628)


## வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்கல்
## ISSUE OF FITNESS CERTIFICATES

வாகனங்களைப் பரிசோதித்து தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்கு அதிகாரபூர்வமாக நாங்கள் நியமிக்கப்பட்டுள்ளோம். வருடாந்த அனுமதிப் பத்திரம் பெறும் பொருட்டு தகுதிச்சான்றிதழ் பெறுவதற்கு அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்க.

**டைனமிக் என்ஜினியரிங் லிமிட்டட்**
476, பிரதான வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(சென்ற். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)
[A 221]

## G.C.E.(O.Level) English & N. C. E.

புதிய பிரிவு ஆரம்பம் 15-2-86காலை 8மணிக்கு
(Weekends only)

காலம் 10 மாதங்கள்
முழுக்கட்டணம் 250/-

ஆசிரியர்: பிரபல ஆங்கில விரிவுரையாளர்
**கந்தையா நவரேந்திரன்**

வகுப்புக்கள் பாதுகாப்பான இடத்தில் நடைபெறும்.

**CANTABIA INSTITUTE,**
(Shoot of Oxonia, Colombo)
21. Main Street, Jaffna.
T'Phone 24201 A 220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR


## இராணுவத் தாக்குதலுக்கு இலக்கான முழுக் குடும்பமும் முகாமில்!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பாரதி வீதியில் வசிக்கும் ஒருவரையும், அவரது மனைவி, தாய், சகோதரியையும் ஆயுதப் படையினர் அவர்களுடைய வீட்டில் வைத்துக் கடுமையாகத் தாக்கியதுடன் அவர்களைக் கைதுசெய்துமுகாமுக்கு கொண்டு சென்றுள்ளனர் அவர்கள் வசித்த வீடும் பலத்த சேதத்திற்குள்ளானது.

நேற்றுக் காலை இச் சம்பவம் இடம்பெற்றது.

வாழைச்சேனை காகிதக்கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் அருளானந்தம் என்பவருக்கும் அவரது குடும்பத்தினருக்குமே இக்கதி நேர்ந்தது.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் வைத்து பலர் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். இவர்களுள் மூவரைத் தவிர மற்றவர்கள் விடுவிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்தேமேற்குறிப்பிட்ட வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் அங்கிருந்த வயோதிப மாதைத் தவிர மற்றப்பெண்கள் கைதுசெய்யப்பட்டனராம், (மா)

## பீரங்கித் தாக்குதல்களினுல் குறைப்பிரசவம்

[புலோலி]

பருத்தித்துறையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பீரங்கித்தாக்குதலினுல் ஏற்பட்ட அதிர்ச்சியினுலும், பயத்தினுலும் புலோலி மேற்கைச் சேர்ந்த இளம் கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு இரவு நேரத்தில் குறைப் பிரசவம் ஏற்பட்டது.

புலோலிமேற்கு கதிரவேற்பிள்ளை வீதியைச் சேர்ந்த திருமதி சின்னராஜா ஜெயலட்சுமி (வயது 26] என்பவருக்கே குறைப் பிரசவம் ஏற்பட்டது. இப்பெண் 9 மாதக் கர்ப்பிணியாக இருந்ததாகவும், சம்பவ தினம் பருத்தித்துறையில் ஏற்பட்ட திடீர் பீரங்கித் தாக்குதல்களினுல் ஏற்பட்ட அதிர்ச்சியினுலும் பயத்தினுலுமே குறைப்பிரசவம் ஏற்பட்டது.

## கொள்ளை

(யாழ்ப்பாணம்)

தென்பகுதி சவர்க்காரப் பெட்டி ஒன்று நேற்றுக்காலை யாழ். பஸ் நிலையத்திற்கு எதிரில் கொள்ளையடிக்கப்பட்டது.

வர்த்த நிலைய மொன்றில் ஒருவர் சவர்க்காரப்பெட்டியை வாங்கி சைக்கிளில் வைத்துவிட்டு, பக்கத்துக் கடையில் கிழங்கு வாங்கச்சென்றபோது இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது. (க)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி முத்துக்குமாரு

சுதுமலை தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி முத்துக்குமாரு காலமானுர். இவர் காலஞ்சென்ற கரம் பொன் கண்மணி (தங்கம்) யின் அன்புக்கணவரும்; லீலாவதி (மணி), சரவணபவான் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற பூங்காவனம், காலஞ்சென்ற கனகரட்னம், காலஞ்சென்ற பொன்னுத்துரை, திரு. விளங்கம், சுப்பையா, காலஞ்சென்ற தில்லையம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று [09-02-86) ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணியளவில் அன்னுரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தாவடிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(C 675) தகவல்: ஆனந்தன்.

### நாகமுத்து செல்லத்துரை

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் நாகமுத்து செல்லத்துரை (றிபேக் கல்லூரி, சாவகச்சேரி) காலமாகிவிட்டார். இவர் சௌபாக்கியத்தின் அன்புக்கணவரும், (இளைப்பாறிய ஆசிரியை சோமாஸ்கந்தக்கல்லூரி, புத்தூர்), செல்வஜோதியின் (செல்வி) அன்புத்தந்தையாரும், காலஞ்சென்ற இராசா, இராசம்மா, பொன்னம்மா, செல்லம்மா, யோக்கியம், பரஞ்சோதி என்பவர்களின் அன்புச் சகோதரரும், செலவரத்தினத்தின் அன்பு மைத்துனருமாவர். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று 9-02-86) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியளவில் அன்னுரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சௌபாக்கியம் செல்லத்துரை
சுதுமலை கிழக்கு, மானிப்பாய். [C-677]

## இராணுவம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள். அதேசமயம் வயலில் நெல் அறுவடைசெய்த வயோதிபர் ஒருவரும் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானுர்.

நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

மன்னுர் ரம்பைக்குளம் வீதியில் உள்ள வீடொன்றில் வைத்து கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவர், முகாமுக்குக் கொண்டு செல்லப்படவில்லையென்றும், அவரின் நிலைபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. (மா)

## கணேசுவின். .

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

பி.யும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினருமான திரு பூ.கணேசலிங்கத்தின் பூதவுடல் இன்று மட்டக்களப்பு கல்லாறு சன சமூக நிலையத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை திங்களன்று பிற்பகல் 3-00மணிக்கு மட்டக்களப்பு கல்வியங்காடு மயானத்தில் ஈமக்கிரியைகள் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## மறியல் போராட்டம்!

[யாழ்ப்பாணம்]

பெண்களைக்கடத்தும் மிலேச்சத்தனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும்முகமாகவும், இக்கடத்தலுக்கு உதவுபவர்களை கண்டிக்கும்முகமாகவும் நாளை திங்கட்கிழமை சாத்வீகமான முறையில் பூரணஹர்த்தாலும் மறியல்போராட்டமும் நடாத்தப்போவதாக யாழ். வர்த்தகர் சங்கம் தெரிவித்துள்ளது.

''விடுதலைப் பயணத்தின் ஒரு தடைக்கல்லாக இப்பெண் கடத்தல் சம்பவம் கருதப்படவேண்டும் என்றும் மனிதாபிமானமற்ற இச்செயலைக் கண்டிப்பதில் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் யாழ். வர்த்தகசங்கத் தலைவர் வேண்டுகோள்விடுத்துள்ளார். (மா)

## 'கடல் இளைஞர்' விடுதலை

[யாழ்ப்பாணம்]

கடலில் வைத்து கைதுசெய்யப்பட்ட 18 தமிழ் இளைஞர்கள் விசாரணையின்பின் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் கடந்த வருடப் டிசம்பர் இறுதிப் பகுதியில் கடலில் வைத்துக்கைது செய்யப்பட்டனர்.

## கடற்கரையில் சுடப்பட்டார்!

[யாழ்ப்பாணம்]

கடற்கரையில் இருந்த போது கடற்படையினர் சுட்டதால் காயம் ஏற்பட்டது என்று யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்ட தலைமன்னுரைச் சேர்ந்த கபிரியல் அந்தனிபவுலின் (35வயது) கூறினுர்.

இவருக்கு அடி வயிற்றில் புகுந்த சன்னம், பின் புறத்தால் வெளியேறியுள்ளது.

5 பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் தொழிலுக்குச் சென்று வந்தபின் கடற்கரையில் இருந்தபோது சுடப்பட்டதாகவும் அவ்விடத்தில்நின்ற மற்றத் தொழிலாளர்கள் ஓடிவிட்டதாகவும் கூறினுர். (க)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box. 49, Eelanadu Telephone 22389, 24126.

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கந்தையா

(ஸ்ரீகௌரி பாலாசுவாமியார்)

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் தர்மகர்த்தா தலைவர் வைத்திலிங்கம்-கந்தையா (ஸ்ரீ கௌரி பாலா சுவாமியார்) 7-02-86 வெள்ளிக்கிழமை சாலமாகிவிட்டார். அவருடைய ஈமக்கிரியைகள் 9-02-86 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவருடைய இல்லத்தில் நடைபெற்று அடக்கம்செய்யப்படும். அன்பர்கள், உற்ருர், உறவினர்கள் கிரியைக் கடமைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேம்.

(C 651) ஆலய தர்மகர்த்தா சபை

### குருநாதர் கணேசசுந்தரம்

குப்பிழான் குருநாதர் தம்பதிகளின் ஏகபுதல்வனும், வசந்தராவின் அன்புக் கணவரும், சுந்தரராணியின் அருமைத் தந்தையுமான கணேசசுந்தரம் அமரராகி விட்டார். இவர் உரும்பராய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், யாழ். மாவட்ட முன்னுள் உதைபந்தாட்ட வீரரும், குப்பிழான் ப. நோ. கூட்டுறவுச்சங்கத்தின் முன்னுள் தலைவருமாவார். அன்னுரின் இறுதிச் சடங்குகள் நேற்று (8-02-86) சனிக்கிழமை மாலை குப்பிழானில் நடைபெற்றது;

தகவல்: திரு. ந. இரத்தினசிங்கம் (ஆசிரியர்)

(C 658)

### டாக்டர் (திருமதி) பாக்கியம் ரெட்ஞனந்தம்

டாக்டர் (திருமதி) பாக்கியம் ரெட்ஞனந்தம் காலமானுர். இவர் திரு.ஜே கே ரெட்ஞனந்தனின் (இளைப்பாறிய உதவி அத்தியட்சகர், இலங்கை புகையிரத சேவை) அன்பு மனைவியும், ஆனந்தராஜ் (கனடா), திருமதி சோதா வேதநாயகம் (ஜிம்பாப்வே), கருணராஜ் (U. K.), செல்வராஜ் (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி திரவியம் சீவரத்தினத்தின் சகோதரியுமாவார். அன்னுரின் நல்லடக்க ஆராதனை இணுவில் மக்லியட் பருத்துவமனையில் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு நடைபெற்று சுண்டுக்குளி பரியோவான் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். (C 659)

### திரு. மருதப்பு நடராசா

(ஓய்வு பெற்ற அரசாங்க இலிகிதர்)

சங்கானை 7 ம் கட்டையைச் சேர்ந்த திரு. மருதப்பு நடராசா காலமாகி விட்டார். அன்னுர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், செல்வமலர், மகேந்திரன் (நெல் சந்தைப்படுத்தும் சபை, கண்டாவளை), ஆகியோரின் அன்புத் தகப்பனுரும், ஞானகணேசன் (உள்ளகக் கணக்காய்வுக் கிளை விற்பனைத் திணைக்களம்), கமலாம்பாள் (ஆசிரியை கனிஷ்ட மகா வித்தியாலயம், கிளிநொச்சி) ஆகியோரின் மாமனுரும், அபிராமி, திருவருங்கன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 9- 2- 86 (இன்று)ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 00 மணிக்கு சங்கானை இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியை கரைச்சி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:

(C 667) க. மகேந்திரன் (மகன்)

### மைதிலி (வான்மதி) ஸ்ரீகாந்தா

மைதிலி - வான்மதி 1-2-86 ல் பெங்களூரில் காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற ப. ஸ்ரீகாந்தா-விமலா தம்பதிகளின் இளைய மகளும், மகிலா, குமரேசன், பிரமிளா ஆகியோரின் அன்புச் சகோதரியும், றஞ்ஜன் நவரட்ணம் (உரிமையாளர், சிங்கப்பூர் பாமசி), சிவானந்தன் (Holiday Inn, Kuwait) ஆகியோரின் மைத்துனியும், சஞ்ஜெயா, வைஷகி, ஷைத்திரா ஆகியோரின் அன்புச் சித்தியும், அமரர் டாக்டர் வீ. க. பரமநாயகம் அவர்களின் பேத்தியும் ஆவார். இவர் வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், சென்னை (S. T. E. T.) கல்லூரி B. Com பட்டதாரியும், கொழும்பு [AITKENSPENCE] ஸ்தாபனத்தில் தொழில் புரிந்தவரும், ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 5-2-86 ல் பெங்களூரில் நடைபெற்றது. இதனை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றேம்.

தகவல் தருபவர்: றஞ்ஜன் நவரட்ணம்.

22 அம்மன் வீதி, கந்தர்மடம்.
8-2-1986. [C-670]

### முன்னுள் 'சேமன்' சின்னத்துரை -பளை



பளை, வண்ணுங்கேணியைச் சேர்ந்த முன்னுள் கிராமசபைத் தலைவரும், பச்சிலைப்பள்ளி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத் தலைவரும், சமாதான நீதவானுமாகிய திரு. சண்முகம் சின்னத்துரை அவர்கள் காலமானுர். அன்னுரின் ஈமக்கிரியைகள் [09-02 86] இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00மணிக்கு பளையில் நடைபெறும்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[C674]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org